Registered as a News Paper

மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 14
குவிப்பு - 01
பக்கங்கள்- 14
விலை ரூபா 30.00
ஜனவரி 2011
(ISSN 1800-2641)

"Registered in the Department of Posts of Sri Lanka under No. "QD/109/News/2011"

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ Fax No - 023-2251161, E. Mail : sdmlogu@gmail.com, benoalexander@yahoo.com

அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் முன்னூறாவது விண்ணகப் பிறப்பு விழா

அருளாளர் யோசப்வாஸ் தேசிய மன்ற மன்னார் மறை மாவட்ட இணைப்பாளர் அருட்தந்தை ம. க. அருள்பிரகாசம் அவர்களின் விழாச்செய்தி

மன்னார் மறைசாட்சிகள் மண்ணில் (சவுத்பார்) கால்பதித்து, மாதோட்டத்தில் பறப்பாங்கண்டலை (பெரிய கோவில்) வட பிரதேசத்துக்குரிய பணிமையமாகக் கொண்டு, மலைநாட்டில் கண்டியையும், தெற்கில் புத்தளத்தையும் பணிமையமாகக் கொண்டு இலங்கையில் தமிழ், சிங்களப் பிரதேசங்களில் பட்டுப் போயிருந்த கத்தோலிக்க விசுவாசத்தை மீண்டும் துளிர்விடச் செய்து பெரும் விருட்சமாக வளர உரமிட்டவர்தான், நமது இலங்கையின் திருத்தூதர் என அழைக்கப்படும் அருளாளர் யோசப்வாஸ் அடிகளாராவார். இவர் வாஞ்சையோடும், சோர்வுறா நிலையிலும் ஆற்றிய அளப்பரிய பணியின் தார்ப்பரியத்தை நாம் எல்லோரும் அறிந்து ஒழுகுவது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்க விசுவாசத்தைப் பெற்று சாட்சிய வாழ்வு வாழ்ந்த எமது முன்னோர்கள் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் அதை முற்றுமுழுதாக இழக்க நேர்ந்தது. ஒல்லாந்த ஆட்சியாளர்கள் இலங்கை மண்ணில் கத்தோலிக்க மறையை மறைக்க கடும்முயற்சி எடுத்து செயற்பட்டனர். பல கத்தோலிக்க ஆலயங்களையும் வழிபாட்டிடங்களையும் அழித்ததுடன், சில ஆலயங்களை தமக்குரிய ஆலயங்களாக மாற்றினர். கத்தோலிக்க குருக்களை கொன்றும், சிலரை நாடுகடத்தியும், சிறையில் அடைத்தும் கொடுமைப்படுத்தினர். கத்தோலிக்க குருக்கள் எவரும் நுழையக் கூடாதென இலங்கைக் கடற்பரப்பைச் சுற்றி காவலரண் அமைத்து கடுங்காவல் காத்தனர். கத்தோலிக்க குருக்களுக்கு புகலிடம் கொடுப்பவர்களுக்கு மரணதண்டனை என மக்கள் அச்சுறுத்தப்பட்டிருந்தனர். இப்பயங்கரமான சூழ்நிலையில் பாப்பரசரோ, ஆயர்களோ எவரையும் கட்டாயப்படுத்தி அனுப்ப முடியாத இக்கட்டான காலகட்டத்தில் பரிசுத்த கன்னிமரியாளுக்கு தன்னையே அடிமையாக அர்ப்பணித்திருந்த அருளாளர் அவர்கள் தனது உதவியாள் யோணுடன் கூலிவேலை செய்வோன் போலவும் இரப்போன் போலவும் நமது நாட்டிற்குள் நுழைந்தார்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

கிறிஸ்து அருளும் அமைதியை அகவயப்படுத்தி செயற்படுவோரே நிடித்து நிலைக்கும் சமாதானத்தின் சிற்பிகள்

மன்னார் ஆயரின் 2011 புத்தாண்டுச் செய்தி

புதியதோர் ஆண்டு மலர்ந்துள்ளது. மலர்ந்துள்ள 2011ம் ஆண்டுதனை மகிழ்ச்சியோடு வரவேற்போம். நல்ல மாற்றங்கள், வளமை மிகு ஏற்றங்கள் சமத்துவ தோற்றங்களை நம் நாடு நாடட்டும். சாவுக்கலாசாரம் முற்றாக சயனித்துப்போய் உண்மையிலும் நீதியிலும் சமதர்மத்திலும் சகோதரத்துவத்திலும் கட்டப்படும் நிரந்தர அமைதியை அனுபவிக்கும் தேசமாக எம் தேசம் உருமாற ஆக்கபூர்வமான முயற்சிகளை அனைத்து நல்லுள்ளங்களும் இப்புதிய ஆண்டில் முன்னெடுக்கட்டும்.

புத்தாண்டின் முதல் நாள் உலக அமைதியின் தினமாக கடந்த 44 ஆண்டுகளாக நாம் கடைப்பிடித்து வருகின்றோம். "அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்" (மத். 5:9) என விவிலியம் சொல்கின்றது. இயேசுக்கிறிஸ்துவின் பிறப்புச்செய்தியாக, "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சியும் பூவுலகிலே அவருக்கு உகந்தோருக்கு அமைதியும் உண்டாகுக" (லூக்.2:13-14) என்ற அமைதியின் செய்தியே அருளப்பட்டது. அதே போல் இயேசுவின் உயிர்ப்புச் செய்தியாக, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" (யோவா.20:21) என்னும் அமைதியின் வாழ்த்தே அறிவிக்கப்பட்டது. இந்த அமைதியை அக அமைதியாகவும் புறத்தே நிலவும் அமைதியாகவும் அடையாளப்படுத்தி நாம் காணலாம். "அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன் என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றதல்ல" (யோவா. 14:27)

(தொடர்ச்சி 2ம் பக்கம்)



வாசக நேயர்களுக்கு
இனிய தைப் பொங்கல் வாழ்த்துக்கள்

அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் 300வது விண்ணகப் பிறப்பின் தேசிய மட்ட விழா

பங்கேற்க உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கும் ஆயர் வியானி பெர்ணான்டோ

தேசிய, அருளாளர் யோசப்வாஸ் செயலக தலைவராகிய கண்டி மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு வியானி பெர்ணான்டோ ஆண்டகை அவர்கள் இலங்கை திருத்தூதர் அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் 300வது விண்ணகப் பிறப்பு தேசிய மட்ட விழாவில் பங்கேற்ற அனைவரையும் அழைத்துநிற்கின்றார். மேற்படி தேசிய மட்டநிகழ்வானது எதிர்வரும் 15 ஜனவரி 2011 அன்று காலை 10 மணிக்கு ராகம, தேவத்தை இலங்கை மாதா தேசிய பேராலயத்தில் இடம் பெறும். அன்றைய தினம் நன்றித்திருப்பலி கர்தினால் அதிமேதகு மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையிலும் இலங்கையின் திருத்தந்தையின் பிரதிநிதி, ஆயர்கள் மற்றும் இலங்கையின் ஏல்லா பகுதிகளையும் சேர்ந்த குருக்களின் இணைவிலும் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும். (தொடர்ச்சி 7ம் பக்கம்)

அமரர் அருட்பணி. மேரி பஸ்ரியன் அடிகளாரின் 26வது நினைவு தினம்

1985ம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் சுட்டுப்-படுகொலை செய்யப்பட்ட அன்றைய வங்காலை பங்கின் பங்குத்தந்தை அமரர் அருட்பணி. மேரி பஸ்ரியன் அடிகளாரின் 26வது ஆண்டு நினைவு இரங்கல் திருப்-பலியும் அஞ்சலி கூட்டமும் இம்மாதம் 06. 01. 2011 அன்று வங்காலையில் உணர்வு பூர்வமாக நினைவு கூரப்-பட்டது.(தொடர்ச்சி 7ம் பக்கம்)

குருத்துவ திருநிலைப்பாடு

மன்னார் மறைமாவட்டத்திலிருந்து முதல் பிரான்சிஸ்கன் குரு அருட்பணி அ.லின்ரன் லெம்பேட் OFM

அருட்பணி. அ. செபஸ்ரியான் லின்ரன் லெம்பேட் OFM அவர்கள் கடந்த 2010 மார்கழி மாதம் 09ம் திகதி வியாழக்கிழமை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களினால் பணிக்குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அதே நாள் அருட்சகோதரர். அந்தோனிப்பிள்ளை எட்வேட் ஜெயபாலன் OFM திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்டார். இவர்கள் இருவரும் பிரான்சிஸ்கன் சிறிய துறவிகள் சபையின் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த முதற்குருவும் திருத்தொண்டருமாய் விளங்குகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் பணி சிறக்க மன்னா நல்வாழ்த்துக்கள் கூறுகின்றது.

(அருட்பணியாளர் பற்றிய விரிவான விளக்கத்தை 3ம் பக்கத்தில் காணவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

மனப்பொழிவு

ஆசிரியர் குழு பகர்வு

பொங்கிப் பெருகிய இறையருளே அருளாளர் யோசப்வாஸ்!

உலகத்தமிழர்கள் உழவுக்கும் நெசவுக்கும் முழு உழைப்பிற்கும் வந்தனை செய்து தைத்திருநாள், நம் தமிழர் திரு நாளாம் பொங்கலை பெருமிதத்தோடும் உள்ளத்து உவகையோடும் கொண்டாடி மகிழும் தினத்திலே இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் நல்லிருப்பிற்கான காலக்கனிவாய் பொங்கிப் பெருகிய கடவுள் அருளாம் அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் விண்ணகப் பிறப்பின் 300வது ஆண்டு நிறைவை இலங்கைத் தாய்த்திருச்சபை தேசிய நிகழ்வாய் கொண்டாடி மகிழ்வது காலப் பொருத்தமும் சாலச் சிறந்ததுமே. வரலாற்றுப் பின்னோட்டத்தில் இலங்கைத்தீவு பல காலனித்துவ ஆட்சிக்குள் சிக்குண்டு மீண்டு வந்துள்ளது. கத்தோலிக்க திருமறையின் விசுவாச வாழ்வின் வேர்களைந்து கத்தோலிக்கத்தை காவு கொள்ளும் படலத்தை ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இலங்கைத்திருச்சபை சந்தித்தது. இக்கலிகால கௌவுதலின் இரும்புகரம் தகர்க்க தக்ககாலத்தில் எம்மண்ணுக்கு கிறிஸ்துவின் சுடர் வீசும் மாணிக்கமாய், பரிசுத்த குருவாய் கடவுளால் அனுப்பப்பட்ட அருளாளர் எமக்கெல்லாம் அறுசுவை பாற்சோறமுதே. அடக்கி ஆளுவோரின் கழுகுக்கண்களில் மண்தூவி மண் வாசனையோடு இணைந்து மாறுவேடம் பூண்டு இரவலராய் இரவு பகலாய் இறைபணியாற்றிய இவ்வினியவரின் மறைப்பணி அளவிட முடியாததாய், அதிசயமானதாய், ஆச்சரியம் தருவதாய் அமைந்துள்ளது. அருளாளர் யோசப்வாஸ் இறைபராமரிப்பில் தளரா நம்பிக்கை கொண்டவர்; நற்கருணையின் மனிதர்; பண்பாட்டு மயமாக்கலின் முன்னோடி; உரையாடலினதும் ஒன்றிப்பினதும் மனிதர்; இணையற்ற ஆர்வம் கொண்ட உண்மை ஆயர்; இலங்கைத் திருச்சபையின் இரண்டாவது ஸ்தாபகர்; சமாதானத்தினதும் மீள் இணக்கப்பாட்டினதும் மனிதர் என்று இவரது வாழ்வினதும் பணியினதும் பதிவுகளின் அடிப்படையில் மதிப்பிட்டு இவருக்கு புகழாரம் சூட்டியுள்ளது. இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் மேய்ப்புப்பணி திருமடல். கடல் கடந்து, காடு கடந்து, கரடு முரடான மலைப்பாதை கடந்து கால் நடந்து ஆத்மீக வாஞ்சையோடு, அயராது, அஞ்சாது அரும்பணியாற்றிய எம் இலங்கைத் திருத்தூதர் அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் 300வது ஆண்டு விண்ணகப்பிறப்பை நினைத்து மகிழ்ந்து இறைவனுக்கு நன்றி கூறி விழாக்கொண்டாடி இவ்வருளாளர் புனிதர் நிலைக்கு திருப்பீடத்தில் உயர்த்தப்பட மன்றாடி செபிக்கும் அதேவேளையில் எமது கிறிஸ்தவ வாழ்வை கிறிஸ்துவுக்கு சான்று பகரும் வாழ்வாய் கட்டியெழுப்புவோம். எல்லாருமே இளமை உள்ளம் படைத்தவர்களாய் "இளைஞனே கிறிஸ்துவின் சாட்சியாய் விழித்தெழு" என்னும் இவ்வாண்டின் எம் மறைமாவட்ட மேய்ப்புப்பணிக் கருப்பொருளை கருத்திலிருத்தி செயலாற்றுவோம். "உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க" (மத் 5:16) என நம்மை அழைத்து நிற்கும் நற்செய்திவழி குன்றின் மீதிட்ட ஒளியாக சுடர்வீசுவதே அருளாளர் யோசப்வாஸ் விழாவின் முத்தாப்பாய் அமையும்.

தை பிறக்கிறது; " தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற சொல்லாடலை ஆண்டாண்டு கேட்டு வரும் இத்தேசத்தில் உண்மை, நீதி, நேர்மை, சமாதானத்தில் கனியும் அமைதி இன்னும் மலரவில்லை; சமாதான வழி திறக்கவில்லை. வாழ்க்கைக்கான போராட்டம் வலிந்து குரல்வளை நசுக்கி அடக்கப்பட்டு இன்று வாழ்க்கையே போராட்டமாக இருக்கும் நிலையில் தமிழர் நாம் மீண்டும் பொங்கலிடுகிறோம். சமாதானத்திற்கும் மீளிணக்கத்திற்குமான செயற்பாடுகள் அங்கொன்றும் இங்கொன்றும் முன்னெடுக்கப்படுகிறதேயொழிய முழுவீச்சுடன் அதன் போக்கு இல்லை என்பதே உண்மை. கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நீடித்த சமாதானம் மலர, அமைதி வழி பிறக்க ஆக்கபூர்வமான செயற்பாடுகளை அனைத்து நல்லுள்ளங்களும் முன்னெடுக்காவிடில் உலையிடப்படும் அவநம்பிக்கைகள், அடக்குமுறைகள், அடிமைத்தனங்கள், அவமானங்கள் மீண்டும் பொங்கு தமிழாய் பொங்கி பிரளாகிக்கும் என்பதே எதிர்வு கூறு. இலங்கை தேசத்தில் கத்தோலிக்க திருமறைச் சுடரை அணையாது காக்க அயராது உழைத்த அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரைப் போல ஈழத்தமிழர், உலகத்தமிழர் நாமெல்லோரும் செம்மொழி தகமையுடை எம் மொழியை, எம் கலை கலாசாரத்தை, பண்பாட்டு விழுமியங்களை, எம் மண்ணை அதன் மாண்பை நிலைநிறுத்த கரம் கோர்த்து சேர்ந்து செயற்பட முன்வருவோமாக! தமிழ் வளர்த்து மறை வளர்க்கவும், மறை வளர்த்து தமிழ் வளர்க்கவும் பல தனிநாயகம் அடிகள் நம் மத்தியில் மலரட்டும். திருமறையும் தீந்தமிழும் நம் ஈழதேசத்தில் இறையருளால் பொங்கிப் பெருகியோடும் வற்றாத நதியாகட்டும்.

வாசகர் எண்ணங்கள்

வாழ்க மன்னா

மாதம் ஒரு தடவை எம் கரம் தவழும் "மன்னா"
நீ வானம் தொட வேண்டுமென்று
அம்மா கூட சொன்னா

வண்ணப் புகைப்படத்துடன் வாசம் வீசும் "மன்னா"
உன் வாசகன் ஆகிவிட்டான்
எங்கள் வீட்டு அண்ணா

என் அக்காள் மகளும்
உன்னைத் தூக்கி கொஞ்சுகிறாள்
மன்னாவை தா மாமா என்று
என்னிடம் வந்து கெஞ்சுகிறாள்

மன்னார் மண்ணின் ராஜா
அழகாய் மலர்ந்த ரோஜா
எல்லோர் மனதிலும் நிறைந்தாய் "மன்னா"
மாதம் ஒருமுறை மலர்ந்து
பலபக்கம் நீ பறந்து தருகிறாய் நீ விருந்து
பருகுகிறோம் "மன்னா" அருமருந்து

விவிலியக் கதைகளும் வியத்தகு தகவல்களும்
நீத்தார் நினைவுகளும் நீங்காத கனவுகளும்
குருத்துவப் பொழிவும் குன்றாத எழிலும்
கொண்ட எங்கள் "மன்னா" நீ மென்மேலும் வளர
வாழ்த்துவேன் வாழ்க "மன்னா"

வே.கண்ணன், மல்லாவி.

மன்னாரில் உதித்த மறக்கமுடியாத மன்னாவே!

உன் வருகைதான் என்ன! மாதாந்த சம்பளம் பிந்தினாலும் மன்னா ஒழுங்காக வந்து விழுந்து விடும். புரட்டிப்பார்த்தால் உன் வளர்ச்சிதான் என்ன!. நாளாந்தம் முன்னேறிக் கொண்டு போவதற்கான பாதையை காட்டுகிறது. நவம்பர் மாத நீத்தாரை நினைகூரும் ஆசிரியர் பகிர்வும் உத்தரிக்கும் ஆத்துமாக்களுக்கு உண்மையான அஞ்சலி எமது செபங்களும் பரித்தியாகங்களுமே என்ற ஆக்கமும் சிந்திக்க தூண்டியது "புனிதர்களின் பாதையிலே அமரத்துவமான நம் குருக்கள்" இப்படியான மனதை உருக்கும் செய்திகளை எங்களுக்கு உடனுக்குடன் தரும் மன்னாவே நீ என்றும் வாழ்க. உமது புகழ் தொடரட்டும்.

க.போல் சேவியர், டென்மார்க்

1ம் பக்க தொடர்ச்சி.....

மன்னார் ஆயரின் 2011 .....

என இயேசு தரும் அமைதி, அவர் நமக்கு அருளும் அக அமைதியாகும். அக அமைதி எனும் ஆன்மீக செல்வத்தை கொண்டிராதோர், புறத்தே அமைதியை ஏற்படுத்துவதென்பது எட்டாக்கனியாகவே இருக்கும். ஏனென்றால் உலகின் அமைதியின்மைக்குக் காரணம் மனித உள்ளத்தின் அமைதியின்மையேயாகும். இறைமகன் கிறிஸ்து தந்த நற்செய்தியின் விழுமியங்களை வாழ்வாக்கும் எமக்கும் பூவுலகிலே அவருக்கு உகந்தோரான அனைவருக்கும் இறைமகன் கிறிஸ்து இவ் அக அமைதியை அருளுகின்றார். இவ் அமைதியை அகவயப்படுத்திக் கொள்பவர்கள் மட்டும்தான் அமைதியின் கருவிகளாகத் திகழ முடியும். இவர்களால்தான் மாயையில் சிக்கி மயங்கி விடாமல் உண்மைக்குச் சாட்சியம் பகர்பவர்களாக, நீதிக்காக குரல் கொடுப்பவர்களாக, சுயநலத்தை மேற்கொண்டு சமதர்மத்துக்கும், சகோதரத்துவத்திற்கும், மனித உரிமைகள், மாண்பிற்கும் உயிர் கொடுக்க விழிப்புடனும், வீரத்துடனும் சாத்வீகப்பாதையில் பயணிப்பவர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள்தான் நீடித்து நிலைக்கும் சமாதானத்தின் சிற்பிகள்.

எமது இலங்கைத் தேசத்திலே கடந்த 30 ஆண்டுகளாகவும், அதைத்தொடர்ந்த இறுதி ஒன்றரை வருடங்களுக்கு மேலாகவும் இடம்பெற்ற யுத்த அழிவுகள், கொடூர உயிரிழப்புக்கள் நிறுத்தப்பட்டுள்ள நிலை வரவேற்கத்தக்கதும், மதிக்கத்தக்கதுமாகும். எனினும் புரையோடிப்போயுள்ள முரண்பாடுகளுக்கு மருந்திடும் செயல்முறைகள் இன்னும் முன்னெடுக்கப்படாதிருப்பது வருத்தத்துக்குரியது. இந்த அருமையான நாட்டில் பிரச்சினை ஏற்பட்டதற்காக அடிப்படைக் காரணங்கள் தீர்க்கப்படாமல் இன்றும் இழுத்தடிக்கப்பட்டே வருகின்றன. இந்நிலையில் வடகிழக்கிலே ஒருசிலரின் தனி அரசியற் தலையிடுகள் சிறப்பாக சில மாவட்டங்களிலே தலைவிரித்துத் தாண்டவம் ஆடி சிவில் நிர்வாகத்தைத் தம்வசப்படுத்தி சமூகங்களைப் பிளவு போடுகின்ற போக்கையும் நாம் காணுகின்றோம். இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதான மனித பண்பற்ற தீய போக்காகும். இந்த நிலைகளை நீடிக்க விடாது புலர்ந்திருக்கும் இப்புதிய ஆண்டில் நீதியுடன்கூடிய நீடித்த, நிலையான அமைதியை இந்நாட்டின் ஒவ்வொரு பிரசையும் அனுபவிக்க அனைத்து ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை அரசாங்கமும், அரசியற் கட்சிகளும், அனைத்து அமைப்புக்களும், மத தலைவர்களும், மக்கள் அனைவரும் முன்னெடுக்க அமைதி அருளும் ஆண்டவரின் பெயரால் கேட்டுக் கொள்கிறேன்.

நீதியில் கனியும் அமைதியும் - மானிட
உரிமையில் பிறக்கும் நேயத்தையும்
அநீதிகள் ஒழிந்த வாழ்வையும் - நம்
தேசம் கண்டு மகிழ்வதாக.

உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களும்
இறையாசீரும் உரித்தாகுக!

"மன்னாவை வாழ்த்துகிறேன்"

"அலையென எழுந்து
ஆர்ப்பரித்திடும் உணர்வுகளை
இலையினில் மறைந்த
இதயத்தின் ஆற்றல்களை
கலையினில் மகிழ்ந்திடும்
கனவுகளை நனவாக்கிடும்
நிலையில் உயர்ந்திட
நின் உள்ளம் ஏணியாய்
மறையினைப் பரப்பிடும்
மன்னாவை வாழ்த்துகின்றேன்"

வி. வேஜின் டிலக்சனா, சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோவில், மடு.

மன்னாவிற்கு வாழ்த்து

மன்னார் மண்ணிலே - மன்னா
எனும் நாமம் கொண்டு,
கற்பனைக்கும் எட்டாத
காலந்தொட்டுக் கடல் சூழும்
உலகாண்ட தமிழை
மொழியாகக் கொண்டு
பொற்பமைந்த இனிய நிலாக்
கலையை, வடிவாகக் கொண்டு
உலா வரும் " மன்னா! - உன்
புகழ்பாட, வரிகளும் மிஞ்சாது
விஞ்சி நிற்கின்றேன்.
அந்தளவிற்கு உனக்குள்ளே
நிறைவானவற்றை அள்ளித் தருகின்றாய்
உன் மாதாந்த வரவிற்காய்
காத்திருக்கின்றேன் - உன்னை
என்கரம் பற்ற....

யேசுதாசன் மேரி கீர்த்தனா, பம்பைமடு, வவுனியா

அன்பின் தோழன் மன்னாவுக்கு

எனக்கு மிகவும் விருப்பமானவன் நீ. மன்னாவே! மாதத்திற்கொரு முறை நீ சுமந்துவரும் அத்தனை பல்சுவை ஆக்கங்களும் மிகவும் சிறந்தவை. அதில் உங்களுக்கு தெரியுமா? என்ற பகுதி என் மனதை கவர்ந்து விட்டது. தேடலே இல்லாத எனக்குப் பல தேடல்களை என் கரம் தந்த உனக்கு கோடி நன்றிகள். உன்பணி மேலும் சிறக்க என் வாழ்த்துக்கள்!

எஸ். வினோதினி. நறுவிலிக்குளம், வங்காலை.

இளைஞனே!

இயேசு உன்னை அழைக்கின்றார்.....

அன்பு நிறை ஆண்டவனின் அழகு நிறை இல்லம் துறந்து, ஆடி அடங்கும் வாழ்க்கைக்குள், ஆனந்தப் புதையல் தேடி, உலகினில் அலைகின்ற இளைஞனே! உன்னையோர் இறைவனின் வீரனாக்க, மனிதருள் மாணிக்கமாக்க, அழைக்கின்றது செபமாலை தாசர் துறவறசபை.....

அன்பான இளைஞனே!

பிறப்புக்கும், இறப்புக்கும் இடையே நடக்கின்ற போராட்டமே உன்வாழ்க்கை! இல்லாதவன் தன்னிடம் இல்லாததையும், இருப்பவன் இன்னும் அதிகமாகவும் சேர்க்க விரும்பும் இக்காலத்தில் இறைவனின் இல்லத்தில் செல்வம் சேர்த்து அந்த அழியாத செல்வத்தை அனைவரோடும் பகிர்ந்து, காட்சித் தியான (Contemplative) குழு வாழ்வுக்கு செபமாலைத்தாசர் துறவறசபைவழியாய் அழைத்துநிற்கின்றார் ஆண்டவர்.

குறைவானதை நிறைவாக்கவும், நலிந்தவைக்கு உரமூட்டவும், பாவிகளுக்காகவும், எம் மக்கள் அனைவருக்காகவும், எல்லா மறைமாவட்டங்களுக்காகவும், எல்லா இறைபணியாளர்களுக்காவும் திருச்செபமாலையை ஏந்தி, நற்கருணை பிரசன்னத்தில் செபிக்க உன்னை அழைத்து நிற்கின்றாள் எம் செபமாலை அன்னை!

வா, வந்துபார், முடிவெடு, புறப்படு, செபமாலை என்னும் மாபெரும் இறை ஆயும் தாங்கி.....
குறையும் விசுவாசம் வளர,
அழியும் மனிதம் தடுக்க,
இயேசு ஆண்டவரை எங்கும் அரசராய் கொலுவேற்ற
புறப்பட்டு வா!

தொடர்புகளுக்கு :

The Vocation Promoter,
Arul Ashram
5, Temple Road, Jaffna.

அழைத்தல் ஊக்குனர்
அருள் ஆசிரமம்
5, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்

தொ.பே.இல. 0212223351, 0779532662

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் மறைமாவட்ட / பங்குத்தளச் செய்திகள்

வவுனியா பாவற்குளம் கணேஸ்வர மகாவித்தியாலயத்தில் ஒளி விழா

தகவல் : ஆசிரியர் – திரு. றஞ்சிதராஜ்,
பாவற்குளம் கணேஸ்வர மகாவித்தியாலயம், வவுனியா.

செட்டிகுளம் பங்கிற்குட்பட்ட பாவற்குளம் கணேஸ்வர மகாவித்தியாலயத்தில் ஒளி விழா நிகழ்வு 16.11.2010 அன்று நடைபெற்றது. பெரும்பான்மையாக இந்து மாணவர்களையும் மிக குறைவாகவே கிறிஸ்தவ மாணவர்களையும் கொண்டுள்ள இப்பாடசாலையில் இம்முறை ஒளிவிழா சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. பிரதமவிருந்தினராக வாழ்வுதய உதவி இயக்குனர் அருட்பணி. லக்ஸ்ரன் டி சில்வா அவர்களும் கௌரவ விருந்தினர்களாக வவுனியா தெற்கு வலய உதவிக்கல்வி பணிப்பாளர் திரு. சொலமோன் அவர்களும், கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் திரு.றெவல் அவர்களும் சிறப்பு விருந்தினராக செட்டிகுள உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. சத்தியசீலன் (அ.ம.தி) மற்றும் பாடசாலை அதிபரும், வாழ்வுதய கல்வி வெளிக்கள அலுவலர்

திரு.பொலின்ராஜா அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வின் போது விவிலிய வினாவிடைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வாழ்வுதயத்தினால் அன்பளிப்பு செய்யப்பட்ட பரிசில்கள் வழங்கப்பட்டன.

தமிழ் நேசன் அடிகளாருக்கு விருது வழங்கி கௌரவிப்பு

மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவரும் 'மன்னா' என்ற கத்தோலிக்க பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார், 'தமிழ்ச் செம்மொழி தூது' என்ற விருது பெற்று பொன்னாடை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். கடந்த மார்கழி மாதம் 8ஆம் திகதி நானாட்டான் உயர்நிலைப் பள்ளியின் அதிபர் அருட்சகோதரர் றெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்ற சிறப்பு நிகழ்வு ஒன்றிலேயே அடிகளாருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

மன்னார் தமிழ்ச் சங்கம் மூலம் மன்னாரில் வரலாற்றுப் பெருமைமிக்க தமிழ்ச் செம்மொழி விழாவை சிறப்பாக ஒழுங்கமைத்து நடாத்தியதைப் பாராட்டியும், அடிகளாரின் பரந்துபட்ட தமிழ்ப் பணிகளைப் பாராட்டியும் இவ்விருது வழங்கப்பட்டதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இவர் அண்மையில் இரண்டு இலக்கியச் சொற்பொழிவுகளை ஆற்றினார். 01.12.2010ல் யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் உள்ள தனிநாயகம் தமிழ் மன்றத்தின் பொது அமர்வில் "தமிழின் செம்மொழித் தகைமை" என்ற தலைப்பிலும் 06.12.2010ல் கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற முன்னாள் அரச அதிபர் கந்தையா பொன்னம்பலம் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்வில் "தமிழ் இலக்கியத்தில் மனிதநேயக் கூறுகள்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார். கடந்த ஒக்ரோபர் மாதம் இவர் மன்னாரில் தமிழ்ச் செம்மொழி விழாவை சிறப்பாக நடத்தியதைத் தொடர்ந்து தமிழ்மொழி தொடர்பான சொற்பொழிவுகளை நிகழ்த்த இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து இவருக்கு தொடந்து அழைப்புகள் விடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அன்பியப் பணியாளர்களுக்கான வருட இறுதி ஒன்றுகூடல்

தகவல் திரு. ஞானப்பிரகாசம்,
அன்பியத் தொடர்பகம்.

மன்னார் மறைமாவட்ட மறைக்கோட்டங்களின் அன்பிய மத்திய குழு பணியாளர்களுக்கான வருட இறுதி நத்தார் ஒன்று கூடல் கடந்த 2010 மார்கழி 17ம் திகதி பி. ப. 5.00 மணியளவில் முருங்கன் பங்குப்பணிமனை மண்டபத்தில் இடம்பெற்றது. மன்னார், முருங்கன், வவுனியா, மடு மறைக்கோட்டங்களைச் சேர்ந்த 72 அன்பிய பணியாளர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றினர். மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் இந்நிகழ்வில் கலந்து அன்பியகொடியேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். ஆசியுரை வழங்கிய ஆயர் அவர்கள் அன்பிய வாழ்வினதும் கிறிஸ்தவ சாட்சிய வாழ்வினதும் மேன்மையையும் அவசியத்தையும் வலியுறுத்தி இறையாசீர் வழங்கினார். அன்பிய இயக்குனர் அருட்பணி. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளார் தனதுரையில், "திருச்சபைக்கு உடனடித்தேவை ஆர்வமுள்ள பொது-நிலையினரே" எனக்குறிப்பிட்டு அன்பிய பணிகள் மேலோங்க உழைத்து வரும் பணியாளர்களுக்கு நன்றி கூறிபாராட்டு தெரிவித்தார். மூத்த பணியாளர் திருவாளர் பெஞ்சமின் அவர்களின் ஆன்மீக உரை, பரிசில்கள் வழங்கல், கலை நிகழ்வுகள் என ஒன்றுகூடல் சிறப்புப் பெற்றது. மறுநாள் 18.12.2010 அன்று நானாட்டான் உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. நெவின்ஸ் பீரிஸ் அடிகளாரின் தலைமையில் நிறைவேற்றப்பட்ட நன்றித்திருப்பலியுடன் நிகழ்வு நிறைவுக்கு வந்தது. இந்நிகழ்வு நன்கே நடந்தேற முழு ஒத்துழைப்பு நல்கிய முருங்கன் பங்குத்தந்தை அருட்பணி. க. அருள்ராஜ் குருஸ் அடிகளாரினதும் கார்மேல் சபை அருட்சகோதரிகளினதும் பணிகள் பாராட்டுக்குரியன.

சர்வமத சமயத்தலைவர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், காணாமல் போனோரின் உறவுகள் சந்திப்பு...

தகவல் : சர்வமத சமூக தொடர்பு அருட்பணி மையம்.

2010ம் ஆண்டின் கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட சர்வமத, சமூக தொடர்பு ஆணைக் குழுவினரால் இந்நிகழ்வு 18.12.2010 மன்னார் வாழ்வுதய மண்டபத்தில் நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. பெப்பிசோசை அடிகளார் ஒளியேற்றி இந்நிகழ்வை ஆரம்பித்துவைத்தார். காணாமல் போனோரின் உறவுகள் பலர் இதில் கலந்து கொண்டனர். அவர்கள் சார்பில் காணாமல் போனோர் சங்கத் தலைவர் ஒளியேற்ற அமைதிக்கான பிரார்த்தனை இடம்பெற்றது. இந்து மத குரு மனோகர சர்மா குருக்களும், இஸ்லாமிய மத மௌலவி அ. அசீம் அவர்களும், நத்தார் செய்தியை வழங்கினர். முருங்கன் பங்கு, வங்காலை பங்கு, திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளின் சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன. இறுதியாக அண்மையில் கலாபூசணம் பட்டம் பெற்ற தாழ்வுபாடு பங்கைச்சேர்ந்த பறுநாந்து பீரிஸ் அவர்களுக்கும் வங்காலை பங்கைச் சேர்ந்த மார்க் அவர்களுக்கும் சர்வமத, சமூக தொடர்பு இயக்குனர் அருட்பணி. பெனோ அலெக்ஸ்சாண்டர் அவர்களால் பொன்னாடை போர்த்தி, சின்னங்கள் வழங்கி கௌரவம் அளிக்கப்பட்டது. மன்னார் வேதசாட்சிகளின் எழுச்சிப்பாடலுடன் நிகழ்வு நிறைவுற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும், பல உதவிகளை செய்த வாழ்வுதய இயக்குனர், பணியாளர்களுக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகள்.

நித்திய அர்ப்பண நன்றித் திருப்பலி

தகவல் : செல்வி. தே. தேன்மொழி - மாதிரிகிராமம், வஞ்சியன்குளம் பங்கு.

வஞ்சியன்குளம் பங்கின் மாதிரிக்கிராமம் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தைச் சேர்ந்த பி. ஞானப்பிரகாசம், செபஸ்தியம்மா தம்பதிகளின் மகளான அன்புக் கன்னியர் சபையைச் சார்ந்த அருட்சகோதரி மரிய கிருதா அவர்கள் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் தலைமையில் 21.08.2010 அன்று நிறைவேற்றப்பட்ட கூட்டுத்திருப்பலியின் போது ஆயரின் முன்னிலையில் சக அருட்சகோதரிகள் தாரணி பிரான்சிஸ் நிலுக்கா பெர்னான்டோ ஆகியோருடன் இணைந்து தமது நித்திய அர்ப்பணத்தை கொடுத்ததன் நினைவாக இறைவனுக்கு நன்றி கூறும் நன்றித்திருப்பலி இவ்வருட்சகோதரியின் சொந்த கிராமமாகிய மாதிரிக்கிராம அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் கடந்த 18.12.2010அன்று நிறைவேற்றப்பட்டது. வஞ்சியன்குளம் பங்குத்தந்தை அருட்பணி. அல்பன் இராஜசிங்கம் அ.ம.தியின் ஒழுங்கமைப்பிலும் வழிகாட்டலிலும் இடம்பெற்ற இந்த நன்றித் திருப்பலிக்கு பல குருக்கள், துறவியர், கிராம மக்கள் என பலர் பங்குபற்றினார்கள். அருட்பணி. றெஜினோல்ட் அவர்கள் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட இந் நன்றித் திருப்பலியில் அருட்பணி. றொக்சன் குரூஸ் அவர்கள் மறையுரையாற்றினார். திருப்பலி நிறைவில் அருட்சகோதரியை வரவேற்று நடனமும், பங்குத்தந்தையின் வாழ்த்துரையும் இடம்பெற்றன. தொடர்ந்து ஆலய மக்கள் சார்பாக அருட்சகோதரியை பாராட்டி, வாழ்த்தி அன்பளிப்பும் வழங்கப்பட்டது. இறுதியாக தனது துறவற அழைப்புக்கு உறுதுணையாக இருந்த முன்னாள் பங்குத்தந்தையர்கள், பங்கு மக்கள், குடும்பத்தினர் அனைவருக்கும் அருட்சகோதரி மரியகிருதா அவர்கள் தனது நன்றிகளைத் தெரிவித்தார். இந்நிகழ்வு பங்குமக்கள் அனைவருக்கும் மிகவும் மகிழ்ச்சி ஊட்டும் நிகழ்வாக அமைந்தது.

பவள விழா கண்ட வங்காலை திருக்குடும்ப கன்னியர் மடம்

வங்காலை திருக்குடும்பக் கன்னியர் மடம் "பவளவிழா"க் காண அருள் கூர்ந்த இறைவனைப் புகழ்ந்து நன்றி கூறிய நிகழ்வு கடந்த 2010 நவம்பர் 20ல் நடைபெற்றது. பவள விழா நன்றித்திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. 1935ம் ஆண்டு வங்காலைப்பங்கில் கன்னியர் மடம் அமைத்து பணியாற்ற தொடங்கிய திருக்குடும்ப கன்னியர் கடந்த 75 வருடங்களாக பங்கில் நற்பணியாற்றி வருகின்றனர்.

பேசாலை மண்ணில் முதல் திருப்பலியை ஒப்புக்கொடுத்த அருட்பணி. பீற்றர் யூட் குலாஸ் அடிகளார்

தகவல்: திரு. அன்ரன் குலாஸ், பேசாலை.

இரட்சகர் சபைக்குருவாக பிரான்ஸ் நாட்டில் பணிபுரிந்து கொண்டிருக்கும் மன்னார் மறைமாவட்ட பேசாலைப் பங்கின் மகன் அருட்பணி பீ.யூட் குலாஸ் தனது சொந்த மண்ணில் முதல் திருப்பலியை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் கடந்த 28.11.2010 ஞாயிற்றுக்கிழமை ஒப்புக்கொடுத்தார். புலம் பெயர்ந்து பிரான்ஸ் தேசத்தில் வசித்து கொண்டிருந்த நிலையில் இறையழைப்புப் பெற்று குருத்துவ கல்விப் பயிற்சியை நிறைவு செய்த இவர் 10.06.2007ல் பிரான்ஸ் - ஸ்ராஸ்பேர்க் நகரின் அன்னை மரியாள் பேராலயத்தில் இரட்சகர் சபைக்குருவாக திருநிலைப்படுத்தப்-பட்டார். குருவாகி மூன்று வருடங்கள் கடந்த நிலையில் தாயகம் திரும்பி பேசாலைப் பங்கில் நன்றித்திருப்பலி நிறைவேற்றிய நிகழ்வு பங்குமக்கள், உற்றார், உறவினர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியை கொடுத்தது. பங்குத்தந்தையரின் வழிநடத்தலில் பங்கு மேய்ப்புப்பணிச் சபையினரின் ஒத்துழைப்பில் இந்நிகழ்வு சிறப்புற நிகழ்ந்தது.

விடத்தல்தீவு பங்கில் பணியாற்றும் பிரான்சிஸ்குவின் மரியாயின் மறைபரப்புச்சபை சகோதரிகள்

தகவல். P. இராயப்பு, விடத்தல்தீவு.

பிரான்சீஸ்குவின் மரியாயின் மறைபரப்புச் சபை சகோதரிகள் நால்வர் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் பணிப்புரையில் கடந்த வருட ஆவணி மாதத்திலிருந்து விடத்தல்தீவு பங்கில் பணியாற்றி வருகின்றனர். இவ்வருட்சகோதரிகள் ஆலயப்பணிகளிலும் இறைமக்களின் ஆன்மீக வாழ்வு, அன்பியச் செயற்பாடுகள், மாணவர்களின் கல்வி மேம்பாடு ஆகியவற்றிலும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர். இச்சகோதரிகளுக்கான புதியதோர் கன்னியர் மடத்திற்கான அடிக்கல் கடந்த 25.07.2010ல் மன்னார் ஆயர் அவர்களினால் நாட்டப்பட்டதிலிருந்து கட்டட வேலை அனைவரது முயற்சியால் விரைவாக நடைபெற்றுக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

1ம் பக்க தொடர்ச்சி.....

குருத்துவ திருநிலைப்பாடு .....

அருட்பணி. அ. லின்ரன் லெம்பேட்

அருட்பணி. அ. செபஸ்ரியான் லின்ரன் லெம்பேட் அவர்கள் வங்காலை பங்கைச் சேர்ந்தவர். இவர் அமரர் அந்தோனி அருள்நேசம் லெம்பேட், திருமதி அந்தோனி செபஸ்ரியம்மா சோசை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனாக 08.11.1978ல் பிறந்தார். தனது ஆரம்ப மற்றும் உயர்கல்வியை வங்காலை புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலயத்தில் நிறைவு செய்து அருட்பணி. றோய் மரியரட்ணம் OFM அவர்களால் அழைத்தல் ஊக்கம் பெற்று பிரான்சிஸ்கன் சிறிய துறவிகள் சபையில் 1999ம் ஆண்டு தை மாதம் இணைந்து கொண்டார். இச்சபையில் தனது முதல் அர்ப்பணத்தை 02.08.2000திலும் இறுதி அர்ப்பணத்தை 02.08.2003இலும் கொடுத்த இவர் மெய்யியல் இறையியல் கல்வியை கண்டி தேசிய குருமடத்தில் நிறைவு செய்தார். பிரான்சிஸ்கன் சிறிய துறவிகள் சபை குருவாக 09.12.2010 அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் தனது முதல் திருப்பலியை வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் 12.12.2010 ஞாயிற்றுக்கிழமையன்று ஒப்புக்கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் பொழிவு

இளைஞர் ஆண்டையொட்டிய சிறப்புக் கட்டுரை

உலகாளும் சக்தி உனக்குள்ளே

அருட்பணி. எம்.ஏ.சேவியர், சே.ச.

"இலட்சியவாதிக்கு அனைத்துமே வாய்ப்புகளாகத்தானே வாய்க்கும். வானமே எல்லை!"

'வேகமும் துடிப்பும் உள்ள பத்து இளைஞர்களைத் தாருங்கள். நான் இந்த இந்தியாவை மாற்றிக் காட்டுகிறேன்' என்று மிகுந்த நம்பிக்கையோடு கூறினார் சுவாமி விவேகானந்தர். இளைஞர்களின் மீது அசாத்திய நம்பிக்கையும் அதீத எதிர்பார்ப்பும் அவர் கொண்டிருந்தார். ஆம், சமூக மாற்றம் குறித்துப் பேசும் சமூகவியலாரும் இளைஞரின் அபரா சக்தியை அதிசயத்துடன் பார்க்கின்றனர். எந்த விதச் சமூக மாற்றத்திற்கும் இளைஞர்களின் பங்கேற்பு அவசியமானது என்று அவர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். அவர்களின் ஆக்கப்பூர்வமான பங்களிப்பு இல்லை என்றால் சமூக மாற்றம் சாத்தியமாகாது.

துள்ளும் இளமையும், துறுதுறுப்பு இயல்பும் உடையவர்கள்தாம் இளைஞர்கள். இளமை மனமும், செயற்பாட்டுத் துடிப்பும், அதற்கு ஈடு கொடுக்கும் உடல் வலுவும் கொண்ட கட்டிளங் காளைகள் அவர்கள். இயக்க ஓட்டம் இரத்தத்தில் மட்டுமன்றி, இயல்பிலும் உடையவர்களே இளைஞர்கள். இளம் இரத்தத்தினர். அவர்களுக்கு உடல் ரீதியாகவே வேகமும் விறுவிறுப்பும் கொடுக்கும் சக்தி பெருக்கெடுத்து ஓடும். கல்லைப் போட்டாலும் கரையும் வயது, அவர்களின் வயது. ஓடும் பாம்பைக் கண்டால் எட்டி உதைக்கும் பருவம் அது. அச்சம் என்பது என்னவென்று அறியாப் பருவத்தில் வளர்பவர்கள் அவர்கள். அசாத்தியத் துணிச்சலையும், அதிக தைரியத்தையும் தம் செயலில் காட்டத்துடிக்கும் வயதில் இருக்கிறார்கள். வீர தீரச் செயல் படைக்கும் பருவம் அது. காதலும் வீரமும் கலந்து வரும் கட்டிளங் காளைப் பருவமான விடலைப் பருவமும் கூட. முன்னெடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் முழுப் பங்கெடுத்துத் தங்களது முத்திரையும் பதிக்க முனையும் முரட்டுத் தனம்கூட அவர்களுக்கு இந்த வயதில் உண்டு என்பதை எடுத்துக் காட்டுகள் எடுத்துரைக்கின்றன.

கட்டுக்கடங்காத காட்டாற்றின் சக்திக்கும், பயன்படுத்தாத வளமான விளைநிலைத்தின் செழிப்பிற்கும் அவர்கள் ஒப்பாவார்கள். எண்ணற்ற திறமைகளும் ஆற்றல்களும் பொதிந்து கிடக்கும் குழுவினரல்லரோ அவர்கள்! எதார்த்தமாகவே படைப்பாற்றலும் செயற்பாட்டுத் திறனும் பொதிந்து நிரம்பியுள்ள காளைகள், எங்கும் எதிலும் புதுமையைக் காண விரும்பும் பருவத்தினரல்லரோ? தந்தியலைகளைச் செய்தியாக அனுப்பி, வானொலியைக் கண்டுபிடிக்க முனையும்போது, மார்க்கோனிக்கு அப்போது வயது இருபத்தி மூன்றே. பல விஞ்ஞான முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருக்கும் மின்சாரத்தைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியைத் தொடங்கி, மின்சாரம் தொடர்பான 122 கண்டுபிடிப்புகளுக்கு ஏழே ஆண்டுகளில் காப்புரிமை பெறத் தொடங்கிய போது தாமஸ் ஆல்வா எடிசனுக்கு வயது இருபத்து மூன்றே.

வரலாற்றில் சிறிது பின்னோக்கிப் பார்த்தோமெனில் இத்தகைய இளைஞர்கள்தாமே பல நாடுகளில் தங்கள் நாட்டின் தலைவிதியையே தீர்மானித்திருக்கிறார்கள்! உலகின் போக்கையே மாற்றியிருக்கின்றார்கள்! விடுதலை வேட்கை கொண்டு, அநீதியைத் தட்டிக் கேட்கும் அறச்சினம் அவர்களில் சிலருக்கு அதிகமாகவே உண்டு என்பதை வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. பிலிப்பைன்ஸ் நாடு பதினெட்டாம் நூற்றாண்டில் ஸ்பெயினுக்கு அடிமையாயிருந்தபோது, அதை எதிர்த்து முதலில் குரல் கொடுத்தவர்களில் முக்கியமானவர் ஜோஸ் ரிசால் என்ற இளைஞரல்லரோ? மருத்துவ மாணவராக இருக்கும்போதே அடிமைத்தனத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கிய அவர் ஒரு மருத்துவர் மட்டுமல்லர், நாவலாசிரியர், கவிஞர், பத்திரிக்கையாசிரியர் மற்றும் இளைஞர் இயக்கங்களுக்குத் தலைவராக விளங்கினார். அடிமைப்படுத்திய ஸ்பெயின் நாட்டுக்கே சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார். இந்தியச் சுதந்திரப் போராட்டம் சூடு பிடித்து உச்சத்தில் இருந்தபோது, விடுதலை வேட்கையால்



உந்தப்பட்டு இளைஞர்களிடம் சுதந்திரச் சுடரைக் கொண்டு சென்று, ஏராளமான இளைஞர்களை ஒருங்கிணைத்து, அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த இளைஞர்களை ஒருங்கிணைத்து, அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த இளைஞர் தலைவன் பகத்சிங், பொது வாழ்விற்கு வரும்போது வயது பதினாறே. அவன் வழிகாட்டிய இளைஞர் இயக்கத்தைக் கண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே மிரண்டு போனது. பிரிட்டிஷ் உளவுத்துறைக்கு அதிகத் தலையிடி கொடுத்த தலைவன் அல்லனோ அந்த இளைஞர் தலைவன்? தனது இலட்சியப் போராட்டத்திற்கு ஒரு தெளிவான தத்துவார்த்தப் புரிதல் கொண்டு செயற்பட்டதாலே, ஆங்கிலேயே ஏகாதிபத்தியம் உச்ச பட்ச தண்டனையாக கொடுத்த தூக்குக் கயிற்றையும் துச்சமாக மதித்து அவன் முத்தமிடத் தயங்க வில்லை. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏகாதிபத்தியக் கொடுமைகளை எதிர்த்து முழங்கியவர் சே குவரா என்ற இளைஞனே! இந்த இலட்சியப் போராளி, 1970களில் அந்நாடுகளின் இளைஞர்களின் மனங்களை எல்லாம் வசீகரித்துக் கொள்ளை கொண்டவர் என்பது உலகறிந்த உண்மை. ஆனால், ஒளி படைத்த கண்களும், உறுதி கொண்ட நெஞ்சும் உடைய இன்றைய இளைஞர்கள், தங்கள் சக்திகளையும் திறமைகளையும் புரிந்துள்ளார்களா என்பது பெரும் ஐயமே. உலகமயமாகிப் போன சூழலில், இளைஞர்களினுள் இயங்கி வரும் உலகாளும் சக்தியை உணர்ந்துள்ளார்களா என்பது கேள்விக் குறியே. வேகமாக மாறி வரும் இந்த நிலைக்கு என்ன காரணம் என்று ஆராயும் போது ஒன்றை மட்டும் குறிப்பிட்டுக் குறை கூற முடியாது. இளைஞர்களிடம் இன்று வெளிப்படும் பொதுவான மந்த நிலைக்கும் மாந்தரீக நிலைக்கும் காரணங்களும் தடைகளும் பல உருவாகியுள்ளன; உருவாக்கப்பட்டுள்ளன.... பொதுவாக அத்தகைய தடைகளை, புறத்தடை மற்றும் அகத்தடை என்று பிரிக்கலாம்.

இன்றைய சமுதாயத்தில் தலைதூக்கி நிற்கும் சாதி வெறி, மத வெறி அவர்களின் உண்மையான ஆக்கப்பூர்வச் சக்தியை உணரவிடாமல் தடுக்கின்றன. போலிக் கௌரவத்தையும் தேவையற்ற மோழமையையும் கொடுக்கும் அத்தகைய உணர்வுகள் மலிந்து கிடக்கையில் இளைஞர்கள் எப்படி அவற்றிலிருந்து விடுபட முடியும்?

அதோடு உலகமயமாக்கல் புகுத்தப்பட்டுப் பரப்பப்படும் வன்முறை, பாலுணர்வு போன்றவற்றை வலுவாகத் திணிக்கும் திரைப்படங்களும், இவற்றைத் தொடர்ந்து எங்கும் பரப்பும் உலக இணைய தள வலைப் பின்னல்களும் இளைஞரின் சிந்தனைகளைச் சீரழித்துத் திசை திருப்புகின்றன; இளைஞர்களைக் கெடுக்கின்றன. உலகமயமாக்கலால் திட்டமிட்டுத் திணிக்கப்படும் குறிக்கோளற்ற தன்மையும், டேக் இட் ஈசி நடைமுறையும், சிரமமில்லாமல் சிகரத்தை எட்ட முடியும் என்ற போலி நம்பிக்கையும், சமூக அக்கறையற்ற தன்மையும் எதையும் கண்டு கொள்ளாப் போக்கும் இளைஞர்களின் சக்தியை அவர்கள் உணரப் பெருந்தடைகளாயிருக்கின்றன. இளைஞர்கள், குறிப்பாகக் கல்லூரி மாணவர்களில் பலர் சக தோழர்களின் வலியுறுத்தலுக்காகக் குடியிலும், கஞ்சா மற்றும் புகைபிடிப்பதிலும் ஈடுபட்டு, அவற்றிற்குப் பலியாகி வரும் பரிதாப நிலையும் அதிகமாகி வருகிற உண்மை நிலவரத்தைப் புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன. மேலும், பொதுவாக இளைஞர்களின் சகதோழர்களின் நெருக்கடிக்கும் நிர்ப்பந்தத்திற்கும் எளிதில் உள்ளாகி விடுகின்றனர்.

இளைஞர்கள் எப்போதும் தங்களின் எதிர்கால வாழ்க்கைக்கு நல்ல இலட்சிய முன்னுதாரணத் தலைவர்களை (Role Models) எதிர்பார்க்கின்றனர். அது அவர்களின் இயல்பு! சரியான, நியாயமான எதிர்ப்பார்ப்பே! அவர்கள் வாழும் சூழலில், சமூகத்தில் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு முன்னுதாரணத் தலைவர்கள் இல்லாத போது ஏமாற்றமும் விரக்தியும் அடைந்து, தங்களின் அபார சக்தியை வீணடிக்கிறார்கள். ஊழலும், உண்மையற்றதன்மையும், ஏமாற்றும், கொள்ளையும், போலித் தலைமையும், சுய நலமும், குறுக்குப் புத்தியும், கெடுமதியும், நாளுக்கு நாள் பெருகி வரும் சூழலில், அவர்கள் எங்கிருந்து தங்களுக்குத் தேவையான நல்ல இலட்சிய முன்னுதாரணத் தலைவர்களைக் கண்டுகொண்டு பின்பற்றுவர்? அவர்கள் தங்கள் கண்முன்னே பார்ப்பதெல்லாம் அநியாயம், வன்முறை, சாதி வெறி, ஊழல், இலஞ்சம், தேவையற்ற அளவிற்கு அதிகமான தனிநபர் துதி பாடல், வீர வழிபாடு, வெளிவேடம். இச்சூழலில் ஏமாற்றம் அன்றி வேறென்ன கிடைக்கும்? அவர்களும் தங்கள் வாழ்வில் இவற்றைத்தானே பின்பற்ற முயல்வர். சமூகத்தின் மூத்தோர் இதை உணர்ந்து தங்களது இளந்தலைமுறைக்கு நல்ல முன் உதாரணத்தை உருவாக்கித் தர முயலவேண்டும். இது சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரின் கடமை. இதைச் செய்யத் தவறினால் நமது சமுதாயத்தை அழிவுக்கு இட்டுச் செல்கிறோம். வளம் குன்றினால் அதை ஈடு கட்ட வழிவகை அமைத்துக்கொள்ளலாம். ஆனால், மதிப்பீடுகளான குணங்களும், அடிப்படை அறநெறியும் பஞ்சமாகி அவை இல்லாமல் போனால் அச்சமுதாயம் என்னவாகும்? வீணாய்ப் போய்விடாதா? அழிந்துவிடாதா? ஒரு நாகரீகமே சீரழிந்துவிடாதா? நாகரீகம் அழிவதற்கு அச்சமூகத்திலுள்ள இது போன்ற அகக்காரணிகள்தாம் அடிப்படைக் காரணம் என்பார் புகழ் பெற்ற வரலாற்றாசிரியர் அர்னால்டு டாயன்பீ. அகக்காரணிகளின் சாரம்சம் ஒரு சமூகம் கொண்டிருக்கும் விலைமதிப்பில்லா மதிப்பீடுகளும் உயரிய தத்துவமுமே. இவைதாம் சமூகத்தின் அனைத்துச் செயற்பாடுகளிலும் வெளிப்படுகின்றன.

ஆகவே இந்த அவசர அத்தியாவசியத் தேவைகளைச் சரிசெய்து ஒட்டுமொத்தச் சமுதாயமே போர்க்கால அடிப்படையில் மதீப்பீடுகளை நிலைநிறுத்த முயற்சி எடுக்க வேண்டும். இளைஞர்களுக்கு வழிகாட்டி, அவர்களை நெறிப்படுத்தும் பணியில் உடனே இறங்கவேண்டும். அவர்களுக்கு ஆக்கப்பூர்வமான திசை வழியாக்கம் செய்யவேண்டும். இதில் அனைவருக்கும் சமூகக் கடமையுள்ளது.

புறக்காரணிகள் இப்படி இளைஞர்களை உருவாக்கத் தடையாக இருக்க, அவர்களுக்குள்ளே வளர்ந்திருக்கும் சில அகத்தடைகளும் அவர்களின் சக்தியை உணரப் பெருந்தடையாக இருக்கின்றன என்பதையும் நாம் மறுக்க இயலாது. இன்றைய இளைஞர்கள் இலகுவாகக் கவனச் சிதறலுக்கு உள்ளாகிவிடக் காரணம் அவர்களிடம் உள்ள ஒரு குறிக்கோளற்ற தன்மையே. இது நாளுக்கு நாள் அதிக இளைஞர்களிடம் பெருகி வருவதைப் பரவலாகக் காண முடிகிறது. தோல்விகள் அல்ல, இலட்சியமில்லா வாழ்வே குற்றமாகும் (Not Failure but low aim is crime) என்பர் சமூக அக்கறை கொண்டோர். வானமே எல்லை! இலட்சிய வாதிக்கு அனைத்துமே வாய்ப்புகளாகத்தானே வாய்க்கும். வாழ்வில் உயர்ந்த குறிக்கோள் இருக்கும்போது வல்லோனுக்கு இயல்பான தேடலும் அத்துடன் இணைந்து வராதா? வல்லோனுக்குப் புல்லும் ஆயுதம் தானே! வாழ்வில் தேடல்தான் ஒரு மனிதருக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும். வாய்ப்புகள் வாய்த்தாலும் பெரும்பாலான இளைஞர்கள் அவற்றை நழுவ விடுகின்றனர். வாழைப்பழத்தை உரித்து வாயிலா ஊட்டிவிடுவர்? அதுவும் இந்தப் போட்டி நிறைந்த உலகில். இயலாமையால் தோற்றவர்களைவிட வாழ்வில் முயலாமையால தோற்றவர்களே அதிகம். முயற்சியே வாழ்வின் வெற்றிக்கு அடித்தளம். வாய்ப்புகளை வசப்படுத்தும் வழிமுறை இளைஞரிடம்தான் உள்ளது. வாழ்வில் குறிக்கோளும் வழிமுறையில் தெளிவும், கடின உழைப்பும், தொடர்ச்சியான செயற்பாடும் ஓர் இளைஞரிடம் இருப்பின் அவனுக்கு அருகிலேயே வெற்றித் தேவதை நிச்சயம் இருப்பாள். அவனை விட்டு அவள் அகலவே மாட்டாள். ஏனெனில், வெற்றித் தேவதையை உருவாக்குவதே இளைஞன்தானே!

இளைஞர்களைக் கெடுத்து மூளைச் சலவை செய்யும் சக்திகளையும், எதிர்மறையாக ஈர்ப்பு விசைகொடுக்கும் திசைகளையும், இனம் கண்டு அவற்றை ஒதுக்கவேண்டும். சமூகத்தில் தமக்குக் கிடைக்கும் நல்லவற்றை எடுத்து, அல்லவற்றை விடுத்து, தங்களுக்குள்ளே பொதிந்து கிடக்கும் படைப்பாற்றல் சக்திகளுக்கு ஆக்கப்பூர்வமாக உயிர் கொடுத்தால் வாழ்வில் பிரகாசிக்கலாம்; சமூகத்திற்கும் தங்களால் இயன்ற பங்களிக்கலாம்.

'சமூகத்தால் உருவாக்கப்பட்ட நான், சமூக முன்னேற்றத்திற்கு என்ன செய்யவேண்டும்?' என்ற கேள்வியை ஒவ்வோர் இளைஞனும் கேட்கவேண்டும். 'என்னால் இச்சமூகத்தை இப்போதைய நிலையிலிருந்து சிறிதளவாவது உயர்த்த இயலுமாயின், அது நான் இச்சமூகத்திற்குச் செய்யும் பணி, இது என் கடமை' என்று அவர்கள் உணர வேண்டும். ஏனெனில், ஒவ்வொருவருமே தாம் வாழும் சூழலாலும் சமூகத்தாலும் உருவாக்கப்படும் உன்னதப் படைப்பே! 'எனது சந்ததியினரான இளஞ்சமூகத்தினருக்கு நான் ஒரு முன்மாதிரியாக, நல்ல உதாரணமாக விளங்கவேண்டும். சரித்திரத்தில் சிறந்த வகையில் முத்திரை பதித்த நாயகனாக மாறவேண்டும்' என்ற அடங்கா அவா, அக்கினிச் சுவாலையாக ஒவ்வோர் இளைஞரின் மனத்திலும் ஒளிர்ந்து கொண்டே இருக்கவேண்டும். எங்கும் கிரிக்கெட், எதிலும் திரைப்படம், எப்போதும் பொழுதுபோக்கு போன்ற கேளிக்கைப் போக்கை மாற்றி, அவை வாழ்வில் ஊறுகாய் மட்டுமே, உணவல்ல என்று அவர்கள் உணர வேண்டும். ஓய்வாக இருக்கும்போது பொழுதுபோக்கிற்கு மட்டுமே அவை என்பது அவர்களின் மனத்தில் ஆழமாகப் பதியவேண்டும். விளையாட்டும் திரைப்படமும் வாழ்வில் ஓர் அங்கமே. அவையே வாழ்வாகா. பொழுதுபோக்கு ஓர் அம்சமே. பொழுதுபோக்கே வாழ்வாகாது. பொழுதுபோக்கே வாழ்வானால் இளைஞரின் எதிர்கால வாழ்வே பிறருக்குக் கேள்விக்குரிய பொழுதுகோக்காக மாறிவிடும் என்ற அபாயம் உள்ளடக்கி உள்ளது என்பதைச் சரியான நேரத்தில் உணரவேண்டும். கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்வதில் பயன் ஏது? இன்றைய இளைஞன் நாளைய வழிகாட்டி; நாட்டின் எதிர்காலத் தலைவன். சமூகப் பொருளாதார அரசியல், பண்பாட்டு எதார்த்தங்களைப் புரிந்து கொள்ள ஓர் ஆழமான ஆய்வுத் தெளிவும் இருக்கவேண்டும். நாட்டை சுபிட்சமான எதிர்காலத்திற்கும், வளமான வருங்காலத்திற்கும் வழிநடத்திச் செல்லக்கூடிய முழுப்பொறுப்பே அவன் கையில்தானே உள்ளது என்பதை அவன் உணரவேண்டும். இன்றே அதற்கு அவன் தன்னை தகுதியாக்கிக் கொள்ளவில்லை என்றால், நாட்டின் ஒட்டுமொத்த எதிர்காலமே கேள்விக்குள்ளாகாதா? உலகாளும் சக்தியே உனக்குள்ளே உறைந்திருக்கிறது இளைஞனே உலகமே உன் கையில்! விழித்தெழுந்து சரியான திசையில் சென்றால் நாட்டின் எதிர்காலத்தைச் சரியான, தெளிவான திசையில் வழி நடத்தலாம். அதற்குத் தேவையானது ஓர் இலட்சியக் கனவே.

பெண்கள் எம் திருச்சபைத் தூண்கள்!

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த போது
இயேசுவை நேசித்தவர்கள் - பெண்கள்
இயேசுவை அன்போடு உபசரித்தது - பெண்கள்
இயேசுவின் பாதத்தை கண்ணீரால் கழுவியதும் - பெண்கள்
இயேசுவிற்கு தங்கள் ஆஸ்திகளால் ஊழியம் செய்ததும் - பெண்கள்
இயேசு சிலுவை சுமக்கும் போது புலம்பி அழுததும் - பெண்கள்
இயேசுவின் மரண வேளையில் கூட இருந்தது - பெண்கள்
இயேசுவின் உயிர்தெழுதலின் முதல் செய்தியை அறிவித்ததும் - பெண்கள்
இன்றும் கிறிஸ்துவுக்காக தம்மை கொடுக்க கண்ணீர் சிந்தும் கண்கள்
தேவ சத்தத்தை கேட்டு உணரதுடிக்கும் காதுகள்
இறைவார்தை பேசும் இனிய வாய்கள்
ஊழியத்திற்கு உற்சாகமாய் உதவும் கரங்கள்
ஜெபத்திலே தேய்ந்து தழும்பேறிய முழங்கால்கள்
தேவ பிரசன்னத்தை நாடும் உள்ளங்கள்
இத்தகைய பெண்கள் எம் திருச்சபைத் தூண்கள்!

அருட்சகோதரி மேரி மாக்ரட்,
ஸ்ரனிஸ்லோஸ் தி.கு.க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

கர்தினால் தோமஸ் குரே, அருளாளர் நிலைக்கு உயர்த்தப்படும் முன்னெடுப்பை ஆரம்பித்துள்ள தலத்திருச்சபை

கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கடந்த வருடம் ஐப்பசி 29ம் திகதி தேவத்தையில் உள்ள இலங்கை மாதா பசிலிக்காலில் இலங்கையின் முன்னாள் கர்தினால் அமரர் அதிமேதகு தோமஸ் குரே ஆண்டகை அவர்கள் அருளாளர் நிலைக்கு அன்னையாம் திருச்சபையால் உயர்த்தப்படுவதற்கான பணியை தொடங்கி வைத்தார். கர்தினால் பெஞ்சமீன் தோமஸ்குரே ஆண்டகை 1929ம் ஆண்டு குருவாகி 1945ம் ஆண்டு உதவி ஆயராகவும், 1947ல் பேராயராகவும் திகழ்ந்து திருத்தந்தை 6ம் பவுல் அவர்களால் 1965ம் ஆண்டு கர்தினால் நிலைக்கு உயர்த்தப்பட்டார். 1988ம் ஆண்டு ஐப்பசி 29ம்திகதி இறந்த இவரது உடல் தேவத்தை பசிலிக்காவின் கீழ்ப்பகுதி சிற்றாலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இப்பசிலிக்காவை கட்டிமுடித்த பெருமையையும் இவரையே சாரும். இவர் புனிதர் பட்டத்துக்கு உயர்த்தப்படுமுகமாக முதல் படிநிலையான 'இறையடியார்" என்னும் நிலைக்கு உயர்த்தும் பணியை தலத்திருச்சபை முன்னெடுத்துள்ளது.

கண்டி மறைமாவட்ட நாவலப்பிட்டி பங்கின் நிகழ்வுகள் சில

தகவல் A. ஸ்டெனிஸ்லோஸ், நாவலப்பிட்டி

யோசேப்வாஸ் குழுவினரின் கல்கமுவ விஜயம்

நாவலப்பிட்டி பங்கின் பங்குத்தந்தை அருட்பணி. திமோத்தி ஞானப்பிரகாசம் அடிகளாருடன் யோசேப்வாஸ் குழுவினர் 17.11.2010 அன்று கல்கமுவ பங்கின் வரலாற்று சிறப்பு மிகு "யோசேப்வாஸ் புரம்" எனுமிடத்தை தரிசிக்க சென்றிருந்தனர். சல்வடோரியன் சபை அருட்சகோதரி செபமாலை அவர்கள் யோசேவாஸ் நாமத்தில் நடக்கும் அற்புதங்கள், அவரின் மகிமை, அவர் தியானித்த சிலுவை, மக்களின் நம்பிக்கை போன்றவற்றை தெளிவாக எடுத்துரைத்தார். கல்கமுவ பங்குத்தந்தை அருட்பணி எட்மன் முருகுப்பிள்ளை இந்நிகழ்விற்கு ஒத்தாசை வழங்கினார்.

முதல் நன்மை திருவருட்சாதனம்

புனித மரியாள் ஆலயத்தில் 27.11.2010அன்று 40 சிறுவர்களுக்கு முதல் நன்மை திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. பங்குத்தந்தை தனது மறையுரையில் இயேசுவை முதல் முறையாக அப்ப வடிவில் பெறும் சிறுவர்களோடு கூட இயேசு அவர்களின் குடும்பங்களுக்கும் வருகை தருகின்றார். எனவே குடும்பத்திலுள்ள அனைவரும் உளத்தூய்மையோடும் வீட்டுச் சூழல் தூய்மையோடும் அவரை வரவேற்க வேண்டும். பெற்றோர் பிள்ளைகளின் ஆன்மீக வாழ்வில் அக்கறை காட்ட வேண்டும் என்றார்.

ஒளிவிழாவும் இளைஞர் அமைப்பின் அறிவுப்போட்டியும்

நாவலப்பிட்டி பங்கின் புனித மரியாள் பாடசாலை பிரதான மண்டபத்தில் 04.12.2010 அன்று ஒளிவிழா நிகழ்வு இடம்பெற்றது. குழுப்பாடல், நடனம், நாடகம் போன்ற நிகழ்வுகளுடன் இளைஞர் அமைப்பின் வினா விடை போட்டியும் இடம்பெற்று மறைப்பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்த கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

அதிமேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நன்றித்திருப்பலியை கொழும்பு கொட்டகென புனித லூசியா பேராலயத்தில் மார்கழி 4, 2010 அன்று தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். இவர் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரினால் 20 நவம்பர் 2010ல் கர்தினால் நிலைக்கு உயர்த்தப்பட்ட பின் தாய் நாட்டில்முதல் முதலாக ஒப்புக்கொடுத்த நற்கருணைக் கொண்டாட்டம் இதுவாகும். கத்தோலிக்க கொடிகளை ஏந்தி கத்தோலிக்க பாடசாலை மாணவர் தலைவர்கள் புடை சூழ்ந்து வர புனித லூசியா பேராலயத்திற்கு மோட்டார் ஊர்தியில் பவனி வந்த கர்தினால் அவர்கள் பேராலய நுழைவிடத்தில், திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி அவர்களால் வரவேற்கப்பட்டார்.

ஆயர்கள், குருக்கள் இணைந்து கர்தினால் அவர்களால் நிறைவேற்றப்பட்ட கூட்டுத்திருப்பலியின் போது அதி.வண.பேராயர் யோசேப் ஸ்பிட்ரெறி ஆண்டகை திருத்தந்தையினால் 20.12.2010 அன்று பேராயர் மல்கம் ரஞ்சித் கர்தினால் நிலைக்கு நியமிக்கப்பட்ட நியமனத்தை வாசிக்க அதன் மொழிபெயர்ப்பை கொழும்பு உயர் மறைமாவட்ட ஆயரின் முதல்வர்கள் சிங்கள, தமிழ் மொழிகளில் வாசித்தனர். இத்திருப்பலியில் சிலாப மறைமாவட்ட ஆயர் அதி.வண. வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகையால் சிங்கள மொழியிலும்

யாழ்.மறைமாவட்ட ஆயர் அதி.வண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் தமிழ் மொழியிலும் மறையுரையாற்றப்பட்டன. "திருத்தந்தையால் வழங்கப்பட்ட இந்நியமனத்தை நான் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்கிறேன். இது மேலான வினைத்திறனுடன் அகில உலக திருச்சபைக்கும் இயலுமான ஒவ்வொரு வழியிலும் எமது தாய்நாட்டிற்கும் சேவையாற்றக் கிடைத்த வாய்ப்பு என்று இதனை கருதுகிறேன்" என்று தனது நன்றியுரையில் அதிமேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கள் கூறினார்.

நன்றி - மெசெஞ்சர்

குடும்ப ஆண்டை தொடங்கியுள்ள திருமலை – மட்டு மறைமாவட்டம்

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட மேய்ப்புப் பணிச்சபை மாநாட்டில் முன்வைக்கப்பட்ட குடும்ப ஆண்டு திட்டங்களை உள்ளடக்கி அம்மறைமாவட்டத்திற்கான மேய்ப்புப்பணி மடலை ஆயர் பேரருட்திரு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் விடுத்துள்ளார். இம்மடலில், "கடவுளின் ஒரே பேறான மகன் மனித வரலாற்றில் தோன்றியது குடும்பத்தின் வழியாகவே, திருச்சபையின் அத்திவாரமாக, ஆணிவேராக விளங்கும் இல்லத்திருச்சபை என 2ம் வத்திக்கான் சங்கத்தினால் அழைக்கப்படும் குடும்பம் பற்றி அதன் மாண்பு, அழைப்பு, பணி பற்றிய ஒரு தெளிவான அறிவூட்டலை நாம் பலப்படுத்துவது காலத்தின் தேவை" என குறிப்பிட்டுள்ள ஆயர், "குடும்ப ஆண்டை திருக்குடும்பத்தின் திருநாளில் ஆரம்பித்து, இலங்கையின் பாதுகாவலர் அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் மாதிரியையும் வழிகாட்டலையும் பின்பற்றி குடும்பம் பற்றிய உண்மையின் உணர்வு நம் உள்ளங்களில் மீண்டும் எழ வேண்டும் என்ற இலக்குடன் பயணத்தை தொடர்வோம்" என தனது மேய்ப்புப்பணி மடலை நிறைவு செய்துள்ளார்.



உலகத்திருச்சபை செய்திகள்

அனைத்துலகும் ஒன்றிணைந்து செயல்பட்டால் உலகில் வறுமையை அகற்ற முடியும் - திருத்தந்தை

இன்று மனித சமுதாயத்துக்கு மிகவும் தேவைப்படும் 'பசியிலிருந்து விடுதலை' வழங்குவதற்குத் தனியாள் முதல், நாடுகள், பன்னாட்டு நிறுவனங்கள் வரை ஒவ்வொருவரும் முன்னுரிமை கொடுத்துச் செயல்படுமாறு திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கேட்டுக் கொண்டார். உலக உணவு நாளுக்கென செய்தி வெளியிட்ட திருத்தந்தை, இத்தினத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 'பசியை அகற்றுவதற்கு ஒன்றிணைதல்' என்ற தலைப்பானது காலத்திற்கேற்ற கருப்பொருள் என்று கூறியுள்ளார்.

தண்ணீருக்கான உரிமையைப் பாதுகாப்பதற்கு பன்னாட்டுச் சமுதாயம் அண்மையில் எடுத்துள்ள தீர்மானம், மனிதருக்கு உணவு அளிக்கவும், கிராமப்புற நடவடிக்கைகளுக்கும், இயற்கையைப் பாதுகாப்பதற்கும் இன்றியமையாதது என்று திருத்தந்தை அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார் .

பசியை அகற்றுவதற்கு அனைத்துலக சமூகம் உண்மையிலேயே ஒன்றிணைந்து செயல்பட்டால் உண்மையான மனித வளர்ச்சி மூலம் வறுமை அகற்றப்பட முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

'1 பில்லியன் ஹங்ரி' (நூறு கோடிப் பசியால் வாடுவோர்) என்ற உலக உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் அண்மை முயற்சி, உலகில் பசியை அகற்றுவதற்கான அவசியத்தைச் சுட்டிக் காட்டுகின்றது என்றும் திருத்தந்தை கூறியுள்ளார்.

2012ல் அடுத்த உலக ஆயர் மாமன்றம்

அடுத்த உலக ஆயர் மாமன்றம் 2012ல் கூடும் என்றும் அதற்கான தலைப்பாக 'கிறிஸ்தவ நம்பிக்கையைப் பிறருக்கு வழங்குவதற்கான புதிய நற்செய்தி அறிவிப்புப் பணி' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்.

புனித பூமியில் அமைதி நிலவ உலகின் 2000 நகரங்கள் இணைந்து செபிக்கும் திட்டம்

புனித பூமியில் அமைதி நிலவ இவ்வருட ஜனவரி 29,30 ஆகிய திகதிகளில் உலகின் 2000 நகரங்கள் இணைந்து செபிக்கும் திட்டம் உருவாகியுள்ளது. புனித பூமிக்கான செபங்களில் கடந்த ஆண்டு திருத்தந்தையுடனும், எருசலேமின் இலத்தீன் ரீதி முதுபெரும் தலைவர் .'.பவாத் தவாலுடனும் இணைந்து 1103 நகரங்கள் செபித்தன.

சிறுவர் உரிமைகளை செயல்படுத்தவும் – பேராயர் பிரான்சிஸ் சுல்லிக்காட்

உலகெங்கும் ஏறக்குறைய 2,50,000 சிறுவர் படைவீரர்களாகப் பணியாற்றக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் உரையாற்றிய ஐ.நா.வுக்கான வத்திக்கானின் நிரந்தரப் பார்வையாளர் பேராயர் பிரான்சிஸ் சுல்லிக்காட், சிறுவர் உரிமைகள் குறித்த அனைத்துலக ஒப்பந்தத்தை அமல்படுத்தாத அரசுகள் விரைவில் அதனைச் செயல்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

கருணைக் கொலை கண்டிப்புக்குரியது – பேராயர் டெனிஸ் ஹார்ட்

இறந்து கொண்டிருப்போரையும் முதியோரையும் கருணைக் கொலை செய்வது அவர்களுக்கு வழங்கப்படும் எதிர்சிகிச்சை மற்றும் கருணைக் கொலைக்கு ஆதரவாகப் பேசுவது, மனிதனின் காருண்யப் பண்பைத் தவறான இடத்தில் பயன்படுத்துவதாக இருக்கின்றது என்கிறார் ஆஸ்திரேலியப் பேராயர் டெனிஸ் ஹார்ட்.

"தனது மக்கள் அனைவரின் தேவைகளை நிறைவேற்ற ஒவ்வொரு நாடும் விதிமுறைகளை உருவாக்க வேண்டும்" - பேராயர் மம்பர்த்தி

ஒவ்வொரு நாடும் தனது ஒவ்வொரு குடிமகனின் பொருளாதார மற்றும் ஆன்மீக நலன்கள் முழுவதுமாக நிறைவேற்றப்படுவதற்குத் தேவையான விதிமுறைகள் உருவாக்கப்பட்டு காக்கப்படுமாறு பேராயர் தொமினிக் மம்பர்த்தி ஐ.நா.வில் கேட்டுக் கொண்டார். அமைதி, ஒட்டுமொத்த பாதுகாப்பு, ஆயுதக்களைவு, மனித உரிமைகள், வளர்ச்சி, ஒத்துழைப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற உலகின் விவகாரங்கள் குறித்த ஐ.நா.வின் 65வது பொது அமர்வில் உரையாற்றிய போது திருப்பீடத்தின் தொடர்புடைய நாடுகளுக்கான செயலர் பேராயர் மம்பர்த்தி இவ்வாறு கூறினார்.

சமய சுதந்திரமே சமாதானத்திற்கான வழி

திருத்தந்தையின் புத்தாண்டுத் தினச்செய்தி

இந்த வருடத்தின் முதல் நாளிலே, எம் அனைவருக்கும் நிம்மதியும் வளமையும் எம் வாழ்வில் பெருகுவதோடு சிறப்பாக அமைதி நிலவ எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துநிற்கின்றேன். இவ்வருட இறுதியிலே இடம்பெற்ற வேதகலாபனைகள், பிரிவினைகள், வன்முறைகள், சமய சகிப்புத்தன்மை இழந்த நிலைகள் மிகவும் கவலைக்குரிய ஒன்றாகும்.

இன்று ஈராக் நாடு எதிர்கால ஸ்திரத்தன்மையையும் நல்லிணக்கத்தையும் நோக்கி பயணிக்கின்ற இத்தருணத்திலே அங்கே உருவாகியுள்ள வன்முறைகள் குறிப்பாக (சீரோ) கத்தோலிக்கர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள்;உதாரணத்திற்கு கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ம் திகதி பாக்தாத் நகரத்திலுள்ள சதாசகாய மாதா பேராலயத்திலே திருப்பலிக்கென்று கூடியிருந்த மக்களில் ஐம்பது பேரும் இரண்டு கத்தோலிக்க குருக்களும் சுட்டுக்கொள்ளப்பட்டமையும் மேலும் கத்தோலிக்க மக்களின் வீடுகள் தொடர்ச்சியாக தாக்கப்படுகின்றமையும் இம்மக்களின் பாதுகாப்புக்கு பெரிய அச்சுறுத்தலாக அமைந்திருக்கின்றபடியால் இவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இத்தருணத்திலேயே நானும் அகில உலக திருச்சபை முழுவதும் எங்களது உடனிருப்பையும், ஆதரவையும் உங்களுக்கு தெரிவிப்பதோடு மத்தியகிழக்கிலே வாழுகின்ற எல்லா கத்தோலிக்கர்களையும் ஒற்றுமையுடனும் உறுதியாகவும் உங்கள் விசுவாசத்திற்கு சான்று பகருமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்த மக்களின் துன்பங்களைப் போக்குவதற்காக உழைக்கின்ற அரசாங்கத்திற்கு நன்றி கூறுகின்ற அதே வேளையிலே இவ்வன்முறையினாலே பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்காகவும் செபிக்கும்படியாகவும் ஆதரவு வழங்குமாறும் அனைத்துலக கத்தோலிக்கர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த வேளையிலே சமய சுதந்திரமே சமாதானத்திற்கான வழி என்ற உண்மையை உங்களோடு பகிர்ந்து கொள்ள விளைகின்றேன். இன்று பல இடங்களில் தாங்கள் கடவுள் மீது கொண்டிருக்கின்ற விசுவாசத்தை சுதந்திரமாக அறிக்கையிட முடியாதநிலை காணப்படுகின்றமை வருத்தத்தைத் தருகின்றது. மேலும் பல இடங்களில் தவறான முன்சார்பு எண்ணங்களும் வன்முறைகளும் பெருகிவருகின்றபடியால் கிறிஸ்தவர்கள் தமது விசுவாசத்தின் பொருட்டு நாளாந்தம் பயத்திலேயே வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். இந்நிலையானது கடவுளுக்கும் மனித மாண்பிற்கும் எதிரான செயற்பாடு என்பதோடு இது உலகின் சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் குந்தகம் விளைவிக்க கூடியதாகும் என்று தனது புத்தாண்டு தினத்திற்கான செய்தியில் திருத்தந்தை [illegible] கேட்டுக்கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ விழுமியங்களை வாழ்வாக்கும் குடும்பமே திருக்குடும்பம்

அன்பினால் உயிரோட்டம் பெற்று, உறவுகளால் அமைந்ததொரு சமூகமே குடும்பம் எனலாம். ஒன்றிப்பின் உள்ளார்ந்த இயல்புக்கு ஏற்ப வாழ்வதும், சமூக உறவை ஏற்படுத்துவதற்கான ஒரு தொடர் முயற்சியில் ஈடுபடுவதும் குடும்பத்தின் தலையாய பொறுப்பாக கொள்ளப்படுகின்றது. இத்தகைய குடும்பப் பொறுப்பின் உள்ளார்ந்த அடிப்படையும், நிலையான சக்தியும், இறுதியான குறிக்கோளும் அன்புதான் என்றால் அது மிகையாகாது. ஒரு குடும்பத்தில் அன்பு இல்லையென்றால் அக்குடும்பம் உயிர் வாழ முடியாது. உறவுச் சமூகமாக வளர்ச்சியடையவும், நிறைவு பெறவும் முடியாது. ஒவ்வொரு குடும்பமும் தங்கள் அனுபவத்தால் அன்பைக் கண்டு, அதனை தன்னுடையதாக்க வேண்டும். அந்த அன்பில் குடும்ப அங்கத்தவர்கள் ஆழ்ந்த முறையில் பங்கெடுக்க வேண்டும். அவ்வாறில்லாவிடில் அவர்கள் தமக்கே ஒரு புரியாத புதிராகிவிடுவார்கள்.

பல்வேறு கலாசாரங்கள் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்ற இவ்வுலகில் அமைதியான, அன்பான குடும்ப வாழ்க்கை வாழ்வது கடினம். கணவன், மனைவி மகிழ்வுடன் வாழ்வதைப் பொறுக்க முடியாமல் அவர்கள் நடுவில் பிளவை ஏற்படுத்த முனைபவர்களையும், அவர்களின் ஒற்றுமையைக் குலைத்து அவர்கள் வாழ்வைக் குட்டிச் சுவராக்க நினைக்கும் மனம் படைத்தவர்களையுமே நாம் இவ்வுலகில் அதிகம் காண முடிகிறது. இத்தகைய நிலையில் இன்றைய உலகில் எதிர் நீச்சல் போட்டு அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கு கடவுளின் அருள் நிச்சயம் தேவை என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. அன்று நசரேத்தில் பல குடும்பங்கள் வாழ்ந்தன. ஆனால் ஒரே ஒரு குடும்பம் மட்டும் "திருக்குடும்பம்" என அழைக்கப்பட்டது. காரணம் அக்குடும்பத்தில் இயேசு இருந்தார். அதே போல் எங்களுடைய குடும்பங்களும் திருக்குடும்பமாக இருக்க எங்கள் மத்தியில் இயேசு இருக்க வேண்டும். இயேசுவின் பிரசன்னத்தை உணர, நாம் நாளும் செபத்திலும் தியானத்திலும் வளர்கின்ற குடும்பமாக வாழ வேண்டும். திருக்குடும்பம் எமக்கு காட்டும் நல் வாழ்க்கை முறையை முன்னுதாரணமாகக் கொண்டு இயேசுவின் வழியில் செல்லும் போதே எமது குடும்பங்களும் திருக்குடும்பமாக திகழ முடியும்.

திருக்குடும்பத்தின் தலையாய நோக்கம் அர்ப்பணமாகும். ஆண்டவரையே கண்முன் கொண்டு, அவரது திருவுளத்தை உளமார ஏற்று அதை நிறைவேற்றுவதில் முனைப்புடன் இருந்தது நசரேத்தில் வாழ்ந்த திருக்குடும்பம். தனது எண்ணத்திற்கு எட்டாத, அறிவிற்கு அப்பாற்பட்ட, புலன்களுக்கு புலப்படாத, இயற்கை நியதிகளுக்கு முரண்பட்ட ஒரு செய்தியை இறைவனின் தூதர் மூலம் கேட்டதும் கன்னிமரியாள் சொன்ன பதில், "நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38). தனக்கென திருமண ஒப்பந்தம் செய்யப்பட்ட பெண் கருவுற்றிருக்கிறார் என குழப்பத்தில் இருந்தாலும், தூதரின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு இறைவனுக்கு தன்னை அர்ப்பணித்தார் புனித யோசேப்பு. இயேசுவை வளர்த்தெடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட யோசேப்பு குழந்தையை காப்பாற்ற இரவோடு இரவாக எகிப்துக்கு ஓடியதும் (மத் 2:13-15), மூன்று நாட்களாக காணாமற் போன மகனை ஏக்கத்தோடு தேடியதும் (லூக் 2:48) அவரது அர்ப்பணத்தின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது. இயேசுவின் அர்ப்பணம் எங்கள் எல்லோருக்குமே ஒரு எடுத்துக்காட்டான அர்ப்பணமாக உள்ளது. " என் விருப்பம் அல்ல உமது விருப்பமே ஆகட்டும்" (மாற் 14:36) என்று தன்னை முழுதும் தந்தையின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார் இயேசு. இவ்வாறு இவர்கள்

அருட்.சகோ.றமேஸ் அ.ம.தி

மூவரும் ஆண்டவருக்கு முழுமையாக தங்களை அர்ப்பணித்ததனால் அக்குடும்பம் திருக்குடும்பம் என அழைக்கப்படுகிறது. தேவையில் இருக்கும் அயலானை இனங்கண்டு அன்பு செய்து அவனது தேவைக்கேற்ப சேவை செய்யும் குடும்பமும் திருக்குடும்பமே. இறைத்திட்டம் அவர்களில் செயல்பட, அதற்கு பணிந்து அனைவரின் மீட்புக்காக தங்களை அவனிக்காக அர்ப்பணிக்கும் குடும்பமும் திருக்குடும்பம் என்றால் மிகையாகாது. திருக்குடும்பம் எங்கள் குடும்பங்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரி. திருக்குடும்ப வாழ்வை உலகில் அனைவரும் மாதிரியாகக் கொள்ள வேண்டும் என சித்தம் கொண்ட இறைவன், **பீற்றர் பியன்வெனு நோஜ** அடிகளார் மூலமாக ஒரு துறவற சபையை அமைத்து அதன் மூலம் திருக்குடும்ப வாழ்வை அனைத்துக் குடும்பங்களும் கண்டு பாவிக்கும்படி செய்தருளினார். குருத்துவக் கல்லூரியில் தனது கல்வியை தொடர்ந்த காலத்திலே திருக்குடும்பத்தின் மேல் பற்றுக் கொண்ட அடிகளார், இயேசுவின் மானிட ஏற்பையும், மரியாளின் மாண்பையும்,மகத்துவத்தையும், யோசேப்புவின் பொறுப்பினையும் கற்றுக்கொண்டார். அங்கிருந்த சிற்றாலயத்தில் அவர் செபத்தில் உருவான எண்ணக்கருவின் உருவம் தான் இன்று எங்கள் மத்தியில் பணிபுரியும் திருக்குடும்ப சபையினர். பிரான்சியப் புரட்சியின் விளைவாக வாழ்விழந்த இளம் பெண்களுக்கு இச்சபை கலங்கரை விளக்காக அமைந்தது. ஆதித்திருச்சபையின் வாழ்க்கை முறையைக் கைக்கொண்டு, நம்பிக்கையற்ற மக்கள் மத்தியில், "எல்லாச் சூழலிலும் விசுவாசத்தைப் பரப்பி உறுதிப்படுத்தும்" அவர்களது பணிவாழ்வு, மனித குடும்பங்களைக் கட்டியெழும்புவதிலும், திருச்சபையின் குடும்ப உறவை வெளிப்படுத்துவதிலும், இறைவனின் மீட்புத்திட்டத்தில் பங்குகொள்ள மக்களுக்கு வழிகாட்டுவதிலும் நிலையாய் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று பின்நவீனத்துவத்தாலும், நாகரீகத்தின் அதிகூடிய வளர்ச்சியினாலும், சினிமாவின் சீர்கேடுகளினாலும், உருக்குலைந்த குடும்பங்களையே நாம் எம் சமுதாயத்தில் அதிகம் காண முடிகிறது. ஆனால் இவை எங்கள் குடும்பங்கள் மட்டில் ஓர் நீண்ட போராட்டமாக அமையாமல் பார்த்துக் கொள்வது ஒவ்வொருவருடைய உரிமையும் கடமையும் ஆகும். இதற்கு அடிப்படைத் தேவை திருக்குடும்பத்தை மாதிரியாகக் கொண்டு, ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுதல், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, இரங்கும் உள்ளம் ஆகிய பண்புகளை எங்கள் குடும்பங்களில் பிரதிபலித்து வாழ முற்பட வேண்டும். அன்று பிரான்சியப் புரட்சியினால் சீரழிந்த குடும்பங்களுக்கு துணையாக திருக்குடும்ப சபை வடிவில் மலர்ந்த இயேசுவின் திருக்குடும்பம் இன்று எங்கள் மத்தியிலும் மாதிரிகை காட்டி குடும்ப வாழ்வை சிறப்பிக்க திருக்குடும்பத்திடம் மன்றாடுவோம்.

இயேசுவை அனுபவிக்க எம்மோடு வாருங்கள்!

(திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு தினத்தையொட்டி பெற்றோர் பெரியோருக்காக அளிக்கப்படும் விசேட செய்தி)

அருட்பணி. ரெஜினோல்ட் சபரமாது, திருப்பாலர் சபை தேசிய இயக்குனர்.

"இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி" என்றார். அந்த சீடர் இருவரும் அவர் சொன்னதை கேட்டு இயேசுவை பின்தொடர்ந்தனர். இயேசு திரும்பிப்பார்த்து, அவர்கள் தம்மை பின்தொடர்வதைக் கண்டு, "என்ன தேடுகிறீர்கள்?" என்று அவர்களிடம் கேட்டார். அவர்கள், "ரபி, நீர் எங்கே தங்கியிருக்கின்றீர்?" என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், "வந்து பாருங்கள்" என்றார். அவர்களும் சென்று அவர் தங்கியிருந்த இடத்தைப் பார்த்தார்கள். அன்று அவர்கள் அவரோடு தங்கினார்கள்" (யோவான் 1:36-39). திருமுழுக்கு யோவானின் செய்தியை செவிமடுத்து இறை இயேசுவை பின்தொடர்ந்த இரு சீடர்களுள் பேதுருவின் சகோதரரான அந்திரேயாவும் ஒருவராவார். அவர் இயேசுவிடம் சீமோன் பேதுருவை அழைத்து வந்தார். "...........அடுத்த நாள் இயேசு பிலிப்புவை சந்தித்து தன்னை பின் தொடருமாறு பணித்தார். பிலிப்பு நத்தானியேலை சந்தித்து அவரையும் இயேசுவிடம் அழைத்து வந்தார்.

இயேசுவை அறிந்துக் கொண்டவர்கள் அவர் அண்டை வேறு சிலரையும் அழைத்து வந்தார்கள். இது அன்று தொட்டு இன்றுவரை நடைபெற்று வருவதை நாம் காண்கின்றோம். எதிர்க்காலத்திலும் இது இவ்வாறே நடைபெற வேண்டும். "சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள்" (மாற்கு 10:14). இந்த இறையழைப்பை ஏற்றுக்கொள்ளும் நாம் எமது குழந்தைகள் அனைவரையும் இயேசுவின் அருகில் அழைத்துச் செல்வோம். ஆண்டவருடனேயிருந்து அவரிடமிருந்தே கற்றுக்கொண்டு தாம் அறிந்துகொண்ட இறைவனை, அவரைப்பற்றி இன்னும் அறியாதவர்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களையும் இயேசுவிடம் அழைத்துச் செல்ல எமது சிறார்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

"இயேசுவை அனுபவிக்க எம்மோடு வாருங்கள்" எனும் கூற்றே இம்முறை திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு தினம் மற்றும் இம்முழு ஆண்டிற்குமான மறைப்பரப்பு சிறுவர்களின் கருப்பொருளாக முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இயேசுவினுடைய சிறிய மறைத்தூதர்களாக செயல்படுவதற்கு நாம் எம்முடைய பிள்ளைகளை அர்ப்பணித்து ஊக்கப்படுத்துவோம்.

இவ்வாண்டின் திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு தினத்துடன், இன்னும் திருப்பாலத்துவ சபையில் அங்கத்துவம் பெறாதுள்ள அனைத்து



குழந்தைகளையும் திருப்பாலத்துவ சபையில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதை ஒவ்வொரு கத்தோலிக்க பெற்றோரும் மனதில் கொள்ள வேண்டும். அது உங்களது கத்தோலிக்க கிறிஸ்தவ கடமை மற்றும் பொறுப்பாகும் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். ஞாயிறு பாடசாலை, திருப்பாலத்துவ சபை என்பவற்றை எமது பிள்ளைகள் இயேசுவை அறியவும் அவரை வாழவும் ஏதுவாக்கும் வல்லமைமிக்க ஒரு தளமாக ஏற்படுத்திக் கொடுங்கள். வெவ்வேறு உலகளாவிய காரியங்களை ஆதாரமாக்கிக் கொண்டு உங்கள் பிள்ளைகள் இயேசுவின் சிறிய மறைத்தூதர்களாக மாறக்கூடிய சந்தர்ப்பங்களுக்கு தடையாக இராதீர்கள். இதுவே இம்முறை திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு தினத்தின், அனைத்து கத்தோலிக்க பெரியார்கள் மற்றும் பொற்றாருக்கு எனது ஆராதனையும் அழைப்பும் ஆகும்.

சிறார்களே, இயேசுவுக்கு நீங்கள் அனைவரும் தேவை, அவர் உங்கள் ஒவ்வொருவரையும் அழைக்கின்றார் என்பதை புரிந்துகொண்டு நீங்களும் இயேசுவின் சிறிய மறைத்தூதர்களாக மாறி, உங்களது நல்லுதாரணங்கள் மூலம், உங்கள் நண்பர் நண்பியர்களை, இயேசுவை இன்னும் அறிந்துகொள்ளாதவர்களை இறை இயேசுவின் அண்மைக்கு அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள்.

உங்கள் அனைவருக்கும் இறை இயேசுவின் அருளும் தேவ அன்னையின் அரவணைப்பும் கிடைக்கட்டும்.

எதைப் பொங்கலிட........

தமிழர் எம்வாழ்விலே தைப்பொங்கல் என்பது சிறப்பான, குதுகலமான ஒரு நிகழ்வாகும். இதனை அறுவடையின் விழா என்றும், நன்றியின் விழாவென்றும் சொல்லுவார்கள். திருவிவிலியத்திலே யூதர் பாரம்பரியத்திலே கொண்டாடப்பட்டு வந்த சிறப்பான விழாக்களில் இதுவுமொன்றாகும். இது ஒரு குடும்ப விழா மாத்திரமல்ல ஒட்டுமொத்த சமூகத்தினுடைய எழுச்சியின் விழா. இறைவன் தங்களுக்கு அளித்த அறுவடையின் பலனை காணிக்கையாக்கும் விழா. தொடக்க நாலிலே காயின், ஆபேலின் காணிக்கை பற்றிய சம்பவம் எந்தளவிற்கு இவ்விழா பாரம்பரியமும் காலத்தால் முந்தியதுமான முக்கிய ஒரு நிகழ்வு என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இன்று தமிழர் எம்மத்தியிலும் முதற்கனிகளை, முதற்பலனை ஆண்டவருக்கு காணிக்கை-யாக்குகின்ற பாரம்பரியம் காணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தை பிறந்தால் வழி பிறக்குமென்பது முன்னோர் கூற்று. ஆனால் இன்றைய நிலையில் தையும் பிறந்துவிட்டது வழிதான் இன்னும் தெரியாமல் திக்குமுக்காடிக்கொண்டிருக்கும் தமிழர் எமக்கு 2011 தை பொங்கல் எதைக்கொண்டுவரப்-போகிறது ? எதைச்சொல்லி நிற்கின்றது.

இன்று நான் தொட்டுப்பார்க்கிற எனது பூமி, எனது தாயகம் வெட்டவெளியாய் கிடக்கின்றது. என்னுடையது என்று தட்டிச்சொல்லி உரிமை கொண்டாட என்னால் முடியாதிருக்கிறது. ஆண்டாண்டு காலமாய் எனது பாட்டனார் உழுது, விதை விதைத்து, அறுவடை செய்து வந்த நிலம் இன்று மாற்றான் கைக்கு மாறிப்போனது. "ஆண்டவனே கொடுத்தா.....எங்கிட்ட

ஆக்கம் : அருட்பணி. ச. நெவின்ஸ் பீரிஸ்

கொடுத்தா....
அனுபவிடா ராஜா
அனுபவி ..." என்று
நான் அனுபவிக்க
முடியாத அறுவடை
செய்ய முடியாத
அற்பனாகி நிற்கின்றேன்.

அறுவடை விழா என்பது ஓர் ஆரவார விழா. சுற்றங்கள் சூழ்ந்திருக்க சொந்த பந்தகங்களோடு குதுகலித்து கொண்டாடும் விழா இவ்விழா. இன்று சுற்றியிருக்கும் சொந்தங்கள் சோகங்களை தாங்கிநிற்க .. எதைப்பொங்கலிடுவது.

எங்கள் கண்ணீர்களையா?....தொலைந்து போன சொந்தங்களையா?... பறிக்கப்பட்ட உறவுகளையா?...உரிமைகளையா?....

எதை நான் பொங்கலிடுவது இறைவனுக்கு நன்றியின் காணிக்கையாக?

எங்களிடம் மிஞ்சியிருப்பது என்ன கொண்டாடுவதற்கு...?.... பொங்கல் பொங்குவதற்கு ...?....

அதிகாரமில்ல ...... அன்பு இருக்கு
ஆட்சியில்ல .... அடக்கம் இருக்கு
இல்லிடமில்ல .... இரக்கம் இருக்கு
உரிமையில்ல .... உள்ளம் இருக்கு
காவலில்ல .... கல்வி இருக்கு
பணமில்ல .... பண்பாடு இருக்கு
மண்ணில்ல .... மனசு இருக்கு

இதையெல்லாம் ஒண்ணா சேர்த்து உலையிட்டு பொங்கல் பொங்குவோம். பொங்குவோம் பொங்கியெழுவோம். உள்ளதைக்கொண்டு உரம்பெற்று எழுவோம்.

தேன் கூடு

யார் இட்ட சாபமோ
எம் கூடும் சிதைந்தது
அன்னையோடு தந்தையாக
வளர்த்த நீங்கள் எங்கே
எங்கள் கடின உழைப்பால்
சிறிது சிறிதாக சேர்த்து வைத்த
எம் தேன் வதையும் பறிபோனது
கடந்த கால பசுமையான நினைவுகளுடன்
இனம் புரியாத ஏக்கம் கலந்த
தவிப்புடன் தனிமையான உணர்வுடன்
வாழ்கிறேன் தேனீயாக

திமிரு யாழ் மயிலணி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"கிறிஸ்துவின் முப்பெரும் பணிகளில் பொதுநிலையினரின் பங்கு"

ஆக்கம்: அருட்சகோதரன் இ. அன்ரனி சோசை
2ம் வருட இறையியல், தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

காலம் மாறுகின்றது, மனிதன் மாறுகின்றான், கலாசாரம் வளர்கின்றது. நாகரீகம் புதுமை பெறுகின்றது, மனிதனின் சிந்தனையும் செயற்பாடும், கொள்கையும், குறிக்கோளும் மாறுகின்றன. மாறும் உலகத்திற்கேற்ப திருச்சபையும் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் உலகிலேயே நிறுவப்பட்டு இவ்வுலகிலேயே இயங்கும் திருச்சபையும் இறையேசுவின் பணியை மாறும் உலகிற்கேற்ப தொடர்ந்து நடத்தி, மீட்பின் அருள் அடையாளமாக செவ்வனே செயற்படுத்த மாறவேண்டிய நிலை ஏற்படுகின்றது. திருச்சபையிலே இதுவரை குருகுலத்தார் ஆற்றிவந்த ஒரு சில பணிகளை இப்பொழுது பொது நிலையினரும் ஆற்ற வழிவகுத்து தந்திருக்கின்றது இரண்டாம் வத்திக்கான் சங்கம். திருச்சபையின் புனிதப் படுத்தும், போதிக்கும், ஆளுகின்ற முப்பெரும் பணிகளிலும் பொதுநிலையினர் குருகுலத்தாருடன் இணைந்து செயல்பட அழைக்கப்பட்டுள்ளனர். இயேசுக் கிறிஸ்து குருவாக இருந்து மக்களைப் புனிதப்படுத்து-கின்றார். ஆசிரியராக இருந்து மக்களுக்குப் போதிக்கின்றார். அரசராக இருந்து மக்களை ஆளுகின்றார். இம் முப்பெரும் பணிகளில் திருமேய்ப்பர்கள் மட்டுமல்ல பொதுநிலையி-னரும் தங்களுக்கே உரித்தான வகையில் பங்குபெறுகின்றனர் என்பதை திருச்சங்கம் மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

"உலகைச் சார்ந்திருக்கும் பண்பு பொதுநிலையினருக்கு உரியதும், தனிப்பட்ட வகையில் அவர்களைச் சார்ந்ததுமாகும்.... உலக காரியங்களில் ஈடுபட்டு உழைக்கும் கால், அவர்களை இறைவனின் திட்டப்படி நெறிப்படுத்துவதன் மூலம் இறைவனின் அரசை அமைக்க தேடுவது தங்களின் தனிப்பட்ட அழைப்பால் பொதுநிலையினரை சார்ந்தது" (திருச்சபை எண் 31).

சங்கத்தின் கோட்பாட்டின்படி உலகைச் சார்ந்திருந்து உலகியல் அமைப்பை நற்செய்தி உணர்வால் ஊடுருவி நிறைவுபடுத்துவது பொதுநிலையினருக்கே உரித்தான பணியாகும். உலகியல் அமைப்பு என்னவென்பதையும் சங்கம் தெளிவாக விளக்குகின்றது. இவ்வுலக காரியங்கள் அனைத்திலும் நற்செய்தி மனப்பாங்குடன் செயல்பட்டு தாங்கள் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு துறையையும் நற்செய்தி உணர்வால் ஊடுருவி, அதை கிறிஸ்துவில் நிறைவு செய்யும் பணியை பொதுநிலையினர் மட்டுமே செய்யமுடியும். "பொதுநிலையினர் உலகையே இறைவனுக்கு அர்ப்பணி-க்கின்றனர்" (திரு. எண் - 34). இதைவிட மேலான் ஒரு புகழாரத்தை திருச்சபை பொதுநிலையினருக்கு சூட்டமுடியாது என்று கூடக் கூறலாம். கிறிஸ்துவின் பொதுக் குருத்துவத்தில் பங்குபெறும் பொதுநிலையினர் உலகையே இறைவனுக்கு வசீகரம் செய்து அர்ப்பணிப்புடன் கிறிஸ்துவுக்காக பணியில் ஈடுபட அழைப்பு விடுக்கப்படுகின்றது. இதே கருத்தினை திருச்சபையின் சட்டத்தொகுப்பும் அழகாக எடுத்துரைக்கின்றது.

"ஒவ்வொருவருடைய நிலைக்கேற்ப உலகியல் அமைப்பை நற்செய்தி உணர்வால் ஊடுருவி நிறைவு செய்யும் சிறப்பு கடமையை பொதுநிலையினர் கொண்டுள்ளனர். இவ்வாறு குறிப்பாக இவ்வுலக காரியங்கங்களையும், அலுவல்களையும் நடத்துவதன் மூலம் கிறிஸ்துவுக்கு சான்று பகர வேண்டியவர்களாக இருக்கின்றனர்". (தி.ச.எண் 222:2) உலக காரியங்களில் ஈடுபட்டு உலகியல் அமைப்பை நற்செய்தி உணர்வால் ஊடுருவி நிறைவு செய்யும் கடமையை பொதுநிலையினரின் சிறப்பு கடமை என்றழைக்கின்றது திருச்சபைச் சட்டம். இவ் அரச, குருத்துவ, போதிக்கும் பணிகளில் பொதுநிலையினரை திருச்சபை சட்டத்தொகுப்பு எவ்வாறு ஈடுபட செய்துள்ளது என்பதனையும் திருச்சபைச் சட்டத்தில் பொதுநிலையினரைப் பற்றி பல்வேறு பகுதிகளில் கூறப்பட்டுள்ளவைகளையும், அதனை நமது சூழமைவுக்கேற்றவாறு எவ்வாறு ஈடுபடுத்தலாம் என்பதனையும், பொதுநி-லையினரது பணியினையும் பற்றி ஆராய்வோம்.

பொதுநிலையினரின் புனிதப்படுத்தும் பணி:

"குருக்கள் அல்லது திருத்தொண்டர்கள் இல்லாத சூழ்நிலையில் வேறொரு பொது நிலையினரை திருமுழுக்கு வழங்க ஆயர் நியமிக்கலாம்." (சட் 861)

"குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பொதுநிலையினர் திவ்விய நற்கருணை வழங்கலாம்" (சட் 910)

"அவசியம் ஏற்படும் பொழுது கடின நோய்வாய்ப்பட்டுள்ளவர்களுக்கு இறுதியுணவாக திவ்விய நற்கருணையை பொதுநிலையினர் வழங்கலாம்." சட் 911

"திருமணம் என்ற அருளடையாளத்தை நிறைவேற்றுபவர்கள் பொதுநிலையினர், அதாவது மணமக்கள். குருவானவர் தம்பதியினர்களின் சம்மதத்தை திருச்சபையின் பெயரால் ஏற்று திருமணக் கொண்டாட்டத்தை நிறைவேற்றுபவர் ஆவார். ஆனால் புதிய சட்டத்தின்படி ஒரு சில நிபத்தனைகளுக்கேற்ப பொதுநிலையினர் திருச்சபையின் பெயரால் மணமக்களின் சம்மதத்தைப் பெற்று அவர்களது திருமணக் கொண்டாட்டத்தை நிறைவேற்றலாம்." (சட் 1112)

"வாசகர் பணி, திருப்பீடப்பணி ஆகிய இரு பணிகளையும் திருச்சடங்குகள் மூலம் நிரந்தரமான வகையில் ஆண்பால் பொதுநிலையினருக்கு வழங்கலாம்" (சட் 230) திருச்சபையில் திருப்பணிகள் இருவகைப்படும். ஒன்று நிறுவப்பட்ட பணிகள் (Instituted ministries) மற்றொன்று திருப்பட்ட பணிகள் (Ordained ministries) வாசகர், திருப்பீடப் பணிகள் முன்னயதையும், குருத்துவ, திருத்தொண்டர்பணிகள் இரண்டும் பின்னயதையும் சார்ந்தன ஆகும். இவ்வாறாக திருப்பட்ட பணிகளை விட நிறுவப்பட்ட பணிகளிஞை நிறைவேற்றுவதற்கும் அத்துடன் ஒருசில

நிறுவப்பட்ட பணிகளை சில விதிவிலக்குகளுடன் நிறைவேற்றுவதற்கும் 2ம் வத்திக்கான் சங்கம் தனது பாதையினைத் திறந்து விட்டுள்ளது. அத்துடன் அருளடையாளங்களை தகுந்த முறையில் பெறுவதற்கு மக்களைத் தயாரிக்க பொதுநிலையினருக்கும் கடமை உண்டென திருச்சபை சட்டம் எண் 843 பிரிவு 02 கோடிட்டுக் காட்டியுள்ளது.

திருச்சபையில் பொதுநிலையினராகிய எமக்கு இவ்வாறெல்லாம் கடமைகளும் பொறுப்புக்களும் உள்ளது என்று வெறுமனே மார்பு தட்டிக்கொண்டு பெருமிதம் அடையாது கிறிஸ்துவின் மகிமைக்காக எமது வாழ்வினை அர்ப்பணம் செய்து அருள் பணியாளர்களுடன் இணைந்து திருச்சபையினை வளர்க்க முனைவோம்.

போதிக்கும் பணி:-

"பொது நிலையினரான கிறிஸ்துவின் விசுவாசிகள் தங்களுடைய திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் எனும் அருட்சாதனத்தின் காரணமாக தங்களுடைய சொல்லாலும் கிறிஸ்தவ வாழ்வின் எடுத்துக்காட்டாலும் நற்செய்திக்கு சான்று பகர்கின்றனர். இறைவார்த்தைப் பணியில் ஆயர்கள் குருக்களுடன் ஒத்துழைக்க அவர்களும் அழைக்கப்படலாம்" (சட் 759)

எனவே இறைவார்த்தைப் பணியில் பொதுநிலையினர் அருட்பணியாளர்களுடன் இணைந்து ஒத்துழைக்க அழைக்கப்படுகின்றனர். தேவைப்படும் பொழுது அல்லது பயனுள்ளது எனக் கருதப்படும் பொழுது ஆயர் பேரவையின் விதிமுறைக்கேற்ப ஆலயங்களிலும் சிற்றாலயங்களிலும் பொதுநிலையினர் போதிக்கலாம். ஆனால் திருப்பலியில் திருவுரையை குருக்கள் அல்லது திருத்தொண்டர்கள் மட்டுமே ஆற்ற முடியும் (சட் 766) குடும்பத்தில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மறைக்கல்வி புகட்டும் முதன்மையான பணியினையும் பங்குத் தளத்தில் மறைகல்வி புகட்டும் பணியை நிறைவேற்றுவதில் பங்குக் குருவுடன் ஒத்துழைத்து போதிக்கும் பணியில் ஈடுபடவும் பொதுநிலையினருக்கு கடமை உண்டென சட்டம் நமக்கு விளக்குகிறது. மறைதூதுரைக்கும் பணி கிறிஸ்துவின் எல்லா விசுவாசிகளின் பொறுப்பாகும் (சட் 781).

சட்டத்தில் கூறப்பட்டுள்ள யாவற்றையும் கருத்தில் கொண்டு நாம் (பொதுநிலையினர்) அருட்பணியாளர்களுடன் இணையானவர்கள் என்று கூட எண்ணலாம். ஆனால் சட்டத்தினது உட் பொருளினையும் அவ்வாறான சட்டம் இயற்றப்பட்டதற்கான காரணத்தினையும் மனதிற்கொண்டால் தான் அவ்வாறான குறுகிய மனப்பாண்மையிலிருந்து விடுபட்டு சீரிய சிந்தனையில் எம்மை ஈடுபடுத்தி இறையரசின் விழுமியங்களை எமதாக்க உழைக்க முடியும். எனவே அருட்பணியாளர்களுடன் இணைந்து அவர்களது வழிநடத்தலின் கீழ் நமது பணிகளை மேற்கொள்ள முனைவோம்.

ஆளும் பணி:

திருச்சபையில் ஆளும் அதிகாரம் குறிப்பாக குருகுலத்தாருக்கு மட்டுமே அளிக்கப்பட்டு வந்தது. இவ்வதிகாரப் பரவலாக்கலில் பொதுநிலையினருக்கு எவ்வித பங்குமில்லை என்பது தான் திருச்சபையில் இருந்து வந்த மரபு நிலை. இந்நிலையினை 2ம் வத்திக்கான் சங்கம் ஓரளவு தளர்த்தி பொதுநிலையினருக்கும் திருச்சபையின் ஆளும் பணியில் பங்கு பெற வழியைத் திறந்து விட்டது. ஆன்மீக நோக்கத்திற்கென திருச்சபையின் ஆட்சி சம்மந்தமான சில அலுவல்களை நிறைவேற்ற திருச்சபை அதிகாரிகளால் பொதுநிலையினர் சிறப்பாக அழைக்கப் பெறுவதற்கு தகுதி பெற்றிருக்கின்றனர்.

என்றுமில்லாத புது வலிமையுடனும் பொறுப்புடனும் திருச்சபையிலும் உலகிலும் பணியாற்ற பொதுநிலையினரை திருச்சபைச் சட்டம் அழைத்து நிற்கிறது. திருச்சபையின் எல்லா மட்டங்களிலும் எல்லாத் துறைகளிலும் அவர்கள் புகுவதற்கு வழிவகுத்துள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் தமக்கு அளித்துள்ள புதிய பொறுப்புக்களை ஏற்க பொதுநிலையினர் தயாராக இல்லாமல் இருக்கலாம் அல்லது தயங்கலாம் அல்லது எதைபற்றியும் அலட்டிக்கொள்ளாத எதிலும் ஈடுபாடு கொள்ளாத மனநிலையில் இருக்கலாம். திருச்சபையில் தாங்கள் யார்? தங்கள் பணி என்ன? என்பதனை பொதுநிலையினர் உணர்ந்து கொள்ள வேண்டும். தங்களுக்குத் திருச்சபை அளித்துள்ள பொறுப்புக்களையும் புது நிலையையும் பொது நிலையினர் உணர்ந்தாலன்றி (புதியசட்டம்) திருச்சபைச் சட்டம் வெறும் ஏடாகவே இருக்கும். திருச்சபையின் அடி மட்டத்திலிருந்து மேல்மட்டத்திற்கு பொதுநிலையினர் வரவேண்டும்.

திருமண விருந்துக்கு வந்து கடைசி இருக்கையில் அமர்ந்த நண்பனைப் பார்த்து வீட்டுத்தலைவன் "நண்பா மேலிடத்திற்குப் போவோம்" என்று கூறியதுபோல் இதுவரை இறுதி இருக்கையில் இருந்த பொதுநிலையினரை மேலிடத்திற்கு வரும்படி திருச்சபை அழைக்கிறது. பொதுநிலையினரும் தங்களது புதிய பொறுப்பை உணர்ந்து மேய்ப்பர்களுக்கு உரிய மரியாதை கொடுத்து அவர்களுடன் மீட்புப் பணியில் ஒத்துழைக்க வேண்டும். இதன்மூலம் மேய்ப்பர்களிடமிருந்த அதிகாரத்தை பறிக்க வேண்டும். எதற்கெடுத்தாலும் அவர்களைக் குறைகூறிக்-கொண்டே இருக்க வேண்டுமென்ற போட்டி மனநிலையையும் எதிர்ப்பு மனநிலையையும் அகற்றி ஆக்க பூர்வமாக தங்கள் பணிகளை நிறைவேற்ற பொதுநிலையினர் பயிற்சி பெற வேண்டும் பொதுநிலையினரின் பணிகளைப் பொறுத்தமட்டில் மேய்ப்பர்கள் அவர்களை ஏற்றுக்கொண்டு அவர்களது பணிகளுக்கு ஊக்கமளித்துக்கொண்டு அவர்களைப் பேணி வளர்க்க வேண்டும். (சட் 275:2)

பொதுநிலையினர் உலகில் திருச்சபையை பிரபலிக்கின்றனர் என்ற நிலையிலிருந்து பொது நிலையினரே உலகில் திருச்சபை என்ற நிலைக்கு உயராவிட்டால் பொதுநிலையினரின் பொற்காலம் வெறும் கனவு மட்டத்தில் முற்றுப்புள்ளி பெற்று நிஜத்தினில் பிரசவிக்க வழியற்று போய்விடும். எனவே குருகுலத்தாருடன் பொதுநிலையினரும் இணைந்து திருச்சபையின் வளர்ச்சியில் ஈடுபட்டு பொற்காலத்தை வாழ்வில் அனுபவிக்க முயல்வோம்.

1ம் பக்கத்தொடர்ச்சி.....

அருளாளர் யோசப்வாஸ் .....

செபமாலையைக் கழுத்தில் அணிந்து கொண்டும், பிதா, சுதன்.... எனும் சிலுவை அடையாளத்தை வரைந்து கொண்டும் வீடு வீடாக, ஊர் ஊராக, சென்று காடுகளில் பயந்து ஒளிந்து வாழ்ந்த கத்தோலிக்கர்களைக் கண்டு பிடித்து உற்சாகமூட்டி எம் முன்னோரின் விசுவாசத்தை தூண்டி வளர்த்தவர் எம் அருளாளர் அவர்களாவார்.

இவர் ஏழ்மையை வாழ்வாகவும் எளிமையை ஆடையாகவும் அணிந்து, நம் நாட்டு மக்களின் மொழி, கலை கலாசார, பண்பாட்டை அறிந்து இரண்டறக் கலந்து இறைபணியாற்றினார். 60வயது வரை காலில் செருப்பணியாது பல்வேறு துன்பங்களை அனுபவித்து கடல், காடு, மலைகளைக் கடந்து எம்முன்னோருக்குப் பணிசெய்தார். இவர் 16.01.1711ம் ஆண்டு இறைபதமடைந்தார். கண்டி மாநகரிலே மூன்று நாட்கள் அரச மரியாதைக்காக வைக்கப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் சிந்த நல்லடக்கம் செய்யப்பட்டார். புதைத்த இடம் தற்போது மறைக்கப்பட்டுவிட்டது.

இவருக்கு 21-01-1995ம் ஆண்டு திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரால் கொழும்பிலே அருளாளர் பட்டம் வழங்கப்பட்டு பீடத்தில் வழிபடும் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

தற்கால தொழில்நுட்ப வளர்ச்சியை துஸ்பிரயோகம் செய்து நுகர்வு சாதனங்களுக்குள் புகுந்து கத்தோலிக்க விசுவாச வாழ்வை இழந்து போகும் ஆபத்தான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் இளம் சமுதாயத்தினதும் நம் எல்லோரினதும் விசுவாச வேரை மீண்டும் ஆழப்படுத்த வலம் வரும் ஒரு உன்னத நிகழ்வுதான் அருளாளர் அவர்களின் விண்ணகப் பிறப்பு விழா நிகழ்வு

அருளாளரின் முன்னூறாவது விண்ணகப் பிறப்பு விழாவைக் கொண்டாடும் நாம், அவரை விரைவில் திருச்சபைத்தாயானவள் புனித, தூய நிலைக்கு உயர்த்த தொடர்ந்து செபிப்போம். அத்துடன் அவருடைய தற்கையளிப்பு நிறைந்த அர்ப்பணிப்பையும், புனித வாழ்வையும், வாஞ்சையுடன் ஆற்றிய பணியையும் ஆவலுடன் அறிந்து எமது கத்தோலிக்க விசுவாசத்தை சாட்சிய வாழ்வுடன் காக்க விழித்தெழுவோம்.

1ம் பக்க தொடர்ச்சி.....

அருளாளர் யோசப்வாஸ் தேசிய மட்ட விழா

"ஒல்லாந்தர் ஆட்சிக்கால வேத கலாபனையின் கீழ் எமது முன்னோரின் விசுவாசத்தை பாதுகாத்த அருளாளர் யோசப்வாஸ் எனும் இறைவனின் கொடைக்காக எமது விண்ணகத் தந்தைக்கு நன்றி கூறும் கொண்டாட்டத்தில் பெருந்தொகையான விசுவாசிகளும் துறவிகளும் பங்கேற்பதை நாங்கள் எதிர்பார்த்திருக்கின்றோம்" என குறிப்பிட்டுள்ள ஆயர் அவர்கள், இலங்கை திருத்தூதர் அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரை புனிதர் நிலைக்கு உயர்ந்தும் செயற்பாட்டிற்கான தேசிய செயலகம் சார்பாக, எல்லா திருநிலையினர், துறவியர் மற்றும் இறைமக்கள் அனைவரையும் தை 15, 2011 அன்று தேவத்தையில் நடைபெறவுள்ள விழாவில் இணைந்து கொண்டு எமது அன்புக்குரிய திருத்தூதரின் திருப்பீட புனிதர்நிலை உயர்வுக்காக செபிக்கும் படி அழைப்பு விடுப்பதில் நான் பெருமகிழ்வடைகிறேன்" என அருளாளர் யோசப்வாஸ் தேசிய செயலக தலைவர் ஆயர் வியானி பெர்ணான்டோ அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

1ம் பக்க தொடர்ச்சி.....

அமரர் அருட்பணி. மேரி பஸ்ரியன் .....

அன்றைய தினம் காலை 6.00 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டது. திருப்பலியை தொடர்ந்து பங்கு பணிமனை முன்பாக உள்ள அமரர் பஸ்ரியன் அடிகளாரின் உருவச்சிலைக்கு முன் நினைவு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. வங்காலை பங்குத்தந்தை அருட்பணி. ஜெயபாலன் குரூஸ் அடிகளாரின் தலைமை உரை, ஆயர் அவர்களின் இரங்கல் உரை, பங்கு அருட்பணி பேரவையின் இரங்கல் கவி, அமரர் பஸ்ரியனின் புகழ் கூறும் பாடல் என உணர்வுபூர்வமாக நினைவு கூறப்பட்ட இவ்விரங்கல் நிகழ்விற்கு யாழ் மறைமாவட்டத்தில் இருந்து முன்னாள் யாழ் பெரிய குருமட அதிபர் அருட்பணி. மங்கள ராஜா அடிகளாரும் யாழ். நெய்தல இயக்குனர் அருட்பணி. ஜெயசேகரம் அடிகளாரும் கொழும்பு உயர் மறைமாவட்ட குரு அருட்பணி. டெரன்ஸ் அடிகளாரும் மற்றும் பல மன்னார் மறைமாவட்ட குருக்கள் அருட்சகோதரிகள் பங்குமக்களும் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் திருச்சபையின் வளர்ச்சியில் அருளாளர் யோசப்வால் அடிகளாரின் பங்களிப்பு

அருட்தந்தை
ம.க.அருள்பிரகாசம்

முன்னுரை

அருளாளர் யோவப்வாஸ் அடிகளாரின் முன்னூறாவது ஆண்டு விண்ணகப் பிறப்பு விழாவை 2011ம் ஆண்டு தை மாதம் 15ம் திகதி தேசிய திருத்தலமாகிய தேவத்தைப் பேராலயத்தில் சிறப்பாக கொண்டாட ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருவதை நாம் அறிவோம். ஏனென்றால் ஒல்லாந்தர்கள் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் கத்தோலிக்க திருமறையை பூண்டோடு அழிக்க முயன்றனர். கத்தோலிக்க ஆலயங்கள் எல்லாம் இடிக்கப்பட்டன. பல கத்தோலிக்க ஆலயங்களை கல்வினிஸ்ட் மத ஆலயங்களாக மாற்றினர். கத்தோலிக்க மக்கள் காடுகளில் ஒளிந்தும், சைவம், பௌத்தம், முஸ்லிம் மதங்களுக்கும் மாறினர். 30 வருடங்களுக்கு மேலாக கத்தோலிக்க குரு எவரும் இல்லாமல் சின்னாபின்னமாக்கப்பட்டு சீரழிந்த வாழ்க்கை வாழ்ந்தனர். இவ்வாறு கத்தோலிக்க மறை அடக்கி ஒடுக்கப்பட்டு மறைந்து போய் இருந்தவேளையிலே, எம்முன்னோரின் விசுவாசத்தை தூண்டி வளர்ப்பதற்காக கோவை மைந்தன் இரவலர் போல் வேடமணிந்து இலங்கை வந்து எம் மூதாதையரின் விசுவாசத்தை துளிர்விடச் செய்தார். அதனால் தான் அவர் "இலங்கையின் திருத்தூதர்" என போற்றப்படுகின்றார். அவரது முன்னூறாவது விண்ணகப் பிறப்பு விழாவைக் கொண்டாடவுள்ளோம். அவரது அயரா பணியினால் மன்னார் திருச்சபை வளர்ச்சி கண்டது.

வேதசாட்சிகளின் மண்ணில்

1658ம் ஆண்டு தொடக்கம் 1687ம் ஆண்டு வரை இலங்கையில் கத்தோலிக்க மறை தடை செய்யப்பட்ட நிலையையும், கத்தோலிக்க குரு எவருமில்லாமல், அவமானத்துக்குட்பட்ட நிலையில் இலங்கைக் கத்தோலிக்கர்கள் வாழ்ந்து வரும் இக்கட்டான சூழ்நிலையையும் அறிந்த அருளாளர் யோசப்வாஸ் அடிகளார் இலங்கைக்குள் நுழைய பல வருடங்களாக தன்னை தயார்படுத்திக் கொண்டார். காலம் கனிவுற்றதும் இலங்கைக்குள் குறிப்பாக யாழ்ப்பாண இராட்சியத்திற்குள் நுழைய உடன் தோழன் யோணுடன் படகேறினார். வரும் வழியில் ஏற்பட்ட புயல் காற்றினால் 20 நாட்களுக்கு மேலாக அலைக்களிக்கப்பட்டு மறைசாட்சிகளின் மண்ணாகிய மன்னார் தீவில் இறக்கி விடப்பட்டார்.

இவர் 1687ம் ஆண்டு வைகாசி மாதம் மன்னார்த்தீவில் கால் பதித்தார் (பெணியோலா : 1983: 528). இவர் மன்னார் நகரத்தில் சில நாட்கள் வீடு வீடாகச் சென்று பிச்சையெடுத்து தனது உடலைத் தேற்றிக் கொண்டார். (டி.ஜீ.பெரேரா: 1994:89). இவ்வாறு மறைசாட்சிகள் மண்ணில் கால்பதித்தவர். மன்னார்த்தீவு இலங்கையின் ஒரு பகுதி அல்லது யாழ்ப்பாண இராட்சியத்தில் ஓர் இடம் என அறிந்ததும் பணியின் ஆர்வத்தின் நிமித்தம் இப்புனித பூமியை முத்தமிட்டார், ஆசீர்வதித்தார். தனது பணியின் தொடக்கத்தை முன்னிட்டு இறைவனுக்கு நன்றி கூறி செபித்தார். சவுத்பாரில் வந்திறங்கினார் என மக்களின் கருத்துக்கள் ஆய்வுக்குட்படுத்தி உறுதி செய்யப்பட்டுள்ளது.

மடுப்பகுதியில்

மன்னார்த் தீவிலிருந்து யாழ்ப்பாணம் சென்றவர் அங்கு நீண்ட காலம் பணியாற்ற முடியவில்லை. ஒல்லாந்து அதிகாரிகள் அவரைப் பிடிக்க வலை வீசியவண்ணமிருந்தனர். அதனால் அவர் வன்னியினூடாக புத்தளம் சென்றார் என அறிய முடிகின்றது. இவ்வாறு வன்னியினூடாக புத்தளம் செல்லும் வழியில் மடுக்கானகத்தே மாந்தை மாதாவுடன் மறைந்து சீவித்த மாந்தை மக்களைக் கண்டு அவர்களோடு சில மாதம் தங்கி திருப்பலி, அருட்சாதனங்களை நிறைவேற்றி அவர்களுடைய விசுவாசத்தை மேலும் ஆழப்படுத்திச் சென்றுள்ளார். (அன்ரனைனஸ் 1956:1979:41-42).

பெரியமுறிப்புக்கு அருகாமையில் உள்ள ஓர் சிறிய கிராமமாகிய கள்ளிக்குளத்தில் அருளாளர் அவர்கள் ஒரு சிலுவை நாட்டியுள்ளார். அது தற்போது அடர்ந்த காடாக காட்சியளிக்கின்றது. வேட்டைக்குச் செல்லும் பெரிய குஞ்சுக்குள, பெரிய முறிப்பு மக்கள் அங்கிருந்த அக்குருசு சம்மனசு சுவாமியால் நாட்டப்பட்டதெனக்கூறி, அதைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி கொணர்ந்து, தமக்கு நோய் ஏற்படும் போது அதைத் தண்ணீரில் கரைத்துக் குடித்தும், பூசியும் குணம் பெற்றுள்ளதை இப்போதும் அம்மக்கள் வாய்மொழியாக பேசி வருகின்றனர். 1704ம் ஆண்டு மீண்டும் மடுப்பகுதிக்கு அருளாளர் வந்துள்ளார். (பேணியோலா: 1984:226) அருளாளர் அவர்கள் 1705ம் ஆண்டு மடு ஆலயத்தின் பரிபாலகராக நியமிக்கப்பட்டுள்ளார் (கிருபானந்தன்: 2007:89)

மாதோட்டத்தில்

1693ம் ஆண்டு அருளாளர் அவர்கள் மாதோட்டத்திற்கு வருகை தந்துள்ளார். ஒருவருட காலமாக அம்மக்களின் விசுவாசத்தை ஆழப்படுத்திய பின் 1694ல் பறப்பாங்கண்டலில் அவர் ஆலயம் ஒன்றைக் கட்டினார் என 1875ம் ஆண்டு "யாழ்ப்பாணத்து திருச்சபையின் வழிகாட்டி" எனும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. {அன்ரனைனஸ் (1956) 1979:41-43} மாதோட்டத்தில் சிதறி வாழ்ந்த கத்தோலிக்கர்களைக் கண்டு, ஊர் ஊராக, கிராமம் கிராமமாக சென்று அருட்சாதனங்களை வழங்கி திருப்பலி நிறைவேற்றியுள்ளார். கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழ்ந்த பறப்பாங்கண்டல் பகுதியில் அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரும் ஒரேற்ரோறியன் குருக்களும் தமது இருப்பிடத்தை அமைத்து பிரமாண்டமான ஆலயத்தைக் கட்டியெழுப்பி வடக்கு கிழக்கு தமிழ்பிரதேசத்தின் மையத்தளமாக அமைத்து பணியாற்றி வந்தனர். மாதோட்ட மக்கள் மத்தியில் காணப்பட்ட குருட்டு நம்பிக்கை, பில்லி சூனியம் போன்ற விடயங்களை இல்லாதொழித்து மறையறிவை வளர்த்தவராவார். மூப்பர் அண்ணாவி முறைகளை ஏற்படுத்தினார். அருளாளர் அவர்கள் மாதோட்டத்தில் பணியாற்றிய காலத்தில் மன்னார்த்தீவிலிருந்து கத்தோலிக்கர்கள் பெருமளவில் வந்து அருட்சாதனங்களைப் பெற்றுக் சென்றுள்ளனர். (எஸ்.ஜு.பெரேரா 1948:136-137) மாதோட்டத்தில் நான்கு வருடங்கள் பணியாற்றிய பின்னர் அவர் தனது முதல் கனிகளைப் பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் சென்றுள்ளார். மீண்டும் 1698ம் ஆண்டு மன்னார் மாதோட்டப் பகுதிகளுக்கு வந்து எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் அருட்சாதனங்கள் வழங்கியுள்ளார். (பேணியோலா 1983:173)

பறப்பாங்கண்டல் பெரிய கோவிலில் யூபிலிப் பிரகடனம்

அருளாளர் அவர்களின் அயராப் பணியின் நிமித்தம் அவரை இலங்கையின் குரு முதல்வராக கோவை ஆயர் நியமித்தார். அத்துடன் பல ஒரேற்றேறியன் குருக்களையும் உதவிக்கு அனுப்பினார். குருமுதல்வராக நியமனம் பெற்றதும் அவர் இலங்கையை மூன்று பாகமாகப் பிரித்து மாதோட்டத்தில் பறப்பாங்கண்டல் பெரிய கோவிலை வடக்கு கிழக்கு பிரதேசத்தின் தலைமையகமாக அமைத்து அதற்குப் பொறுப்பாக அருட்தந்தை பேதுரு பெரேரோவை நியமித்தார். மற்றைய தலைமையகங்களுக்கு அடிக்கடி சென்றது போன்று மாதோட்டத்திற்கும் பலமுறை வருகை தந்துள்ளார் (டி.ஜு.பெரேரா: 1994:89) மாதோட்டப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த அருட்தந்தை பேதுரு பெரேரோ சுகவீன முற்றிருந்த வேளையில் கோவை நகரிலிருந்து யூபிலிச் செய்தியைக் கொண்டுவந்த அருட்தந்தை பேதுரு டி சல்டானோவுடன் அருளாளர் அவர்கள் பறப்பாங்கண்டல் பெரிய கோவிலுக்கு வருகை தந்து அவ்வாலயத்தில் யூபிலி ஆண்டைப் பிரகடனப்படுத்தியுள்ளார். (பேணியோலா : 1984:216) உயிர்த்தராசன் குளத்திலிருந்து (கட்டுக்கரைக் குளத்துக்கு அருகாமை) பறப்பாங்கண்டலூடாக வட்டக்கண்டல் வரை ஒரு பாதை போகின்றது. அதை "யூபிலி றோட்" என மக்கள் அழைத்து வருகின்றனர். இப்பாதையானது அருளாளர் யோசப்வாஸ் அடிகளார் பறப்பாங்கண்டல் பெரிய கோவிலில் பணிபுரிந்த காலத்தில் உருவாக்கப்பட்டதாக மக்கள் நம்பி வருகின்றனர். மேலும் 1704ம் ஆண்டு மாதோட்டப் பகுதியிலும் மடுப் பகுதியிலும் பல பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று அருளாளர் அவர்கள் அருட்சாதனங்களை நிறைவேற்றி வந்துள்ளார் என அறியக்கூடியதாக உள்ளது. (பேணியோலா : 1983:286)

ஏனைய இடங்களில் பணியும் சிலுவையும்

அருளாளர் அவர்கள் புத்தளத்தில் இருந்து, சிலாபத்துறை, முத்தரிப்புத்துறை, நானாட்டான், மாதோட்டம் (பறப்பாங்கண்டல்) மடு, மன்னார் ஆகிய இடங்களுக்கு கால்நடையாக சென்று அருட்சாதனங்கள், திருப்பலிகள் நிறைவேற்றியுள்ளார். இப்பிரதேச மக்களின் வாய்மொழிப் பாரம்பரியத்தின்படி சவுத்பார், கள்ளிக்குளம் (பெரியமுறிப்பு), சிலாபத்துறை, அரிப்புத்துறை, தலைமன்னார், பெரிய கரிசல், தம்பனைக்குளம், வவுனியா ஆகிய இடங்களில் சிலுவை நாட்டியுள்ளார். இச்சிலுவைகள் அனைத்தும் பழைய கோவாவில் இயேசு காட்சி கொடுத்த சிலுவை வடிவை கொண்டதாக உள்ளது. இதை ஒரேற்றேரியன் சிலுவை என்றும் அழைப்பார்கள். தம்பனைக்குளம், மடு, பெரியகுஞ்சுக்குளம் பகுதிகளில் சம்மனசுச் சுவாமி என அன்போடு அழைக்கப்பட்டார்.

முடிவுரை

அருளாளர் அவர்கள் மன்னார் வேதசாட்சிகள் மண்ணில் கால்பதித்து, பின்னர் மாதோட்டம், வன்னி, மடு, அரிப்பு, நானாட்டான், சிலாபத்துறை, மன்னார்த் தீவு ஆகிய இடங்களில் பல்வேறு சிரமங்கள், கஸ்ரங்கள் மத்தியிலும் சிறப்பாக அர்ப்பணிப்போடு பணியாற்றி மன்னார்த் திருச்சபையின் வளர்ச்சியில் பாரிய பங்காற்றியுள்ளார். இவர் புனிதநிலைக்கு உயர்த்தப்பட தொடர்ந்தும் செபிப்போம்.

அன்னைமரியாளுக்கு அருளாளர் ஜோசப்வாஸ் எழுதிய "அர்ப்பண சாசனம்"

குருவாகிய ஜோசப்வாஸ் எனும் பெயர் கொண்ட நான் என்னை முழுவதும் இறைவனின் அன்னை மரியாளுக்கு அடிமையாக வாழச் சமர்ப்பணம் செய்கிறேன் என்பதை, இந்த அர்ப்பண சாசனத்தைப் படிக்கும் வானதூதர்கள், புனிதர்கள், மனிதர்கள் மற்ற பிற படைப்புகள் அனைவரும் தெரிந்து கொள்ளட்டும். முழுமனதுடன் சுதந்திரமாக ஒரு மாபெரும் பக்தி முயற்சியாகச் செய்கிறேன். இது வாழும் மனிதர்களின் அழிக்க முடியாத அர்ப்பண சாசனம் என்று கருதப்படட்டும். என்னையும் எனது உடைமைகள் அனைத்தையும், அன்னை மரியாளுக்கு அளித்து அவரது விருப்பப்படி பயன்படுத்தவும், பிறருக்கு கொடுக்கவும் முழுமையாக அர்ப்பணிக்கின்றேன். இப் புனித மகிமையைப் பெற எனக்கு எத்தகுதியும் இல்லை, எனவே போற்றுதலுக்கும் வணக்கத்துக்குமுரிய எனது காவல் தூதர், முது பெரும் தந்தை சூசையப்பர் விண்ணகத்தார் அனைவரையும் எனக்கு இந்த அர்ப்பண தகுதியைப் பெற்றுத்தர வேண்டுமென்று வேண்டி நிற்கிறேன். எனது பெயரால் இறை உறுதி செய்து கையெழுத்திடும் நான், என் நெஞ்சின் இரத்தத்தால் இந்த அர்ப்பண சாசனத்தை முத்திரையிட விரும்புகிறேன். இந்த சாசனத்தை கன்னிமரியாளும், கடவுளின் தாயுமான ஆரோக்கிய அன்னையின் சான்கோல் ஆலய பீடத்தின் அடியில் 5, ஓகஸ்ட் 1677, பனிமயமாதா திருவிழாவன்று எழுதுகிறேன்.

ஜோசப்வாஸ்

காவிய நாயகன் வண. ஜோசப்வாஸ்.



கருணையுள்ள வெள்ளை உள்ளம்
கடல் கடந்து வந்ததுவாம்
கதிகலங்கி நின்ற எம்மவர்க்கு
கலங்கரை விளக்கானதுவாம்.

இருள் சூழ்ந்து நின்ற
இலங்கை மண்ணிற்கு
இரவலர் வடிவில் வந்த
இலங்கையின் அப்போஸ்தலரே.

காடும் மேடும் நடந்து
கால்கள் கடுகடுத்த போதும்
கண்ணியம் பெரிதென எண்ணியே
கடமைதனைப் புரிந்தீர்.

இகழ்ந்தோரும் வியக்க
இனிதே இறைபணியாற்றினீர்
இன,மத,மொழி,பேதமற்ற-மனிதத்திற்கு
இலக்கணம் வகுத்தவர் நீரன்றோ.

வீரகாவியம் படைத்திடவே
வீறுநடைபயின்றீர்-அங்கனமே
விதைத்து விட்ட விதைகள் இன்று
விருட்சாமாகி விட்டது.

விண்ணகவாழ்வில் முந்நூறு ஆண்டு
விடியல்கள் காணும் இவ்வாண்டில்
விடியல்கள் பல எம் வாழ்விலும்
விடிந்திட எமக்காய் வேண்டிடும்.

எம்மண்ணில் மறைவளர
எண்ணிலடங்கா தியாகம் செய்த
எம் நாயகன் ஜோசப்வாஸ் அடிகளாரை
என்றென்றும் போற்றிடுவோம்.

ஆக்கம்:-
சகோ. க. ஜேசுதாஸ் CMF

அருளாளர் யோசேவ்வாசுடைய விண்ணகப் பிறப்பின் 300வது ஆண்டு நிறைவில் பின்வரும் விடயங்களை கடைப்பிடிக்குமாறு இலங்கை ஆயர் மன்றம் பணிக்கின்றது

1. வருகின்ற 15 ஜனவரி 2011 அன்று காலை 10.00 மணிக்கு றாகம, தேவத்தையில் அமைந்துள்ள இலங்கை மாதா தேசிய பேராலயத்தில் நடைபெறவுள்ள தேசிய மட்ட நன்றி செலுத்தும் கொண்டாட்டத்தில் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் குருக்கள், துறவியர், பொதுநிலையினர் பெரும் எண்ணிக்கையில் வந்து கலந்து கொள்ளுதல்.
2. மறைமாவட்ட மற்றும் பங்குமட்ட கொண்டாட்டங்களை அருளாளர் யோசேவாஸ் அவர்களின் விண்ணகப் பிறப்பின் சரியான தினமாகிய 16 ஜனவரி 2011 ஞாயிறு தினத்தன்று இலங்கையின் மாபெரும் அப்போஸ்தலரின் வாழ்வுக்கும் பணிக்குமாக இறைவனுக்கு நன்றி செலுத்தும் பொருத்தமான வழிபாட்டோடு நடாத்துதல்.
3. அருளாளர் யோசவ்வாஸ் அடிகளாரின் வாழ்வையும் பணியையும் எமது சிறுவர்களும், இளையோரும் ஆழமாக அறிந்து அவருடைய முன்னுதாரணத்தால் ஊக்கம் பெறக்கூடிய வகையில் மறைமாவட்டம் மற்றும் பங்கு மட்டத்தில் கண்காட்சிகளையும், போட்டிகளையும் ஒழுங்கமைத்தல்.
4. முந்நூறாம் ஆண்டு முழுவதும் ஞாயிறு திருப்பலியின் முடிவில் அருளாளர் யோசவ்வாசை நோக்கிப் பாடல் இசைப்பதும் அவருடைய புனிதப்பட்டத்திற்கான வேண்டுதலைச் சொல்லுவதும்.
5. அருளாளர் யோசவ்வாசினுடைய வாழ்வால் உந்தப்பட்டு குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தத்தமது வாழ்வு நிலைக்கேற்ப தூய்மையடைய கடுமையாக முயற்சித்தல்.
6. எல்லா கத்தோலிக்க அமைப்புக்களும் பொதுநிலை இயக்கங்களும் அருளாளர் யோசவ்வாஸ் அவர்களை தமது மாதிரியாகக் கொண்டு தத்தமது திருப்பணிகளில் அவரது முன்னுதாரணத்தைப் பின்பற்றுதல்.
7. எமது அன்றாட வாழ்விலும் எமது அயலிலும் நற்செய்திக்கு சக்தி மிக்க சான்று பகரும் வகையில் விசுவாசத்தை ஆழப்படுத்தும் நோக்கில் எமது சிறிய கிறிஸ்தவ குழுமங்களுக்கு (அன்பியங்களுக்கு) புத்துயிர் அளித்தல்.
8. நற்கருணை ஆராதனை, குடும்ப செபமாலை போன்ற செப முயற்சிகளை இல்லங்களிலும், பங்கிலும் ஊக்குவித்தல்.
9. எமது விசுவாசம் என்னும் கொடைக்கு இறைவனுக்கு நன்றி செலுத்துவதன் அடையாளமாக எமது இல்லங்களிலும், குருமனைகளிலும், துறவற மடங்களிலும், ஒவ்வொரு ஆலயத்திலும் அருளாளர் யோசவ்வாஸ் அவர்களுடைய திருவுருவப் படம் ஒன்றைக் காட்சிப்படுத்தல்.
10. மூன்னூறாவது ஆண்டு முழுவதும் அதாவது 16 ஜனவரி 2011 முதல் 16 ஜனவரி 2012 வரை ஒவ்வொரு வீட்டிலும் குடும்பச் செபமாலையைத் தொடர்ந்து புனிதர் பட்டத்திற்கான செபத்தைச் சொல்லுதல்.

அருளாளர் யோசவ்வாசினுடைய விண்ணகப் பிறப்பின் முன்னூறாவது ஆண்டு எமது பொதுநிலையினர், துறவறத்தார், திருநிலையினர் அனைவருக்கும் அருள்மிகுந்த ஆண்டாக அமைய வாழ்த்துகின்றோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கியச் சாரலம்

கவிதைக் களம்

மனிதர்கள் யாரடா?

நானா மனிதன்? நீயா மனிதன்
நம்மில் மனிதன் யாரடா?
ஏனோ விழிப்பு எதற்கோ தவிப்பு
எது தான் உண்மை கூறடா?

வீணாய் வாழ்ந்து பாழாய்ப்போகும்
வீணர் கூட்டம் நாமடா
தேனாம் வாழ்வின் சுகமே நீங்கி
திரிவான் மனிதன் தானடா

ஆசை மூன்றை அணைத்துக் கொண்டு
அதனுள் வாழ்வோர் நாமடா
ஆசை நீங்கி மோசம் போக்கும்
அவன் தான் மனிதன் கேளடா

உறவில் இன்பம் பிரிவில் துன்பம்
உடையோன் மனிதன் அல்லடா
இறைவன் படைப்பில் இரண்டும்
உண்டு என்போன் மனிதன் தானடா

உலகம் எங்கும் வாழும் உயிரில்
உயர்ந்தோர் நாமென்றெண்ணுவார்
விலங்கை விடவும் கீழாம் குணத்தில்
பலபேர் வாழ்ந்தே காட்டுவார்

மனிதன் என்று சொல்லிக் கொண்டு
வாழ்ந்தால் மட்டும் போதுமா?
மனிதத் தன்மை சிறிதும் இன்றி
வாழ்ந்தால் நீதி ஆகுமா?

செல்வி. மேரி பமில்டா, மடுக்கோவில்.

இனி வரும் காலங்கள் உனக்கானவையே!

ஓ இளைஞனே!
சாதனையாளர்களின் சரித்திர வரலாற்றினை
ஒரு முறை புரட்டிப்பார்
அவர்கள் எல்லோரும் சாகசம் காட்டி
சாதனை புரிந்தவர்கள் அல்லர்
தோல்விகளை படிக்கற்களாக்கி
வேள்வித் தீயினில் எரிந்து - தொடுக்கும்
கேள்விக் கணைகளை தகர்த்து
சரித்திரத்தையே மாற்றி அமைத்தவர்கள்

ஆனால், நீயோ எதை நோக்கி
பயணித்துக் கொண்டிருக்கிறாய்?
நான்! என்ற குட்டிச் சுவருக்குள்
ஏன்? எனும் காரணமின்றி
வெட்டிப் பேய்களாக மாறி
தட்டிக் கழிப்புடன் காலத்தை
ஓட்டிக் கொண்டிருக்கின்றாய்

நாட்டின் நாளைய தலைவர்கள்
நீங்கள் தான் என்று
ஏட்டில் என்றோ பொறிக்கப்பட்டாச்சு
வீட்டில் கண்மூடித் துயிலும் தோழனே!
உன் உறக்கத்தை விட்டு - இந்த
உலகத்தை ஒரு தரம் விழித்துப்பார்

உனக்கென்று தரப்பட்ட
உன்னதமான சில கடமைகள் - இன்னும்
பூர்த்தியாக்கப்படாமல் வெற்றிடமாய்....
உன் வருகைக்காய் தவமிருக்கின்றன.
"மீடியாக்கள்" தான் உனக்கு
மீட்பளிக்கும் என்றால் - வெறும்
வேடிக்கையாகி விடும் உன் வாழ்வு

போதும்! நண்பனே போதும்!
நீ அடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டு
சின்னாபின்னமாக்கப்பட்ட கசப்பான
அந்த நினைவுகளை
எல்லாம் கனவுகளாக மறந்துவிடு
கானல் நீராக நினைத்து விடு
பட்டுப் போன மனங்களுக்கும்
விட்டுப் போன உறவுகளுக்கும் - புதிய
இணைப்பேற்படுத்தும் பாலமாக
தோள் கொடுத்து செயற்படு

உனக்கென்று எழுதப்பட்டிருக்கும்
தலைவிதியை மாற்றியமைக்க
இயன்ற வரை முயன்றிடு
சிதைந்து போன கனவுகளும்
கலைந்து போன எண்ணங்களும்
முறிந்து போன எதிர்பார்ப்புக்களும்
உடைந்து போன உள்ளங்களும்
உன் மூச்சுக் காற்றினால் தான்
உயிர் பெற்றெழ வேண்டும் - இதற்கு
நீ தென்றலாக அல்ல - வீசிடும்
புயலாக எழ புது யுகப் பயணத்தில்
இன்றே புறப்பட்டு விடு

அ. கொண்செப்ரா, மடுக்கோவில், மடு.

சமாதானம்

பூமியின் மேற்பரப்பெங்கும்
பூத்திருக்கும் பூங்காற்றே
உயிர்கள் அனைத்தினதும்
உயிரோட்டம் நீதானே
நாடு மொழி பேதமின்றி
நாற்றிசையும் வாழ்வு கொள்ளும்
மனித மனங்களெல்லாம்
மலர வேண்டும் சமாதானம்

இன மத குல பேதமின்றி - வலியோர்
இணங்கி வாழ வழிகாட்டு
ஆண் பெண் சமத்துவத்தில்
ஆதாரமாய் நெறிகாட்டு

அழகும் பொலிவும் மணமும்
அணிந்திருக்கும் பூவாய்
சமதர்மம் கொண்ட வாழ்வில்
சமாதான வழி காட்டு

தேடித் தேடியே நித்தம்
தோற்றுப் போனாலும்
தேடும் உள்ளங்களிலும்
தேங்கிக் கிடக்கிறது
மனதைக் குளிர வைத்து தூய
அன்பை மிளிர விட்டால்
உதட்டில் மட்டுமல்ல
உள்ளத்திலும் பூத்திடுமே
உண்மையான சமாதானம்

அ. பூவானந்தன், வயாவிளான்.

மீள் குடியேற்றம்

அன்புக் கணவனும்
ஆசைத் தம்பியும்
புனர்வாழ்வு நிலையத்தில்
மறு வாழ்வுக்காய் ஏங்கி நிற்க
எமக்கு ஒரு புது வாழ்வா?

சொந்த இடம் செல்ல
எந்த மனிதர்க்கு விருப்பில்லை
இருந்தாலும் நெருடல்கள்
எம் மனதில்
இறுதிச் சடங்குகூட செய்யாத
எம் உறவுகளின் புதைகுழி மேல்தானே
இனியெம் வாழ்வு

அப்பாவிற்கு ஆண்டு திவசமும்
அண்ணனுக்கு அந்தியேட்டியும்
இனித்தான் செய்ய வேண்டும்
இடம் பெயரக்கூட நேரமில்லை
இவற்றிற்கு எங்கு நேரம் அன்று

விடுதலைப் பெண்ணை
வீட்டிற்கு அழைத்துவர
அழைப்பிதல்கள் அச்சடித்து
ஆடம்பர ஏற்பாடுகள்
கருத்துகள் இன்றும்
காலியாகவே இருக்கின்றது.

வன்னி மண்ணில்
வளர்ப்பதற்கு நாய்கூட
ஜனாவின் நிவாரணப் பொதியில்
அடங்கி வந்தால் தான்

பூச்சியத்தில் இருந்து தான்
அனைத்தும் தொடங்குமெனில்
இன்று எம்வாழ்வு மறைப்புள்ளியில்
பூச்சியமே இனித்தான்
போட வேண்டும்

அன்னராசா பிரதீபன், புனர்வாழ்வு நிலையம்,

என்னுயிர்க்குயிராம்

என்றும் என் உயிருக்கு
எனது அன்பு மடல்....
எழுத ஆரம்பிக்கும் முன்னே
எரிகின்றது என் இதயம்....
எல்லையின்றி மீறும்
என் எதிர்பார்புக்களை எழுதுவதா?
எண்ணிக்கையின்றி நீளும்
என் ஏமாற்றங்களை எழுதுவதா?
எழுத்தின் வடிவில்
என் எதிர் காலத்தை எடை போடுவதா?
எதை எழுதுவது?
எரியும் நெஞ்சோடு விழிகள் கரைய
எறிகின்றேன் எழுதியவற்றை கிழித்து
மீண்டும் எழுதுவதற்கு தயாராகியபடியே

ஆர். ஸ்ரீபனா, முத்தரிப்புத்துறை, சிலாபத்துறை.

சிறுகதை

யார் குற்றம்?



செல்வி. இசிதோர் ஸ்ரீபனா, களிமோட்டை, முருங்கன்.

வெள்ளிக் கிழமை மாலை நேரம். வேலைத்தளத்திலிருந்து கோகிலா பஸ்தரிப்பிடம் செல்லத் தயாரானாள். வேலைத்தளத்தில் இருந்து பஸ்தரிப்பிடம் செல்ல அரைமணி நேரம் பிடிக்கும். வீதியில் வேகமாக நடந்து வந்தவள் எதிரில் அந்த ஓட்டோவை மறித்து பஸ்தரிப்பிடம் வந்து சேர்ந்தாள். சிறிது நேரத்தில் பஸ்சில் ஏறி அமர்ந்தாள் கோகிலா.

ஜன்னலோரமாய் ஓர் இருக்கையில் அமர்ந்து கொண்டாள். தனியார் பேரூந்து என்பதால் பாடல்கள் ஒலிபரப்பாகிக் கொண்டு இருந்தன. அதில் ஒருபாடல் அவளை மிகவும் தாக்கியது. அவளது பள்ளி வாழ்வை மீட்டிப்பார்த்தது. அவை வாழ்வின் பசுமையான நாட்கள். அதுவும் சாதாரண தரத்தில் தன் உயிர்த்தோழியோடு பழகிய நாட்கள் கல்லறையிலும் கலைந்து போகாது. உயிர்த்தோழி என்பதிலும் பார்க்க உயிருக்கும் மேலான தோழி என்பதில் சந்தேகமில்லை. தோழி சீதாவின் நினைவுகள் எழுந்தாலே கண்கள் இப்போதும் ஆறாகப் பெருக்கெடுக்கும்.

இருவரும் படிப்பில் கெட்டிக்காரர். சீதா வீட்டின் செல்லப்பிள்ளை. எல்லாமே அவளுக்கு விளையாட்டுத்தான் அன்பாக பண்பாக பழகுவதில் முதலிடம்தான்.

கோகிலாவும் சீதாவைப்போலதான் என்றாலும், எதிலும் சற்றுத் தயக்கம் கொண்டவள். பொது நிகழ்வுகளில் இலகுவில் கலந்து கொள்ள மாட்டாள். கோகிலாவிற்கு சீதா என்றால் போதும். சீதாவிற்கு நண்பிகள் பலபேர் இருந்தாலும் கோகிலா மீது பாசம் அதிகமாகவே வைத்திருந்தாள். கோகிலா சீதாவைப் பிரிந்த நேரங்களே மிகக் குறைவு. சீதா மேல் கொண்ட பாசத்தை யாருமே பங்கு போடமுடியாது. யாரோடு பழகினாலும் சீதாவிற்குப் பின்னேயே எல்லோரையும் வைத்தாள் கோகிலா. தன்மீது சீதா கொண்டுள்ள பாசத்தை அவளின் தோழிகள் பங்கு போட்டு விடுவார்கள் என்று இருவருக்கும் இடையில் சின்னச் சின்ன சண்டைகள். செல்லக் கோபங்கள். எல்லாமே சிறிது நேரத்தில் மறைந்து விடும் இருவரின் பாசமே ஜெயிக்கும். இருவரின் வீடுகளும் சற்றுத்தூரம் எனினும் முடிந்தவரை ஒன்றாகவே திரிவார்கள். சாதாரணதரப் பரீட்சை முடிந்தது. சீதாவை விட்டுப் பிரிவதே கோகிலாவிற்கு கஸ்ரமாய் இருந்தது. கோகிலாவின் வேண்டுதல் சீதா அவளைவிட்டுப் பிரியவில்லை. இருவரும் ஒரே இடத்தில் கணனிப் பயிற்சி வகுப்புக்கு சென்றனர்.

சாதாரணதரப் பெறுபேறுகளும் வெளியாகின. இருவரும் ஒரே இடத்தில் உயர்தரம் படிக்கச் சென்றனர். ஒருவர் மற்றவர் வீட்டில் சென்று தங்கி நின்றுபடிப்பதும் உண்டு. ஒரே மாதிரியான உடைகள் தைப்பது என்று ஒவ்வொரு நாளும் இருவருக்கும் வசந்தமாய் வலம்வந்தது.

மனதிலுள்ள கஸ்ரங்கள் எதுவானாலும் பகிர்ந்து கொள்வார்கள். தங்களுக்குள் சண்டைகள் வந்தால் தாமே பேசித் தீர்த்துக் கொள்வார்கள். காலச்சக்கரங்கள் உருண்டன. சீதாவில் சிறுசிறு மாற்றங்கள் கோகிலாவுடன் சேர்ந்து திரியும் நேரங்கள், பேசிப்பழகும் காலங்கள் எல்லாமே குறைந்து போனது. சீதா கோகிலாவிற்கிடையில் வரும் சிறுசிறு பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் சீதா வேறு ஒரு தோழியிடம் கூற ஆரம்பித்தாள் தன்னைவிடபுதிதாய் ஓர் உயிர்த் தோழியை ஏற்படுத்துகிறாளோ என கோகிலா சீதாவுடன் சண்டை போட்டாள். "நம் நட்பு பிரிந்துவிடக் கூடாது" எனக் கூறினாள். சீதாவும் கோகிலாவின் பாசத்தை புரிந்து கொண்டவளாய் அமைதியாக இருந்தாள். நிஜமாக கோகிலாவின் பாசத்தை அவள் புரிந்து கொள்ளவில்லை. புரிந்ததுபோல நடித்தாள் போலும். மாலை நேர வகுப்புகளில் புதுத்தோழியருடன் போய் அமர்ந்து கொண்டாள். கோகிலாவுடன் உரையாடுவதைக் குறைத்துக் கொண்டே போனாள்.

ஒரு நாள் வகுப்பு முடிந்ததும் "சீதா நா உன்கூட கொஞ்சம் பேசணும்" என்றாள் கோகிலா.

"என்ன.. சொல்லு" என்றபடி திரும்பிப் பார்த்தாள் சீதா. "இப்ப வர வர நீ என்னோட பேசிறதில்ல. உனக்கு பிரண்ட்ஸ் எல்லாம் கூடிற்று" என்றாள்.

"நீ ஏன் அப்படி நினைக்கிறா. எல்லோரும் எனக்கு ஒரே மாதிரித்தான். நீவேற அவங்க வேற இல்லயே" என்றாள் சீதா.

கோகிலாவிற்கு நீயும் அவர்களும் ஒன்று என்ற போது ஒரு கணம் தலையே வெடித்தாற்போல இருந்தது.

"எவ்வளவு பேரோட பழகினாலும் உங்கூடபேசும் போதுதான் மனசுக்கு ஆறுதலாக இருக்கும் என்றவளுக்கு இப்போது எல்லோரும் ஒன்றாகிவிட்டார்கள். பரவாயில்லை" என மனதிற்குள் எண்ணியபோது கண்கள் கட்டுப்பாட்டை மீறி கண்ணீர்துளிகளை இறைத்தது.

"இல்ல சீதா உனக்கு எல்லாரும் ஒன்றா இருக்கலாம். ஆனா எனக்கு மற்றவர்கள விட நீதான் உயிர்த் தோழி என்றவளுக்கு வேறு வார்த்தைகள் பேச முடியவில்லை. வார்த்தைகளே முடமாகிப்போயின. நாட்கள் நகர்ந்தன. ஒன்றாகவே பழகினர். சண்டைபோல காட்டிக் கொள்ளவில்லை. அதே அன்பு பாசம் இருந்தது கோகிலாவிற்கு. ஆனால் சீதா பெரிதாய் கதைப்பதில்லை. கதைக்கும் போது வேற்றாளைப் போல மரியாதையாக பேசினாள். மற்றைய நண்பர்களுடன் சேர்ந்து திரிய ஆரம்பித்தாள். தோழிகளுடன் உணவருந்தச் சென்றாள்.

"ஏய் நீ சாப்பிட்டியா?.." என்று வெளிவேடமாக கோகிலாவிடம் கேட்டாள். அவள் வார்த்தைகள் போலியாய் வரும்போது கோகிலாவிற்கு மிகவும் வேதனையாய் இருந்தது. படிப்படியாக கோகிலா ஏனைய நண்பியருடன் இணைந்து கொண்டாள். அவர்களின் அன்பு, ஆதரவு ஓரளவு மனதிற்கு ஆறுதலைக் கொடுத்தது. அவர்களுடன் சேர்ந்து படித்தாள். பரீட்சையிலும் வெற்றி கொண்டாள். நிமிடங்கள் மணித்தியாலமாக, நாட்கள் மாதங்களாக, மாதங்களும் வருடங்களாகி விட்டன. சீதாவுடன் இதுவரை கோகிலா சென்று பேசவில்லை. பாசத்தை புரிந்து கொள்ளும் போது அவள் வருவாள் என நினைத்துக் கொள்டாள்.

"உண்மையான பாசத்துடனா சீதா பழகினாள்? இல்லை அவள் போட்டது போலி வேஷமா? தான் சண்டை போட்டபோது அன்பாக இருந்தவள் காலம் கடந்த பின் பிரிந்து போகக் காரணம் என்ன? சீதாவின் பாசம் போலியோ? உண்மையோ? சீதாவிற்குத்தான் தெரியும். அவளுடன் பழகிய நினைவுகளை நினைக்கையில் கோகிலாவின் இதயம் ரணம் தாங்க முடியாமல் கண்ணீராய் கரையும். இதில் யாரைக் குற்றம் சொல்வது? யார் குற்றவாளி? காரணம் கூறாமல் எல்லோரும் எனக்கு ஒன்று என்று பிரிந்த சீதாவா? இல்லை கடைசி வரை நீ பிரியக்கூடாது என்று சண்டைபிடித்த கோகிலாவா? உயிர்த்தோழி, நெருங்கிய சிநேகிதி என்றவளுக்கு சீதா கொடுத்த பரிசு பிரிவே. "பலபேரோடு பழகினாலும் தோழியாக நீ மட்டுமே" என்றது கோகிலாவின் தவறோ?

"நண்பன் இல்லாமல் இருப்பது ஆபத்து அதிக நண்பர்கள் இருப்பது அதைவிட பெரிய ஆபத்து"

தோழியின் நினைவுகளை மீட்டிப் பார்த்தவளின் கன்னங்களில் கண்ணீர் முத்தமிட நினைவுக்குத் திரும்பினாள் கோகிலா. அப்போது "பழகத் தெரிந்த வாழ்வில் பிரியத் தெரிய வேண்டும். புரிந்தால் பிரிந்தால் குறையில்லைத்தானே" என்ற பாடல் வரிகள் ஒலித்துக் கொண்டிருந்தன. அவளுக்குக் அறிவுரை கூறுவதைப் போல.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

புனிதரின் பாதையில்

முத்தி. ஜோசப்வாஸ்

தை 16

மறைபரப்பாளர், இலங்கை – (1651-1711)

இன்று இலங்கையில் கத்தோலிக்க விசுவாசம் ஓர் ஆலமரமாகக் காட்சியளிக்கின்றதென்றால், அதற்கு புத்துயிர் ஊட்டிய பெருமை தந்தை ஜோசப் வாஸ் என்பவரையே முற்றிலும் சாரும். 17-வது நூற்றாண்டில் இலங்கைத் தீவில் போர்த்துக்கீசியரும் டச்சுநாட்டினரும் போட்டி போட்டுக் கொண்டு காலனி ஆதிக்கம் செலுத்தி வந்தனர். போர்த்துக்கல் நாட்டினர் இலங்கையை கைப்பற்றிய அதே சமயம் கத்தோலிக்க விசுவாசத் திற்கு வித் திட்டிருந் தனர். அதுமுளைத்து வளரும் சமயம் டச்சு ஆதிக்கத்தினர் கால்வின் பதிதத்தைப்புகுத்தி, கத்தோலிக்க விசுவாசத்திற்கு ஒரு பெரும் சவாலாகத்தோன்றினர். கத்தோலிக்க விசுவாசத்தைப் பூண்டோடு அழித்தொழிக்கத்திட்டம் தீட்டிய சமயம் பார்த்து தந்தை ஜோசப்வாஸ் இலங்கையில் தனது பொற்பாதத்தைப் பதித்தார். இவர் புதிய இரத்தத்தைப் பாய்ச்சியிருக்காவிட்டால், இலங்கையில் கத்தோலிக்க விசுவாசத்திற்குச் சமாதி கட்டப்பட்டிருக்கும்.

1651, ஏப்ரல் 21-ம் நாள் வாஸ் அடிகளார் கோவாவில் சால்செட் தீவில் பெனாலிம் என்ற இடத்தில், கிறிஸ்டோபர்வாஸ், மரியாதே மிராண்டாவின் 8வது பிள்ளையாகப் பார்ப்பனர் குலத்தில் தோன்றினார். சிறு வயதிலிருந்தே ஜெபவாழ்விலும், ஏழைகளின்மீது கரிசனை கொள்வதிலும் தனி ஆர்வம் காட்டியவர். கோவாவில் யேசுசபைக் கல்லூரியில் தனது படிப்புகளை முடித்துக்கொண்டு, புனிததாமஸ் அக்குவீனாஸ் குருமடத்தில் சேர்ந்து படித்து தனது 25வது வயதில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இந்தக்காலகட்டத்தில் கொங்கண் பகுதியில் மங்களூரிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் போர்த்துக்கீசியர் தோற்றுவித்த கத்தோலிக்க திருச்சபை நல்ல கனி தரக்கூடிய மரமாக வளர்ந்து வரும் நிலையில், டச்சு நாட்டுக் கால்வின் பிரிவினை சபையார் கத்தோலிக்கத்திருச்சபையை அடியோடு அழிக்கத்திட்டம் தீட்டினார்கள். இவர்கள் மத்தியில் 3ஆண்டுகள் கடுமையாக உழைத்து, கத்தோலிக்கர்களை ஊக்குவிக்கும் பணியில் முழுவீச்சில் இறங்கி நல்லபலன் கிடைத்ததைப் பார்த்த பிறகு மீண்டும் கோவா சென்றடைந்தார். கோவாவில் இருந்த சமயம் இலங்கையிலும் டச்சுப் பிரிவினை சபையினர் கத்தோலிக்க விசுவாசத்தின் சவாலாகத் தோன்றினர். கத்தோலிக்கர் பலவழிகளிலும் கொடுமைப்படுத்தப்பட்டனர். சில கத்தோலிக்கர் தெரிந்தோ, தெரியாமலோ புத்தமதவழிபாடுகளிலும் பங்கேற்றனர். தனது மங்களூர் அனுபவம் தந்தை வாசுக்குக் கை கொடுத்தது. தனிமையாக இலங்கைக்குப் போவதைவிட ஒரு குழுவாகப் போய் கத்தோலிக்கர்களை கொடியவனின் பிடியிலிருந்து மீட்க வேண்டுமெனத்திட்டம் தீட்டினார். கோவாவில் ஏற்கனவே தந்தை பாஸ்கால் டக்கோஸ்டா ஜெரமியாஸ் ஒரு வேதபோதக துறவற சபையைத் தோற்றுவித்திருந்தார். அதில் தந்தைவாஸ் சேர்ந்த சில ஆண்டுகளுக்குப் பின் சபைத்தலைவரானார். நாளடைவில் இந்த சபைக்குப் புனித பிலிப்புநேரி ஜெபக்குழுவினர் என்ற பெயரிட்டார். இந்த சபையினரைக் கொண்டு இலங்கையில் சுமார் ஒரு நூற்றாண்டு காலமாக கத்தோலிக்க விசுவாசத்திற்கு உறுதுணையாகப் பணிபுரிந்தார். ஆனால் 1835ல் கோவாவில் ஏற்பட்ட கொந்தளிப்பில் மற்றதுறவற சபையைப்போல், இந்தப் புதிய சபையும் துர் அதிர்ஷ்ட வசமாக கிள்ளி எரியப்பட்டு முற்றிலும் நாசப்படுத்தப்பட்டது.

இந்தச் சூழலில் இலங்கை சென்று திருச்சபைக்கு உறுதுணையாக இருப்பதற்காக, அங்கே செல்லும் போது ஒரு கூலிவேலை பார்ப்பவர் போல் மறைமுகமாகவே கப்பலேறினார். அதுவும் ஜென்ப விரோதிகளாகக் கருதப்பட்டவர்களின் டச்சுக்கப்பலில், ஒரு பரம ஏழைபோல கப்பலுக்குள் இடம்பிடித்துக்கொண்டார். கத்தோலிக்க மதபோதகர்கள் ஒருவரையும் விட்டுவைக்காமல் கொல்லத்திட்டம் தீட்டி டச்சுக்காரரின் கப்பலுக்குள் மாறுவேடத்தில் இடம் பிடித்து, இலங்கைத் தீவை அடைந்ததில் இறைவனின் சிறப்பான பராமரிப்பு இருந்ததை தந்தை வாஸ் நன்கு உணர்ந்திருந்தார். இவ்வாறு முதலில் 1687ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் காலடிகளைப் பதித்தார். சில்லாலை என்ற கத்தோலிக்க கிராமத்தில் 3 ஆண்டுகள் தங்கி அங்கிருந்து பல இடங்களுக்கும் சென்று மேய்ப்புப் பணியை மேற்கொண்டார். கிறிஸ்தவர்களல்லாதவர்களையும் கவர்ந்து கொள்ளும் முறைகளைக் கையாண்டார். நொறுங்குண்டு கிடந்த கத்தோலிக்க சமுதாயம் தெம்பு அடைந்தது.

இவர் இவ்வாறு மாறுவேடத்தில் பணியாற்றுவதை ஓரளவு டச்சு நாட்டினர் உணர்ந்தாலும், ஆடுகளை மந்தைக்குள் கொண்டு வந்து சேர்த்தார். எத்தகைய வலைவிரித்தாலும் இவரைப் பிடிக்கத்தான் இயலவில்லை.

1690ல் கண்டி நகரில் யேசுசபையைச் சேர்ந்த பழமை வாய்ந்த ஆலயத்தைக்கண்டு பிடித்ததுடன் அதைச் சுற்றிலும் வாழ்ந்து வந்த கத்தோலிக்க சமுதாயத்தையும் கண்டுபிடித்தார். இதனருகில் பற்பல சிற்றாலயங்களை எழுப்பினார். ஆங்காங்கே இருந்த கிறிஸ்தவர்களைக் கவனிக்க வேதியர்களை உருவாக்கினார். இவர் ஒருமுறை இவ்விடங்களைப் பார்த்துவர மாட்டுவண்டியில் பயணித்தபோது, இவரை வேவு பார்ப்பவன் என்று எண்ணி அரச சிறையில் தள்ளப்பட்டார். இவரைச் சார்ந்த 7 பேர் தூக்கிலிடப்பட்டனர். வாஸ் அடிகளாரோ நான்கு ஆண்டுகள் சிறையில் தள்ளப்பட்டிருந்தார். இறுதியில் இவர் எந்தவிதத்திலும் வேவு பார்ப்பவரல்லர் என்று உணர்ந்த குறுமன்னன் இவரை விடுதலை செய்ததோடு கத்தோலிக்கர் மத்தியில் பணியாற்றவும் உத்தரவளித்தார். அரசனே, வாஸ் அடிகளார் தனக்கு உதவியாக வேறு ஒரு குருவையும் அழைத்துக்கொள்ள பரிந்துரைத்ததின் பேரில், கோவாவிலிருந்து தந்தை சல்டானா என்பவரையும் சேர்த்துக்கொண்டார்.

இக்காலத்தில் ஒரு சமயம் கடுமையான வறட்சி தலைவிரித்தாடியது. புத்தபிக்குகள் என்னென்ன மந்திரமெல்லாம் ஓதிப்பார்த்தும் பயனில்லை. அதன் பின்னர் தந்தை வாஸ் பொது இடம் ஒன்றில் ஒரு திருச்சிலுவையை நட்டு, பெருங்கூட்டத்தினர் முன்னிலையில் மண்டியிட்டு பக்திப் பரவசத்துடன் ஜெபித்தார். மிகவிரைவில் கார்மேகம் எங்கும் கிளம்பி கனத்த மழைபெய்தது. அதிலும் இன்னும் ஓர் புதுமை என்னவெனில், தந்தைவாஸ் ஜெபித்துக்கொண்டிருந்த இடத்தைச் சுற்றி ஒரு சொட்டு மழை விழவில்லை. மன்னன் இதைக் கேள்விப்பற்று, தனது அரசின் எந்த ஒரு பகுதிக்கும் சுதந்திரமாக சென்று செயல்பட உத்தரவளித்தான். 1697ல் கண்டிநகர் மக்கள் பிளேக் நோய்க்கும் பெரிய அம்மைக்கும் ஏராளமானோர் பலியானார்கள். அரசனும் அவரது தோழர்களும் தப்பித்து ஓடிவிட்ட சமயம், தந்தை வாஸ் அஞ்சா நெஞ்சத்துடன் நோயுற்றவர்களுக்குத் தேவைப்பட்ட அனைத்துச் சேவைகளையும் ஆற்றினார். பின்னர், திரிகோணமலை, நீர்கொழும்பு, கொழும்பு, மட்டக்களப்பு முதலிய நகரங்களுக்கும் சென்று மக்களை விசுவாசத்தில் திடப்படுத்தினார். இருப்பினும் செல்லும் இடமெல்லாம் கால்வின் பதிதர்கள் இவரைப் பதம் பார்க்கத்தான் செய்தனர். பற்றாக்குறைக்கு, யானைகள், காட்டுமாடுகள், இன்னும் பலவிதமான காட்டுவிலங்குகளின் ஆபத்தும் இவருக்கு நிறையவே இருந்தது.

டச்சு நாட்டு வெறியர்கள் இவரைப் பிடிக்க இயலாத சூழ்நிலையில் ஏழைக்கத்தோலிக்கர் மீது குறிவைத்தனர். அவர்களின்காது, மூக்கைக் கூடத் துண்டித்தனர். சிறையில் தள்ளினர். ஊரைவிட்டுத் துரத்தினர். ஒருமுறை திருப்பலிக்காகக் கூடிவந்த 300 ஏழைக் கிறிஸ்தவர்கள் மீது புலிபோல் பாய்ந்து சித்ரவதை செய்தனர். இருப்பினும் குறுமன்னர்கள் எப்போதுமே தந்தைவாஸ் பக்கம் இருந்து, மேலும் பல மேய்ப்பர்களைக் கொண்டுவருவதற்கு வாய்ப்பளித்தனர். சுமார் 11பேர் இவ்வாறு வந்து சேர்ந்தனர். இவர்களின் ஆன்மதாகத்தைச் சொல்லி மாளாது. இவரது சிம்ம மனத்துடன் கூடிய ஆன்ம தாகத்தை நேரடியாகப் பார்த்தவர் திருத்தந்தையின் பிரதிநிதியாக முழு அதிகாரத்துடன் வந்தவர் கர்தினால் டுர்னோன். தந்தை வாசுக்கு ஆயர் பதவி காத்துக் கொண்டிருந்ததை அறிவித்தார். இப்பதவியை வேண்டாமென்று உதறிவிட்டார். எப்படியோ, தந்தையின் அரவணைப்பில், கோவாவிலிருந்து வந்த ஏனைய குருக்களின் அயராத உழைப்பினால் 1710ல் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை 55,000ஆக உயர்ந்திருந்தது.

இறுதியில் தந்தை வாஸ் திரிகோணமலைக்கும், மட்டக்களப்பிற்கும் ஊடே இருந்த கோட்டையூரில் மக்களுக்கு சேவை செய்த சூழ்நிலையில் நோய்வாய்ப்பட்டார். கண்டி மருத்துவமனைக்கு மாட்டுவண்டியில் தந்தையை ஏற்றிச்சென்றடைய 8 நாட்கள் எடுத்தன. 16.01.1711நோய் முற்றியதை உணர்ந்ததும் இறுதியாக பாவமன்னிப்பு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டார். ஒரு படுக்கையைப் பயன்படுத்த தனக்குத் தகுதியில்லை என்று சொல்லி, தன்னைத்தரையில் போடக்கேட்டுக் கொண்டார். பின்னர் பாடுபட்ட சுரூபத்தை ஒருகையில் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையில் எரியும் மெழுகுவர்த்தியுடன் அமைதியாக தனது ஆன்மாவை இறைவனிடம் கையளித்தார். கண்டியில் இவர் இறந்த செய்தி கேட்டுப் பெருங்கூட்டம் வர ஆரம்பித்தது. இதனால் 3 நாட்கள் உடலை நல்லடக்கம் செய்ய முடியவில்லை.

2011 ம் ஆண்டின் மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப் பணி திட்டம்

இளைஞனே! கிறிஸ்துவின் சாட்சியாய் வீழித்தெழு

இளைஞரின் ஆன்மீக வாழ்வு

தீர்மானம் 01:

இளைஞர் ஆண்டை மையப்படுத்திய பங்குத்திட்டங்களை பங்குத்தந்தையர்கள் மேய்ப்புப்பணி சபையோடும் ஏனைய பங்குப் பணியாளர்களோடும், சமூகத்தலைவர்களோடும் சேர்ந்து 14.01.2011ற்கு முன் வகுத்து அதன் பிரதி ஒன்றை மறைமாவட்ட மேய்ப்புப்பணி பேரவை செயலருக்கு அனுப்பி வைத்தல்.

தீர்மானம் 02

அருளாளர் ஜோசவ்வாஸ் அடிகளாரின் திருவிழா அன்று பங்கு மட்டத்தில் இளைஞர் ஆண்டு துவக்க விழாவும் பங்குத்திட்டத்தைப் பகிரங்கப்படுத்தி அங்குரார்ப்பணம் செய்தலும்.

தீர்மானம் : 03

துவக்க விழாவிலிருந்து பங்கிலுள்ள எல்லா இளைஞர்களையும் பங்குத்தந்தையர்கள், இளைஞர் வழிகாட்டிகள், இளைஞர் கழக நிர்வாகிகள், இரண்டு வாரங்களுக்குள் தரிசித்து, தரவுகள் எடுத்து அவர்களின் "இளைஞர் ஆண்டு" பற்றிய சிந்தனைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப அணுகுமுறைகளை மாற்றி உள்வாங்கிக் கொள்ளுதல். அவர்கள் ஏனைய அமைப்புக்களில் அங்கத்தவராயிருந்தாலும் பங்கில் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் அவசியத்தையும் மேன்மையையும் உணர வைத்து, விதிவிலக்கின்றி எல்லோரையும் இதில் உயிருட்டமுள்ள உறுப்பினர்களாக்குதல்.

தீர்மானம் : 04

தை மாதம் 29ம் திகதியன்று மறைமாவட்ட 30 ஆண்டு நிறைவு விழாவில் ஒவ்வொரு பங்கிலிருந்தும் பெறப்பட்ட பங்கு மேய்ப்புப்பணித் திட்டத்தை பங்குப்பிரதிநிதி (இளைஞர் ஒருவர்) அல்லது அவர் வராதபட்சத்தில் நியமிக்கப்படுபவர் காணிக்கைப் பவனியின் போது கையளிப்புச் செய்து திட்டம் வெற்றியோடு முன்னெடுக்கப்பட இறைவேண்டுதல் செய்தல்.

தீர்மானம் : 05

ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது ஞாயிறு திருப்பலியை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் ஆலயங்களில் "இளைஞர்களுக்கான சிறப்புத் திருப்பலியாக" ஒப்புக்கொடுத்தல். அன்றைய தினத்தில் தேவைக்கேற்ப இரத்ததானம் செய்தல், மரக்கன்றுகள் நடுதல், கலை நிகழ்ச்சிகளை நடாத்துதல், ஒன்றுகூடல்களை வைத்தல் போன்ற பொது விடயங்களில் இளைஞரை ஈடுபடுத்துவதற்குரிய திட்டங்களை ஏற்கனவே வகுத்து மாதாந்தம் நடைமுறைப்படுத்துதல்.

தீர்மானம் :06

பங்குனி மாதத்திற்கு முன்பு பங்கு மட்டத்தில் "இளைஞரிடமிருந்து சமூகம் எதிர்பார்ப்பவை" என்ற மையப்பொருளில் மாநாட்டை நிறைவு செய்தல். மாநாடு முடிவில் கலைநிகழ்வுகள் நடாத்துதல்.

தீர்மானம் : 07

புரட்டாதி மாத மடுத்திருவிழாவின் பின்னர் மறைமாவட்ட ரீதியாக "இளைஞர் இன்றைய

சமூகத்தினதும், திருச்சபையினதும் ஒப்பற்ற செல்வங்கள்" என்ற கருப்பொருளில் மாநாடு நடாத்துதல். அன்றைய தினம் மாலையில் பங்கிலிருந்து தெரிவுசெய்யப்பட்டு, மறைக்கோட்ட ரீதியாக வெற்றி பெற்று மறைமாவட்ட ரீதியாக முதலிடம் பெற்ற கவிதை, பேச்சு, நடனம், வில்லுப்பாட்டு, நாடகம், கூத்து, விவாத அரங்கம் ஆகிய நிகழ்வுகளை அரங்கேற்றுதலும் பரிசளிப்பு வைபவமும்.

தீர்மானம் : 08

பங்குனி 18ம் திகதி தவக்காலத்தின் இரண்டாம் வெள்ளிக்கிழமை அன்று ஒவ்வொரு பங்கிலும் இளைஞர்களே திருச் சிலுவைப் பாதைத் தியானங்களை முற்கூட்டியே எழுதி, பங்குத்தந்தையர்களின் வழிகாட்டலைப் பெற்று, சிலுவைப்பாதை நடைபெறும் ஸ்தலங்களையும் ஆயத்தம் செய்து, சிலுவைப்பாதையை நடாத்துதல்.

தீர்மானம் : 09

அதிகமான இளைஞர்கள் பங்குபெறும் பொருட்டு உபமறைக்கோட்ட, மறைக்கோட்ட ரீதியாக மாதாந்த கருத்தரங்கு நடாத்துதல். இதில் மனித உரிமைகள், கிறிஸ்தவ தலைமைத்துவம், பாலியல், ஆளுமை வளர்ச்சி, குடி போதைவஸ்து விழிப்புணர்வு, சமூகத் தொடர்புக் கருவிகளின் பாவனை, வாழ்க்கைக் கல்வி போன்ற மையப்பொருளில் கருத்தரங்குகளை நடாத்துதல்.

தீர்மானம் : 10

ஆலயத் திருவிழாக்களில் இளைஞரை மையப்படுத்தி தலையங்கங்களைத் தெரிவு செய்து உள்நாட்டு, தமிழ் நாட்டு போதகர்களின் உதவி பெற்று இறைவார்த்தையை மையப்படுத்திய வாழ்வை ஆழப்படுத்துதல்.

இளைஞரின் சாட்சிய வாழ்வு

தீர்மானம் : 01

பங்கின் தொகைக்கேற்ப 30-35 இளைஞர்களை ஒன்று சேர்த்து அன்பியமாக அவர்களை உருவாக்கி, அவர்கள் மத்தியில் ஒருங்கிணைப்பாளர் ஒருவரை நியமித்து அவர் மூலமாக அனைவரையும் அன்பியத்திற்கு அழைத்து வருதல். இதற்கு பங்குத்தந்தை தவறாது சமூகமளித்தல். அங்கே அவர்களுக்கு அன்பியம் பற்றிய விளக்கத்தைக் கொடுத்து, தொடர் கலந்தாலோசனைகளையும் மேற்கொண்டு, நிரந்தர பணியாளர்களுடன் பங்குப்பணிகளில் ஈடுபடுத்துதல். இதனை அன்பிய ஆணைக்குழுவின் உதவியுடன் நடாத்துதல்.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கர்தினால் என்பவர் யார்?

கத்தோலிக்க திருச்சபையில் கர்தினாலின் வகிபாகம் பற்றிய ஓர் பார்வை

முன்னுரை

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்கள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்களினால் கர்தினால் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார் என்ற செய்தியானது இலங்கை மக்கள் அனைவருக்கும் குறிப்பாக இலங்கைவாழ் கத்தோலிக்க மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாகும். உலகளாவிய கத்தோலிக்க திருச்சபையில் திருத்தந்தைக்கு அடுத்த நிலையில் உள்ள உயர் தலைவர்களான கர்தினால்களில் ஒருவராக நம் இலங்கை மண்ணின் மகன் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை பெருமைக்குரிய விடயமே. தற்போது உலகெங்கும் உள்ள 201 கர்தினால்களின் குழுவில் (College of Cardinals) இவரும் இணைந்துள்ளார். இந்நிலையில் கத்தோலிக்க திருச்சபையில் கர்தினால் என்பவர் யார் என்பதைப் பற்றிய புரிதலையும், கத்தோலிக்க திருச்சபையில் அவரின் வகிபாகத்தையும் இனம்காட்டும் முயற்சியாக இக்கட்டுரை அமைகிறது.

உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் கர்தினால் என்பவர் யார் என்பதை முதலில் புரிந்துகொள்வது அவசியமாகும். கர்தினால் என்பவர் கத்தோலிக்க திருச்சபையில் ஆயர் நிலையில் உள்ள மிக உயர்ந்த அதிகாரி ஆவார். 'காடினல்' என்ற இலத்தீன் சொல்லின் தமிழ் வடிவம்தான் கர்தினால் என்பதாகும். Cardinal என்ற இச்சொல் 'தலையான', 'மூத்த' என்ற பொருள்களைக் கொண்டதாகும். கர்தினால் என்ற இந்தப் பதவியானது மிகுந்த அதிகாரத்தையும், பாரிய பொறுப்புகளையும் கொண்டதாகும்.

கர்தினால்கள் ஒன்றிணைந்து ஒரு சிறப்புக் குழுவை உருவாக்குகின்றனர். இக்குழு 'கர்தினால்கள் குழாம்' (College of Cardinals) என்று அழைக்கப்படுகின்றது. இக்குழாமிற்கு 'முதல்வர்' ஒருவர் தலைமை தாங்குவார்.

திருத்தந்தை என்று அறியப்படுகின்ற உரோமைத் தலைமைக்குருவை தேர்ந்தெடுப்பது இக்குழுவிற்கு உரிய முக்கிய கடமையாகும். எனவே ஒரு கர்தினால் திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கின்ற வாக்குரிமையைக் கொண்டவராவார். அதேவேளை அவர் 'திருத்தந்தை வேட்பாளராவதற்குரிய' தகுதிநிலையையும் கொண்டுள்ளார்.

கருதினால்கள் குழுவாகவும், தனியாகவும் திருச்சபை சார்ந்த பொறுபுக்களில் திருத்தந்தைக்கு உதவுகின்றனர். அதிமுக்கிய ஆய்வுக்குரிய கருத்துக்களைப்பற்றி விவாதிப்பதற்காக அழைக்கப்படும்போது இவர்கள் திருத்தந்தைக்கு குழுவாக உதவிபுரிகின்றனர். அனைத்துலகத் திருச்சபையின் அன்றாட அக்கறையில் பல்வேறு பதவிகள் மூலம் அவர்கள் தங்கள் உதவியை நல்குவதால் தனியாகவும் உதவிபுரிகின்றனர்.

கர்தினால்கள் திருத்தந்தையின் ஆணையால் நியமிக்கப்படுகின்றனர். இவ்வாணை கர்தினால்கள் குழாம் முன்னிலையில் வெளியிடப்படுகின்றது. இவ்வெளியீடு செய்யப்பட்ட கணத்திலிருந்து சட்டத்தால் வரையறுக்கப்பட்ட கடமைகளையும் உரிமைகளையும் அவர்கள் பெறுகின்றனர்.

கர்தினால் ஒருவர் ஒரு மறைமாவட்டத்திற்கோ அல்லது உயர் மறைமாவட்டத்திற்கோ பொறுப்பானவராக (அதாவது மறைமாவட்ட ஆயராக) நியமிக்கப்படலாம். அல்லது உரோமைச் செயலகத்தில் ஏதாவது பொறுப்புகளில் நியமிக்கப்படலாம். இந்நியமனங்களைத் திருத்தந்தையே வழங்குவார். (மல்கம் றஞ்சித் ஆண்டகை கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் பேராயராகவே தற்பொழுது தொடர்ந்து பதவி வகிக்கிறார்).

'உரோமைச் செயலகம்' (Roman Curia) என்பது திருச்சபையின் நலனுக்காகவும் சேவைக்காகவும் பணியாற்றும் மிகப்பெரிய நிர்வாகக் கட்டமைப்பு ஆகும். திருத்தந்தையின் பெயராலும் அதிகாரத்தாலுமே இது தன் பணிகளை நிறைவேற்றுகின்றது. இந்த உரோமைச் செயலகம் வழியாகவே திருத்தந்தை அனைத்துலகத் திருச்சபையின் அலுவல்களை நடத்துகிறார்.

அருட்திரு தமிழ் நேசன் அடிகள்

உரோமைச் செயலகமானது வத்திக்கான் அரசு அல்லது திருத்தந்தை செயலகம், திருச்சபையின் அரசியல் விவகாரக் குழு, பேராயங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களைக் கொண்டுள்ளது. இவை அனைத்தின் அமைப்பு மற்றும் சட்ட உரிமை ஆகியவை சிறப்புச் சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்த உரோமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளின் தலைமைப் பொறுப்புகளிலோ அல்லது ஏனைய பொறுப்புகளிலோ கர்தினால்கள் நியமிக்கப்படுகின்றனர். கர்தினால்கள் திருத்தந்தையின் ஆணையின் பேரில் அவரது தலைமையில் தேவைக்கு ஏற்ப ஒன்றுகூடுகின்றனர். முக்கியமான சில விடயங்களில் ஆலோசனை பெறுவதற்காக அல்லது சிறப்பான சில செயல்களை நிறைவேற்றுவதற்காக அனேகமாக உரோமையில் உள்ள கர்தினால்கள் திருத்தந்தையின் ஆலோசனைக் குழுவுக்கு அழைக்கப்படுகின்றனர். திருச்சபையின் சிறப்பான தேவைகள் அல்லது அதிகமான ஆய்வுக்குரிய காரியங்கள் தூண்டும்போது நடைபெறுகின்ற முக்கிய ஆலோசனைகளுக்காக உலகின் அனைத்துக் கர்தினால்களும் அழைக்கப்படுகின்றனர்.

கர்தினால்கள் திருத்தந்தையோடு ஆர்வமுடன் ஒத்துழைக்கக் கடமைப்பட்டுள்ளனர். எனவே உரோமைச் செயலகத்தில் ஏதாவது ஒரு பதவியைக் கொண்டிருக்கும் மறைமாவட்ட ஆயரல்லாத கர்தினால்கள் உரோமையில் வாழக் கடமைப்பட்டுள்ளனர் என்றும் ஒரு மறைமாவட்டத்தில் ஆயராகப் பொறுப்பு வகிக்கும் கர்தினால்கள் திருத்தந்தையால் அழைக்கப்படும்போதெல்லாம் உரோமைக்கு செல்ல வேண்டும் எனவும் திருச்சபைச் சட்டத்தொகுப்பு எண் 356 கூறுகின்றது.

ஒருசில சிறப்பு நிகழ்வுகளில் அல்லது ஒருசில கூட்டங்களில் தமது பிரதிநிதியாகச் செயற்படத் தமது சிறப்புத்தூதராக அதாவது தமது 'மறு பிம்பமாக' இருக்கும் பணியானது திருத்தந்தையினால் ஒரு கர்தினாலிடம் ஒப்படைக்கப்படலாம். அவ்வாறே மேய்ப்புப்பணிசார்ந்த குறிப்பிட்ட ஓர் அலுவலைத் தமது சிறப்புத்தூதுவராக நிறைவேற்ற அவர் ஒரு கர்தினாலைப் பணிக்கலாம்.

நிறைவுரை

கர்தினால் ஒருவர் ஏனைய மறைமாவட்டங்களின்மேல் ஆட்சியதிகாரத்திலோ அல்லது வழிபாட்டிலோ எந்த மேலாண்மையையும் கொண்டிருக்கமாட்டார். ஒவ்வொரு மறைமாவட்டத்திற்கும் அதனதன் ஆயரே அதிகாரமிக்க பொறுப்பாளராக இருப்பார். கர்தினால் நிலை என்பது திருச்சபையில் ஒரு திருப்பட்டம் சார்ந்த திருநிலை அல்ல. தியாக்கோன் நிலை, குருத்துவ நிலை, ஆயர் நிலை என்பவையே அடையாளம்காணப்பட்ட திருச்சபையின் திருப்பட்ட (Ordained Ministries) நிலைகளாகும். திருத்தந்தையைக்கூட திருச்சபையின் சட்டத்தொகுப்பு நூல் 'உரோமை ஆயர்' அல்லது 'உரோமைத் தலைமைக்குரு' என்ற பெயராலேயே அழைக்கின்றது. காரணம் அவர் உலகத் திருச்சபையின் தலைவராக இருந்தாலும் அவரும் ஓர் ஆயர்தான். எனவே கர்தினால்கள் திருச்சபையின் சட்டத்தொகுப்பின் அடிப்படையில் பல சிறப்பான பொறுப்புக்களைக் கொண்டு விளங்கினாலும் கர்தினால் நிலை என்பது திருச்சபையில் ஒரு திருப்பட்ட நிலை அல்ல என்பதையும் அவர்களும் அடிப்படையில் ஆயர்கள்தான் என்பதையும புரிந்துகொள்வது முக்கியமாகும்.

ஆயினும் உரோமைத் திருச்சபையோடு அவருக்கிருக்கும் நெருங்கிய தொடர்பினால் ஒரு நாட்டினதும் ஒரு நாட்டுத் திருச்சபையினதும் முக்கிய விடயங்களில் ஒரு கர்தினாலுக்கு இருக்கும் செல்வாக்கை குறைத்து மதிப்பிட முடியாது. இன்றைய சூழ்நிலையில் இலங்கை நாட்டிலும், இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையிலும் புதிய கர்தினாலின் செல்வாக்கை அல்லது அவரது வகிபாகத்தை ஆராய்வதாயின் அது இன்னுமொரு தனியான கட்டுரையிலேயே சாத்தியமாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

மறையறிவுப் போட்டி- 90

இம்மாதத்திற்கான வினாக்கள் எபிரேயருக்கு எழுதிய திருமுகம் ஆறாம் அதிகாரத்திலிருந்து ஒன்பதாம் அதிகாரம் வரை உள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

புதிய ஓர் ஆண்டில் நாம் கால் பதித்துள்ளோம். 21ம் நூற்றாண்டின் முதலாம் தசாப்தத்தை நிறைவு செய்து இரண்டாம் தசாப்தத்துக்குள் வந்துவிட்டோம். ஆண்டொன்று போனால் வயது ஒன்று போகும். மறையறிவுப் போட்டியும் தனது ஏழரை ஆண்டுகளை நிறைவு செய்கின்றது.

இப்போட்டியில் பங்குபெறுவோரின் தொகை சராசரியாக 50க்கு உட்பட்டே உள்ளது. இப்போட்டி அடிப்படையில் மாணவர்களை மையமாக வைத்தே ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்களின் பங்குபற்றல் நிறைவாக இல்லை என்பது துல்லியமாகத் தெரிகின்றது.

இப்போட்டியில் பங்கு பற்றுவதன் மூலம் நீங்கள் கீழ்வரும் நன்மைத் தனங்களை அடைந்து கொள்ளலாம்.

1. வாசிப்புப் பழக்கம் நம்மை அறியாமலே நம்மில் வளர்ந்து வருகின்றது. "Reading Maketh a full man" வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணப்படுத்தும் என்பது ஒரு முது மொழி.
2. போட்டியில் பங்கு பற்றுவதன் மூலம் நாம் ஓர் எழுத்தாளனாக வரக்கூடிய வாய்ப்பைக் கட்டியெழுப்புகிறோம்.
3. இதன் வினாக்கள் திருவிவிலியத்திலிருந்து தொகுக்கப்படுவதால் விவிலியத்தின் பகுதிகளைத் திரும்பத் திரும்ப வாசிக்கும் பழக்கத்தை நம்மில் விருத்தி செய்கின்றோம்.
4. நம்மில் இறையறிவும் மறையறிவும் அன்பும் பெருகும் வாய்ப்பு அதிகரிக்கின்றது.
5. பொதுப் பரீட்சைகளில் அதிக மதிப்பெண்ணைப் பெறுவதற்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

ஆகவே இப்போட்டிகளில் பங்குபற்றும் நீங்கள் உங்கள் நண்பர்கள் சகமாணவர்களில் ஒருவரையாவது உற்சாகப்படுத்தி இப்போட்டிகளில் பங்கு கொள்ளச் செய்யுங்கள்.

எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் கிறீஸ்துவின் மேன்மையை மையக் கருத்தாகக் கொண்டிருக்கின்றது. கிறீஸ்து இறைவாக்கினர் வானதூதர்கள், பழைய உடன்படிக்கையின் இணைப்பாளராகக் கருதப்படும் மோசே ஆகிய எல்லோருக்கும் மேம்பட்டவர் எனக் காட்டப்படுகின்றார்.

பழைய ஏற்பாட்டுக் குருத்துவத்தை விட கிறிஸ்துவின் குருத்துவம் மாறுபட்டது. ஏனெனில் கிறீஸ்துவின் குருத்துவம் பழைய உடன்படிக்கையின் வாக்குறுதிகளை நிறைவு செய்கின்றது.

இனி எமது வினாக்களுக்கு வருவோம்.

1. புனித பவுல் எபிரேயரை எவ்விதமாக வாழும்படி கேட்கின்றார்.
2. மெல்கிசதேக்கின் முறைப்படி என்றென்றும் தலைமைக் குருவாக இருப்பவர் யார்?
3. மெல்கிசதேக்கு சலேம் நகரின் அரசர் **"சலேமின் அரசா"** என்பதின் பொருள் என்ன?
4. இஸ்ரயேலரின் குலம் பன்னிரெண்டு. குருத்துவப் பணி லேவியரின் குலத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நம் ஆண்டவர் யேசுதான் உன்னத குரு. அவர் எக்குலத்தில் தோன்றினார்?
5. திரு உறைவிடத்தில் முன் கூடாரம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கும் அங்கு ஒரு விளக்குத் தண்டும் ஒரு மேசையும் படையல் அப்பங்களும் இருக்கும். அவ்விடம் எப்படி அழைக்கப்பட்டது?
6. இஸ்ரயேல் வீட்டாரோடு இறைவன் செய்து கொள்ளும் புதிய உடன்படிக்கையின் சரத்து எது எனக் கூறப்படுகின்றது?
7. இரண்டாம் திரைக்குப் பின்னாலிருந்த திருத்தூயகத்தில் இருந்தவை எவை?
8. உடன்படிக்கைப் பேழையில் இருந்தவை எவை?
9. இரண்டாம் கூடாரம் திருத்தூயகத்துள் ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் செல்லும் தலைமைக் குரு இரத்தத்தைக் கொண்டுபோய் படைத்துப் பலி செலுத்துவார். எதற்காக?
10. கிறிஸ்து இணைப்பாளராய் இருந்து தம் சொந்த இரத்தத்தைப் பலியாக்கிச் செய்யப்பட்ட புதிய உடன்படிக்கை எதற்காகச் செய்யப்பட்டது.?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 88 இற்கான கேள்விகளுக்கு 30 பேர் விடையளித்திருந்தனர்

இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

வி. மரினா மரியநாயகி

நடுக்குடா, பேசாலை.

பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும்

10 அதிஸ்ரசாலிகள்

1. எஸ். யூட் அனுசியா, 1ம் ஒழுங்கை, ஸ்ரீராமபுரம், வவுனியா.
2. மேரி கிறிஸ்ரா, சாளம்பன், அடம்பன்.
3. நா. சுதர்ஷினி, ஆலங்குளம், வட்டக்கண்டல், மன்னார்.
4. எமிலன் பர்னாந்து, அன்பு சகோதரிகள் மடம், வவுனியா.
5. செ. ஜெசில்டா, ஆயர்இல்லம், மன்னார்.
6. அ. அனியூட் கனிசியஸ், தாமரைக்குளம், அடம்பன்.
7. அ. டிக்சன் லெம்பேட், திருக்கோணமடு, பொலநறுவை.
8. அ. ருஷாந்தினி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
9. ப. வதனா, வாழ்க்கைப் பெற்றான் கண்டல், அளவக்கைப்பங்கு.
10. சி. வின்சன் யோட்ஸ், சின்னப்பட்டிவிரிச்சான், மடு.

புதிய கர்தினால்களுக்காகச் செபிக்குமாறு திருத்தந்தை அழைப்பு

இலங்கை, கொழும்புப் பேராயர் மல்கம் இரஞ்சித் ஆண்டகை உட்பட 24 பேர் கடந்த நவம்பரில் புதிதாகக் கர்தினால்களாக உயர்த்தப்பட்டுள்ளார்கள். அச்சமயம் திருத்தந்தை இப்புதிய கர்தினால்களின் பணிகளுக்குச் செபம் மற்றும் ஒத்துழைப்பால் ஆதரவளிக்க நம்பிக்கையாளர்களுக்கு அழைப்பு விடுத்தார். கடந்த டிசம்பர் 10 வரை திருச்சபையில் கர்தினால்களின் மொத்த எண்ணிக்கை 201. இவர்களில் எண்பதுவயதுக்கு உட்பட்டவர்களுக்கே திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உள்ளது. இவர்களின் எண்ணிக்கை 121.

உங்களுக்குத் தெரியுமா?

மறையறிவுப் போட்டி

88 இற்கான சரியான விடைகள்

(தீத்து, பிலமோனுக்கு எழுதிய திருமுகங்கள்)

1. நம் மீட்பராம் கடவுள் இட்ட கட்டளைப்படி ஒப்படைக்கப்பட்டது எனப் புனித பவுல் கூறுகின்றார்.
2. திருச்சபைத் தலைவர்கள் எத்தகைய பண்புடையவர்களாக இருக்க வேண்டும் எவற்றைத் தவிர்க்கவேண்டும் என வலியுறுத்துகின்றன.
3. கிரேத்தர்களின் இறைவாக்கினர் ஒருவர்.
4. அறிவுத் தெளிவு, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்களாய் இருந்து நம்பிக்கை, அன்பு, மனவுறுதி ஆகியவற்றைக் காத்துக் கொள்ளவேண்டும்.
5. தங்கள் கணவர்களிடமும், பிள்ளைகளிடமும் அன்பு காட்டி கட்டுப்பாடும் கற்பும் உள்ளவர்களாய் வீட்டு வேலைகளைச் செவ்வனே செய்பவர்களாய் தங்கள் கணவருக்குப் பணிந்திருக்க வேண்டும்.
6. நம்மை எல்லா நெறிகேடுகளிலிருந்தும் மீட்டு நற்செயல்களில் ஆர்வமுள்ள தமக்குரிய மக்களாகத் தூய்மைப்படுத்த தம்மையே ஒப்படைத்தார்.
7. நாம் செய்த அறச்செயல்களை முன்னிட்டு அல்ல மாறாக தம் இரக்கத்தை முன்னிட்டு நம்மை மீட்டார்.
8. பிலமோனுக்கும் சகோதரி அப்பியாவுக்கும் அர்க்கிப்புக்கும் பிலமோன் வீட்டில் கூடும் திருச்சபைக்கும்.
9. பிலமோனின் அன்பைக் குறித்து
10. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.103

1,2 தெசலோனிக்கர் திருமுகங்கள்

உங்கள் விடைகளை 15.02.2011க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

01		02	03			04	✱		05
	✱	✱		✱	06				07
		08		✱	✱	✱	09	10	
	✱		11	✱	✱	✱			12
13			14		15		✱	16	✱
	✱	✱	✱	✱			✱		
	✱	✱	✱	✱		17	✱		18
	✱			19			✱		
	✱		✱	20	21				
22		23				24		25	

(__என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

இடமிருந்து வலம்

1. தெசலோனிக்கா ஒரு ..... நகரம்.
6. கடவுள் யார் விடுத்த அழைப்புக்குத் தகுதியுள்ளவராக்குவார்?
9. கடவுளின் தீர்ப்பு ..... யானது.
13. நம்மை ஏமாற்ற ..... கொடுக்கக்கூடாது.
21. உங்கள் ஒவ்வொருவருக்கும் ..... வழங்கினோம்
22. கடவுள் நம்மை அழைத்தது..... வாழ்விற்கே.
23. தூய ஆவியின் ..... பாட்டைத்தடுக்க வேண்டாம்.
24. இதில் வாழ்ந்ததால் பவுல் உயிர் வந்ததாகக் கூறுகிறார். எதில்?

வலமிருந்து இடம்

2. கிறிஸ்துவின் வருகையைப் பற்றி ஆறு ..... பேசப்படுகிறது.
4. உண்மையை என்ன செய்து மீட்பு அடையும்படி கடவுள் தேர்ந்து கொண்டார்?
7. உங்களிடையே__ உங்களுக்கு .....
8. தூயவராகக் கருதப்படவேண்டியவர் .....
12. சோம்போறிகள் .....த் திரிகின்றனர்.
14. ..... ஆட்சியிலும் மாட்சியிலும் பங்குபெறக் கடவுள் அழைக்கிறார்.
15. தூய ..... கொடுத்து__வாழ்த்துங்கள்.
17. இவ்வாழ்த்தைப் ..... லாகிய நான் என் கைப்பட எழுதுகிறேன்.
19. ..... பிரிவைத் தாங்க__ அனுப்பினேன்.
24. இயேசு வரும்போது முழுமையாகக் காப்பதில் ஒன்று .....

மேலிருந்து கீழ்

3. நன்றி செலுத்தக் .....பட்டிருக்கிறோம்.
4. ..... ஆண்டவ__ உண்டாகுக!
5. ..... நகரில் தனிமையாக இருக்க முடிவு செய்தோம்.
8. எவரும்..... தளர்ந்து__ அனுப்பினோம்.
13. .....யாக எங்களுக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.
15. .....இல்லா அழிவைத் தண்டனையாகப் பெறுவர்.
16.சோம்பல்.....
17. முறைமைகளைப் .....க் கொண்டு__யிருங்கள்.
18. இதில் இன்பம் காண்பவர் தீர்ப்புக்கு உள்ளாவர். எதில்?
20. விலகி ..... லுங்கள்.

கீழிருந்து மேல்

6. ..... விடுத்த அழைப்புக்கு உங்களை தகுதியுள்ளவராக்குவாராக.
10. நாங்கள் சோம்பித் ..... வில்லை.
11. எவருக்கும் .....யாய்__ உழைத்தோம்.
13..... இறைவனிடம் வேண்டுங்கள்
17. ஆண்டவருடைய வார்த்தை எப்படிப் புகழ்பெற்றது?
18..... னிடமிருந்து காத்தருள்வார்.
21. .....த் தெளிவோடும் இருப்போம்.
22. தம்முடைய ..... அனைவரோடும்__ உறுதிப்படுத்துவாராக.
23. வேலை .....கொண்டே __ பறைசாற்றியுள்ளோம்.
25. வார்த்தை உங்களிடையே ..... பரவிப் புகழ்பெற்றது.

மறைசாட்சிகளின் மண்ணில் தியான மையம்

தகவல் : செல்வி. மேர்ளின், தோட்டவெளி.

தோட்டவெளி வேதசாட்சிகள் இராக்கினி ஆலயத்தில் வேதசாட்சிகளின் இரத்தம் எம் விசுவாசத்தின் வித்து என்னும் எம் மக்களின் ஆழமான விசுவாசத்தை அடிப்படையாக கொண்டு ஆன்மீக மையம் ஆரம்பிக்கப்பட்டு இயக்குனர் அவர்களின் வழிநடத்துதலில் இறைவனுடைய வார்த்தையை கேட்க தாகத்தோடு நாடி வருகின்ற ஒவ்வொருவர் மேலும் அருள் மழை பொழியப்பட்டு கொண்டிருக்கின்றது.

மாதத்தின் 2வது, 4வது சனி மு.ப. 9.30 - பி.ப 3.30வரை உபவாச தியானமும் புகழ்ச்சி செபங்களும், திருப்பலியும், இறுதியாக உயிருள்ள ஆண்டவரின் நற்கருணை பிரசன்னத்தின் முன் உருக்கமானதொரு குணமாக்கல் வழிபாடும் நடைபெறுகின்றன. பல அற்புதங்களையும், அருள்களையும் செப உதவியை நாடி நிற்கின்ற அடியவர்களுக்கு இத்தியான மையத்தினூடாக இறைவன் அருள் பொழிகின்றார். மேலும் போயா தினத்திற்கு முந்தின இரவு 9.30மணி - காலை 5.30மணிவரை "தூங்காமல் விழித்திருந்து செபிக்கும் வரம் தாங்கப்பா" என வேண்டிச் செபிக்கும் திருவிழிப்பு ஆராதனை இடம்பெற்று ஆன்மீக அருள் பொழியப்படுகிறது.

மனிதரினாலும், செல்வத்தினாலும் வாழ்வு உண்டு என நம்பி மன நிம்மதியை இழந்து வாழுபவர்களுக்கு "உலகம் தர முடியாத அமைதியை, ஆறுதலை நான் தருகின்றேன்" என மொழிந்த ஆண்டவர் யேசுவின் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டு அவரை நாடி அமைதியைப் பெறவும் உலக ஆசைகளினால் மூழ்கி ஆன்மாவை அழித்துக் கொண்டிருக்கின்றவர்களுக்கு அழிந்து போகும் செல்வத்தில் வாழ்வு இல்லை இறைவனுடைய வார்த்தையே எம்மை வாழ வைக்கும். அவரை நாடுகின்றவர்களுக்கு அனைத்து ஆசிகளையும் பொழிய வல்லவராக பரலோக தந்தை இருக்கிறார் என எம் ஒவ்வொருவரையும் மனமாற்றத்திற்கு அழைக்கும் பணியினை இத்தியான மையமானது செய்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வியாழனும் மாலை 5.00 மணிக்கு நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு வழிபாட்டில் பங்கெடுப்போரின் தேவைகளுக்காக மட்டுமன்றி தேவையில் வாழுகின்ற பல்வேறு மனிதர்களுக்காக பரிந்துரைச் செபம் செபிக்கப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுகின்றது. அத்தோடு ஒவ்வொரு வெள்ளியும் இரவு 9.00மணி - 10.00மணிவரை ஒரு மணிநேர புகழ்ச்சி ஆராதனையும் இறைவார்த்தை பகிர்வும் இடம்பெறுகின்றன. இவ்வழிபாடுகள் இறைவார்த்தையை கேட்பதோடு மட்டும் நின்றுவிடாமல் அதை வாழ்வதற்கு எம்மை விட்டுக் கொடுத்து பணிகின்ற மனப்பக்குவத்தை எம்மில் உருவாக்க உதவியாகவும் பயிற்சியாகவும் அமைகிறது.

இக்கால சூழ்நிலையில் போரினால் பாதிப்புற்று உடைமைகளை இழந்து உறவுகளை இழந்து உடல் அங்கங்களை இழந்து வாழ்க்கையே வீண் என நம்பிக்கையிழந்து சொல்லொண்ணா துன்பங்களை நெஞ்சிலே சுமந்து கொண்டு மன நிம்மதியிழந்து வாழுகின்றவர்களை பார்க்கின்றோம். ஆண்டவருடைய வார்த்தையே நிம்மதியை கொடுக்க வல்லது; அவரால் ஆகாதது ஒன்றுமில்லை; ஆறுதலையும் விடுதலையையும் தரக்கூடியவர் அவர் ஒருவரே என்பதை வெளிப்படுத்த, நொந்து போன மக்களை தேற்றி வாழ்வளிக்க மாதத்தில் ஒரு தடவை இத்தியானம் வன்னியில் நடைபெறுகின்றது. இத்தியானங்களில் பங்கு பற்றி பலன் பெறுகின்றவர்கள் ஏராளம். இவர்களின் சாட்சிய அனுபவ பகிர்வுகள் தியானங்களில் பங்கெடுப்போரின் விசுவாசத்தை ஆழப்படுத்த உதவியாக உள்ளது. எனவே இத்தியான மையத்தில் நடைபெறுகின்ற தியானங்களில் பங்கு பற்றி பலன் பெற்று இறைவனுக்கு மகிமை சேர்க்கும் மக்களாக வாழ அனைவரையும் அழைத்துச் நிற்கின்றோம். வாருங்கள், கேளுங்கள் இறைவனுடைய மகத்தான செயல்களை உலகெங்கும் அறிவியுங்கள்.

தோட்டவெளி ஆன்மீக மைய நிகழ்வுகள்

நிகழ்வுகள்	நாட்கள்	நேரம
திருவிழிப்பு	போயா தினத்திற்கு முந்தின இரவு	மாலை 9.30 - காலை 5.30
பரிந்துரைச் செபம்	வியாழன்	மாலை 5.00 - 7.00
இறைவார்த்தைப் பகிர்வு	வெள்ளி	மாலை 9.00 - 10.00
உபவாசத்தியானம்	மாதத்தின் 2வது, 4வது சனி	காலை 9.30 - மாலை 3.30

விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 101ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

முதலாம் பரிசு:

அ. ஸ்டெலாமேரி

இல. 51.

அருளாளர் அன்னை தெரேசா ஆலயம்

துட்டுவாகை

இரண்டாம் பரிசு:

அ. அருள்மேரி,

இல 162,

உதயநகர் கிழக்கு,

கிளிநொச்சி.

மூன்றாம் பரிசு:

ச.டொறிஸ் அலன்ரா,

காயாநகர்,

ஈச்சளவக்கை,

பெரியமடு.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 103 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 99 பேர்.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 101ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. திருமதி. ஜெயம் நந்தா, பரிஸ், பிரான்ஸ்.
2. எம். திரேசா, இல118, 3ம் வீதி, எமில்நகர், மன்னார்.
3. செ. ஜெயந்தினி, தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், மன்னார்.
4. ரோ. ஸ்ரெலா, இல 50, வீரபுரம், நேரியகுளம்.
5. C. மேரிறொக்சி, பெரியகமம், எழுத்தூர், மன்னார்.
6. திருமதி. மே.மா.யோ. பசில், 41/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
7. க. மேரிபிரபாளினி, பெரியகடை, மன்னார்.
8. ஜீ. யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
9. எ. சந்திரதீபன், ஆண்டார்செட்டிவெளி, நானாட்டான்.
10. வி.சி. பேரின்பநாயகம், "வசந்தம்" ஆஸ்பத்திரிவீதி, மன்னார்.
11. கே. இக்னேசியா தர்சினி, ஜீவபுரம், எமில்நகர், மன்னார்.
12. இ.கே.எரோன்சி, கங்காணிதீவு, நானாட்டான்.
13. க. றெபேக்கா ஏஞ்சலின், சின்னக்கடை, மன்னார்.
14. அ. புலோரிதன், கீளியன் குடியிருப்பு, தலைமன்னார்.
15. டி. ஆன்ட்ரியா, கங்காணிதீவு, நானாட்டான்.
16. ஜி. அல்பேட், வெங்கம்லேன், பாலையூற்று, திருகோணமலை.
17. வ. சுலைக்சனா, அன்புக்கன்னியர் இல்லம், வவுனியா.
18. வி. மேரி றெஜினா, சின்னப்பட்டிவிரிச்சான், மடுக்கோவில், மடு.
19. சி. பிரான்சிஸ் பீரிஸ், சிலாபத்துறை, அரிப்பு.
20. க. கிருசாந், நேரியகுளம், வவுனியா.
21. செ. செருபினி, இலைமாலைத்தாழ்வு, முருங்கன்.
22. ம. மத்தியூஸ் குரூஸ், சிலாபத்துறை, அரிப்பு.
23. பீ. கஸ்தூரி, இல 123-2/1, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13.
24. செ. மேரிசெறோமி, 39/4, பீற்றர் மென்டிஸ்றோட், நீர்கொழும்பு.
25. பே. அனுஷா, ப.துட்டுவாகை, நேரியகுளம்.
26. எஸ். வினோதினி, நறுவிலிக்குளம், வங்காலை.
27. எமலின் பர்னாந்து அ. க. இல்லம், கோமரசன் குளம், வவுனியா.
28. க. மடோனா, திருக்குடும்ப கன்னியர் மடம், இறம்பைக்குளம், வவுனியா.
29. எஸ். ஆனந் டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
30. க. றெஜினோல்ட், இல 54, கற்குளம் - 2, சிதம்பரபுரம், வவுனியா.
31. அருட்சகோதரி யசோதா, திருக்குடும்ப கன்னியர்மடம், வவுனியா.
32. டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், அன்ரனிஸ்வீதி, பேசாலை.
33. வே. அபூட் அனுவுலா, எழுத்தூர், மன்னார்.
34. ஞா. அருள், பட்டித்தோட்டம், மன்னார்.
35. எஸ்.எம்.குலோஜினி மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
36. ஏ. டிவோன்ஸ், பிச்சக்குளம், முருங்கன்.
37. அ. பெபிஷா, புதுக்கமம், உயிலங்குளம்.
38. என். ஜெகப்பிரியன், இல 180, ஒல்லிமோட்டை, மன்னார்.
39. ஆ. அன்ரனிஸ் லெம்பேட், 5ம் வட்டாரம், வங்காலை.
40. ஞா. அனுக்கிரகா டலிமா, கோவில்வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
41. கெ. சுகந்தினி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
42. சிபில்லா ஜோண், சென்ஜோண்ஸ் வீதி, கொழும்பு.
43. என். கார்த்திகா, ஆலங்குளம், வட்டக்கண்டல், மன்னார்.
44. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
45. ஏ. யூட்கலிஸ்ரா, சின்னக்கடை தெற்கு, மன்னார்.
46. திருமதி. அ. லூர்தம்மா குரூஸ், வைத்தியசாலை வீதி, மன்னார்.
47. ம. நீசாராசமலர் குரூஸ், சிலாபத்துறை, அரிப்பு.
48. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
49. எவறிஸ் றொபேட் றமீசன், எழுத்தூர், மன்னார்.
50. அ. சுகன்யா, தேவன்பிட்டி புதுக்காடு, மன்னார்.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 101இற்கான சரியான விடைகள்

ந[1]	ம்	மை	ண்	அ[2]	ல	கை[3]	தி[4]	மை	[5]அ
ன்	✱	டி	✱	✱	ப[6]	ழி	ரை	✱	ஞ்
ன	✱	அ[7]	ன்	பி	ன்	நா[8]	✱	றை	சி
ய	தூ[10]	✱	பு[11]	தி	ய	ன்	✱	✱	ரி
ம்	ற	ற்	சீ[12]	✱	வ்[13]	✱	உ[14]	✱	யா
நா[15]	✱	✱	னா	✱	ள	✱	ட	✱	✱
✱	சி	✱	ய்	உ[16]	ற	வி	ல்	✱	ல்
வி	ஆ[17]	ர்	வ்[18]	ம்	✱	யூ[19]	ட	✱	ற
னை	✱	✱	ரு	டு	✱	த	ண்	✱	ற்
ம[20]	து	✱	ம்	வி[21]	✱	ர்	வே[22]	ணி	ஆ[23]

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.102ற்கான முடிவுகளை 2011ம் ஆண்டு பெப்ரவரி மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சத்து நினைவுகள்

5ம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி. இந்திரா அல்பிறட்
தோற்றம் : 26.05.1950
மறைவு : 01.02.2006

திரு. அல்பிறட் விஜயரட்ணம்
தோற்றம் : 10.07.1943
மறைவு : 02.01.2006

"சீவியத்தில் எம்மை நேசித்தவர்களே
மரணத்திலும் எம்மை மறவாதீருப்பீர்களாக"

இல்லறத்தை நல்லறமாக்கி
எமக்கெல்லாம் வழிகாட்டி
பண்பாய், நேசமாய், பாசமாய்
அரவணைத்து உயர்வாழ்வு தந்த
அம்மா, அப்பாவே உங்கள் ஆன்மா
சாந்தி பெற உளமாற வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்

1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 ✝ 10 ✝ 1934



உதிர்வு 09 ✝ 01 ✝ 2010

அமரர் மரிசால் அந்தோனி

இளைப்பாறிய தபால் ஊழியர்
பெரியகுஞ்சுக்குளம், மடுவீதி

பெற்றோரின் ஓர் ஆண் மகனாய்
மனைவிக்கு அன்புக் கணவராய்,
தபால் சேவையின் நல் ஊழியனாய்
கடவுளின் சேவைக்கு உடலை
ஊனமாக்கி நோயினால் கஸ்ரப்பட்ட உம்மை
எம்மிடமிருந்து பிரித்து இன்றோடு ஓராண்டு
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காத உம் நினைவோடு உம் ஆன்மா
சாந்தியடைய தினமும் இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 ✝ 06 ✝ 1994

உதிர்வு 12 ✝ 01 ✝ 2010

அந்தோனி சிறோமி பெரேரா

பள்ளிமுனை, மன்னார்

பன்னிரு மாதங்களல்ல எத்தனை
யுகங்களானாலும் மாறாது உன் பிரிவு
பட்டாம் பூச்சி போல் எங்கள் வீட்டில் - நீ
சிறகடித்துத் திரிந்தாயே
இவ்வளவு சீக்கிரம் இப்படி நடக்குமென
ஒருவர் கூட நினைக்கவில்லையே
அழகிய உன் விழிகளில் மரணத்தின் சாயல்
முதல் நாள் கூட தோன்றவில்லையே
இறைபணி செய்ய நீ ஆசைப்பட்டாய்
இச் சிறிய பூ தன்னருகே வேண்டுமென்று
இறைவன் ஆசைப்பட்டாரோ...

உன் நினைவுகளில் துயருவோர்
பெற்றோர், சகோதரர், உறவினர், நண்பர்கள்.

3ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28.06.1979
உதிர்வு 29.01.2008

கி. ஜெறாட் ஞானகரன் (ஜெறாட் சாரதி)

மலர்வு 11.08.1992
உதிர்வு 29.01.2008

செ. பூட்கொஸ்ரன் (றெனி)

மலர்வு 08.07.1995
உதிர்வு 29.01.2008

செ. பூட்கொலின்ரன் (ஜெனி)

விழிநீரை மழையாக்கி எங்கள் வேதனையில் ஆழ்த்தி விட்டுச் சென்ற எங்கள் அன்புத்தெய்வங்களே!
ஒளி விளக்காய் இருந்த எங்கள் குடும்பம் இன்று இருள் சூழ்ந்து கொண்டது. எம் இதயத்தில் அன்பின் சுடராய் என்றும்
வீற்றிருக்கும் செல்வங்களே! எம்மை எல்லாம் தவிக்கவிட்டுச் சென்று மூன்று ஆண்டுகள் யுகமாய் சென்றாலும்
உங்கள் பாச நினைவலைகள் என்றும் எம்மைவிட்டு அகலாது. உங்கள் திருமுகம் எங்கள் கண்முன்னே நிழல் ஆடுதப்பா!
எங்கள் ஆருயீர் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம். அன்றைய நாளில் இறந்த
அனைவரதும் ஆன்ம ஈடேற்றத்திற்காய் வேண்டுகின்றோம்.

பாசமிகு : அப்பா, அம்மா, அக்காமார்.
பாசமிகு மனைவி
தகவல்: குடும்பத்தினர்.

நினைவூட்டும் நினைவலைகள்...

என்ன வளம் இல்லை எம் வன்னியிலே
ஓர் கணம் நினைத்துப் பார்க்கின்றேன்
எழுந்தது கடலலை வன்னியின் எல்லை வரை
காவு கொண்டது கரையை மட்டுமல்ல
கரையோர எம் உறவுகளை

வளம் கொழிக்கும் கடலே... !
வாழ்வு கொடுத்த வாழ்வாதாரமே!
அம்மா கடல் தாயே! உனக்கு மட்டும் தான் தெரியும்
உம் பிள்ளைகள் போன இடம்

அம்மா! தாயே கடல்தாயே!
6ம் ஆண்டில் அழுது கேட்கின்றோம்
எம் இரத்த உறவுகள் போன இடம் எங்கே?
ஏன்? அம்மா மௌனம் காக்கின்றாய் பதில் தரமாட்டாயா?

அடங்கியது சுனாமியின் அழுகுரல்கள்
தொடங்கியது போரின் புரையோடல்கள்
போவது எங்கே? என்னும் புலம்பல் தொடங்கியது

எவற்றை இழக்கவில்லை இறுதியில்
எல்லாம் இழந்தோம் ஆனால்!
கடவுள் மேல் கொண்ட விசுவாசத்தை
இழக்காது ஆழமாக உணர்ந்தோம்
நினைவூட்டும் நினைவலைகளுடன்
எழுவோம் புதிதாய் பிறப்போம்

யே.ஜெஸ்மின், தி.கு.க.ம, ஹல்பே, கற்றான.

2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 ✝ 02 ✝ 1982

உதிர்வு 10 ✝ 01 ✝ 2009

செ. ஜெயசீலன்

கன்னாட்டி, முருங்கன்.

"நீதிமான்கள் உரிய காலத்திற்கு முன் இறந்தாலும்
இளைப்பாற்றி அடைவார்கள்.
குற்றமற்ற வாழ்க்கையே உண்மையான பழுத்த முதுமை"
(சா.ஞா. 4:7-9)

ஆண்டுகள் இரண்டு உதிர்ந்தாலும்
ஆறுமோ எம் இதயக்காயங்கள்
மண்ணகவாழ்வு நிலையற்ற தென்றாலும்
உன் உதிர்வு, உன்வாழ்வு, உன்முகம் - கண்ணே
மறக்க முடியாது எம்மால் -
பிரார்த்திக்கின்றோம் ஆன்மசாந்திக்காய்
தினம் தினம் வேண்டுகின்றோம்
இறைவனில் இளைப்பாற்றி அடைவாய் என.

உன் பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள்.

10ம் பக்க தொடர்ச்சி.....

2011 ம் ஆண்டின் மன்னார் .....

தீர்மானம் : 02

பங்குகளில் ஆன்மீகத்தையும் பணியையும் மையமாகக் கொண்ட இளைஞர் தோழமைக்குழுக்களை (உ+ம்: பவுலடியார் செபக்குழு, புதுப்படைப்பு, அருளாளர் ஜோசப்வாஸ் மன்றத்தினர், அன்னைத்திரேசா பணிக்குழு) உருவாக்கி தொடர் வழிப்படுத்தி இறைவார்த்தையில் அவர்களை வேரூன்றச் செய்து, செபித்து தமக்கென்று பணிகளைத் திட்டமிட்டு நிறைவேற்ற வழிநடத்துதல்.

தீர்மானம் : 03

மடுவில் நடைபெறும் வருடாந்த தியானத்தில் விதிவிலக்கின்றி எல்லா இளைஞரும் பங்கேற்க பங்குத்தந்தையர்கள் ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல். இந்தத் தியானத்தை நான்கு (4) நாட்களுக்கு இரு குழுக்களாகப் பிரித்து சிறந்த வளவாளர் மூலம் நடாத்துதல். இத்தியானத்தில் ஒவ்வொரு பங்குத்தந்தையும் குறைந்தது ஒரு நாளாவது பங்கெடுத்தல்.

தீர்மானம் : 04

ஒவ்வொரு பங்கிலிருந்தும் பெற்றோர், சமூகப் பெரியார், இளைஞர் ஒன்றிய போசகர், இளைஞர் நலன் விரும்பிகள் என்று ஐவர் ஐவராகத் தெரிவு செய்து மறைக்கோட்டங்களில் "எவ்வாறு இளைஞரைப் புரிந்து கொள்வது, உருவாக்குவது" பற்றி 2நாள் பயிற்சியளித்தல். அவர்கள் ஊடாக பங்குகளில் ஏனையவர்களுக்கு கற்றுக்கொடுத்து சாட்சியம் பகர்தல்.

இளைஞரின் சமூக வாழ்வு

தீர்மானம் : 01

பொதுவாக இளைஞர் வேலை வாய்ப்பு இன்மையால் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே பங்கு மேய்ப்புப்பணிச் சபை கிராம சேவகர்களின் உதவியுடன் இது தொடர்பான எல்லாத் தகவல்களையும் தமது பங்கில் திரட்டுதல். அவர்களை துறைசார்பாக பிரித்தெடுத்து மறைக்கோட்ட ரீதியாக அவர்களின் விருப்பமான துறைக்கேற்ப பயிற்சியளித்து சான்றிதழ் வழங்குதல். அவர்களின் தகைமைக்கேற்ப அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களில், தொழிற்கூடங்களில் வேலை வாய்ப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற வேளையிலும் மற்றும் அரச உதவிகள் பற்றிய தகவல்கள் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களிலும் இளைஞர் கவனத்திற்கு கொண்டுவருதல். இதற்கு வாழ்வுதயம், ஜே.ஆர்.எஸ் நிறுவனங்களின் உதவியைப் பெறுதல்.

தீர்மானம் : 02

பங்குகளில் பல்வேறு துறைசார் தகைமை பெற்று சான்றிதழ் வைத்திருக்கும் இளையோரின் பட்டியல் தயாரித்து, ஒவ்வொருவரும் தமக்கு ஈடுபாடுள்ள - ஆர்வத்தோடு பயிற்சி பெறக்கூடிய துறைகளில் முன்னேற வழிகாட்டுதல். இந்த விடயமாக கைத்தொழிற்பேட்டை அதிகாரிகள், சுயதொழில் விற்பன்னர்கள் போன்றவர்களின் ஆலோசனைகளையும், வழிகாட்டுதலையும் பெற முயற்சித்தல்.

தீர்மானம் : 03

காலாண்டுக்கு ஒரு தடவை மறைக்கோட்டங்களுக்கிடையே இளைஞர் சங்கமங்களை ஏற்படுத்துதல். அப்போது சமூக விடுதலை, மனித, கிறிஸ்தவ மதிப்பீடு பற்றிய கலந்துரையாடல்கள், விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல்.

தீர்மானம் : 04

பங்கு மேய்ப்புப்பணி சபை தனது பங்களிப்புடன், வேறு அரச, அரச சார்பற்ற ஸ்தாபனங்களிடமிருந்தும் கூடிய நிதியைப் பெற்று இளைஞர் உருவாக்கத்திற்காகவும், பணிக்காகவும் பயன்படுத்தல்.

தீர்மானம் : 05

இங்கு குறிப்பிடப்படும் இளைஞர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சு, நடனம், வில்லுப்பாட்டு, குறுநாடகம், கூத்து, விவாத அரங்கம் போன்ற போட்டிகளை காலாண்டுக்கு ஒரு தடவை மறைக்கோட்ட ரீதியாக நடாத்தி பரிசு வழங்கி ஊக்குவித்தல். இவ்விதம் மண்ணின் கலைகளைப் பேணிப் பாதுகாத்து வளர்க்க முயற்சித்தல்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுவர் பொழிவு

விவிலிய சிறுகதை

சிறுவனாகிய இயேசு

(லூக்கா 2:39-52)

நாசரேத் ஊரிலே குழந்தை இயேசு வளர்ந்தார். அவருடைய தாய் மரியா, தகப்பன் யோசேப்பு. பெற்றோரை அதிகமாய் நேசித்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து, அவர்களுக்கு உதவிகள் செய்தார். இயேசு ஞானத்தில் விருத்தியடைந்தவராய் வளர்ந்தார்.

அவரின் பெற்றோர் வருடந்தோறும் எருசலேம் ஆலயத்தில் நடைபெறும் பாஸ்கா விழாவிற்கு இயேசுவைக் கூட்டிக் கொண்டு போவார்கள். வழக்கம் போல பன்னிரெண்டு வயதாயிருக்கும் போது அவர்கள் இந்த பாஸ்கா விழாவிற்கு போனார்கள். விழா நாட்கள் முடிந்து, அவர்கள் திரும்பி ஊருக்கு வருகிறபோது, சிறுவனாகிய இயேசு எருசலேமிலேயே இருந்து விட்டார்.

ஒரு நாள் பிரயாணமாய் வந்தபின், பெற்றோர் இயேசு தங்களோடு வரவில்லை என்பதை அறிந்தார்கள். அவர்கள் உறவின் முறையாரிடத்திலும், அறிமுகமானவர்களிடத்திலும் அவரைத் தேடி, மறுபடியும் மூன்று நாட்களுக்குப் பின் எருசலேம் ஆலயத்திற்குப் போனபோது இயேசு யூத போதகர்கள் நடுவில் உட்கார்ந்து அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும் அவர்களை வினவவும் கண்டார்கள். அவர் பேசக் கேட்ட யாவரும் அவருடைய புரிந்து கொள்ளும் திறனையும் துணிந்த பதிலையும் குறித்து வியப்படைந்தார்கள்.

அவருடைய பெற்றோர் அவரைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். அவருடைய தாய், "மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? உன் தந்தையும் நானும் கவலையோடு உன்னைத் தேடினோமே" என்றாள். அதற்கு சிறவன் இயேசு, "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்க வேண்டுமென்று உங்களுக்கு தெரியாதா?" பின்பு இயேசு அவர்களுடனே கூட நாசரேத்துக்குப் போனார். மரியா இதனை தன் உள்ளத்தில் பதித்து வைத்திருந்தாள். இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராக இருந்தார்.

படிப்பினை: கடவுள் தம் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாம் சிறுவர்களாக இருந்தாலும் நமக்கு ஞானத்தையும் அறிவையும் தருவார்.

பாலகரே! உங்கள் கைவண்ணத்தை இங்கே காட்டுங்கள்

சிறுகதைக்கு பொருத்தமான இப் படத்தை உங்கள் கலைநயத்திற்கேற்ப நிறந்தீட்டி மகிழுங்கள்

கவிதைப் பூக்கள்

பொங்கலோ பொங்கல்

பொங்குக பொங்கல் பொங்குக
நன்றியால் உள்ளம் பொங்குக
பொங்குக பொங்கல் பொங்குக
நன்றியால் நெஞ்சம் பாடுக

தேவா உன் வேலைப்பாடுகள்
எத்தனையோ எத்தனையோ
அத்தனையும் ஞானத்தோடு செய்து முடித்தீர்
உன் படைப்பால் நிறைந்துள்ளது வையகம்

நீர்நிலைகள் பெருகச் செய்தீரே
பயிர்களையே விளையச் செய்தீர்
கால்நடைகள் வாழ்ந்திட புல்வெளித் தந்தீர்
மகிழ்ச்சியினால் வாழ்வினை நிரப்பினீர்

பொங்கலாய்ப் பொங்க

தீண்டாமைத் தீயை
நிரந்தரமாய் அணைத்திட
பைந்தமிழ்த் தை மகளே
பொங்கியே வருகவே....!

வன்முறை நீங்கிய
வளமான தாயகத்தில்
பைந்தமிழ்த் தழைக்கவே
ஏந்திழை தை மகளே
பொங்கலாய்ப் பொங்க....!

உழவப் பெரு மக்களுக்கு
நன்றி சொல்லும் பெருவிழா இது...!
அறுவடைத் திருவிழா!

ஆண்டுக்கு ஒரு முறை
அவர்களுக்கு நன்றி சொல்லிவிட்டு
மற்ற காலங்களிலே
அவர்களை மறந்து வாழும்
குறை தீர்ப்பாய் தேவா!

உழைப்பவர்களின்
நெற்றி வியர்வையிலே
உன்னையே தரிசிக்கும்
உந்துதல் தா!

உழுவோரிலே உம்மைத்
தொழுது வணங்கும் பாக்கியம் தா...! - ஜெரி -

கொஞ்சம் சிரிங்க

அப்பா :- மகனே நம்ம விட வயசில பெரியவங்ககிட்ட மரியாதையாக நடந்துக்கணும் சரியா

மகன் :- ஏம்பா அம்மாவுக்கு உங்கள விட வயது கூடவா அப்பா.

ம. டிசாளினி, 42/2, தாஸ்கோட்டம், நெளுக்குளம், வவுனியா.

மஞ்சு : அது யாரு அம்பிகா தானே போறா?
அஞ்சு : ஆமா
மஞ்சு : கல்யாணத்துக்கப்புறம் அவள் எப்படி குண்டாயிட்டா பாரு
அஞ்சு : அவ கொடுத்து வச்சவ கட்டிக்கிட்டது சமையல்காரனாச்சே.

K. பிரியா , A/80, மடுக்கரை, நானாட்டான்.

மனைவி :- ஏங்க நான் இறந்த பின் எனக்காக என்ன கட்டுவீங்க?

கணவன் : உனக்காக உன் தங்கைக்கு தாலி கட்டுவேன்.

யூ.மேரி. ஆனொலின் பறுனாந்து, முத்தரிப்புத்துறை

டாக்டர் : உங்களுக்கு வந்திருக்கிறது என்ன வியாதின்னு தெரியலை

பேஷண்ட்: அப்படின்னா நீங்களே அதுக்கு நல்லதா ஒரு பெயர் வச்சிடுங்க டாக்டர்

திருடன் 1: எதுக்காக அந்த வீட்ல திருடப் போய் திரும்பி வந்துட்டே?

திருடன் 2: நான் போனப்ப அந்த வீட்டுக்காரனே மனைவி தூங்கறப்போ பீரோவை கள்ளச்சாவி போட்டு திறந்துகிட்டிருந்தான் தொழில்ல போட்டி வேணாம்னு திரும்பி வந்துட்டேன்.

G. விவித்தா ரூபா, நடுக்குடா, பேசாலை.

சிறுவர் பொழிவில் பிரசுரமான நிறமற்ற,
'தானியேலும் அவரின் தோழர்களும்'
என்ற படத்திற்கு கலைநயத்தோடு நிறந்தீட்டி
அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் அதிஸ்ரசாலிகள்

செல்வி ஜெயம் ஜெனினா பிரான்ஸ்

A. B. மெரின் டிலக்ஷி
மன்/ புனித சவேரியார் பெண். தேசிய பாடசாலை மன்னார்.

G. அனுக்கிரகா டலிமா
கோவில் வீதி, தாழ்வுபாடு

B. சுலக்சனா
72.4, பெரியகமம், மன்னார்.

எம். டிலக்சனா
மன்/ புனித சவேரியார் பெண். தேசிய பாடசாலை மன்னார்.

த. பிரவீனா
பெரியகோமரசன்குளம், வவுனியா

த. மெரி மெர்வின்
தலைமன்னார் பியர், தலைமன்னார்.

யே. நொயேல்
மாவிலங்கேணி, அளவக்கை.

கலையருவி சமூக தொடர்பு அருட்பணி மையத்தினால் நடத்தப்படும் வங்காலைப்பங்கின் பரதநாட்டிய வகுப்பில் பங்கெடுக்கும் சிறுவர், சிறுமியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு [illegible] பெற்றால் – வாழ்வுதரும் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.